திராவிட நாடு
திராவிட முன்னேற்றக் கழக இரண்டாம் ஆண்டு மலர்
விலை 8 அணா
BALU BROS


இப்பொழுது தமிழ் நாடெங்கும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது
திரைக்கதை, வசனம்
மு. கருணாநிதி
டைரக்ஷன். N.S. கிருஷ்ணன்
பாடல்கள். உடுமலை நாராயண கவி
எனெஸ்கே பிலிம்ஸ்
மணமகள்
BALU BROS

திராவிடநாடு

தி. மு. க. இரண்டாம் ஆண்டு மலர்
23—9—51

காணிக்கை

ஆண்டுகள் இரண்டு உருண்டு ஓடி மறைந்துவிட்டன.

கிடந்து, தவழ்ந்து, எழுந்து, தளர்நடை நடந்து, இட்டுந் தொட்டும், உழந்தும் பிசைந்தும் மகிழும் குழவிபோல, தி. மு. க. திராவிடத்தின் மடி மீதும், தோள்மீதும் விளையாடுகிறது.

தாயின் முகம் மலர்கிறது! மலர்ச்சியைக் கண்டு 'அரசியல் காந்தாரிகள்' அலறுகிறார்கள்! ஆனால், குழந்தை சிரிப்பதுபோலவே, கழகமும் சிரிக்கிறது, அவர்களைக் கண்டு!

இரண்டாம் ஆண்டில் நாம் அடைந்த வெற்றிப் பட்டியலைப் புரட்டிடும்போழுது, இதயம் மகிழ்ச்சியால் விம்முகிறது! ஆட்சியாளரும், அரசியல் சூதாடிகளும், ஏவிவிட்ட துன்பங்களை எண்ணும்பொழுது, ஒருகணம் பெருமூச்சு, அவைகளைத் தூசுகளெனத் தள்ளிவிட்டு துள்ளி நடக்கும் இளங் காளையர் இலட்சக்கணக்கில் அணிவகுத்து நிற்பதைக் காணும் மறுகணம், பெருமூச்சு போய், புன்னகை பிறக்கிறது!

இந்த ஆண்டு சம்பவங்களைத் தொகுத்து, 'இன்ப அசை' போடுவதற்கு இந்த மலரை காணிக்கையாக்குகிறோம்.

நறுமணம் பரவி, மகிழ்ச்சி மகரந்தம் எல்லோர் இதய மலர்களிலும் போய் தங்கட்டும்! இலட்சியக் கனி கிடைக்க அதுவே வித்தாகட்டும்!

இன்றே புறப்படு!

உன் நாட்டைத் தாய்நாட்டை உன் முன்னோர் ஆண்ட
புனல் நாட்டைத் திராவிடத்தைச் செந்தமிழை ஓம்ப
முன்னேற்றப் பணிபுரிவாய்! உனைஎதிர்க்கும் தீய
முட்டுகளுக் கஞ்சாதே! பகை தூளாய்ப் போகும்!
மன்னாதி மன்னவனும் வந்தெதிர்க்க வொண்ணா
மறத்தோளும் வாள் நுனியும் மழுங்கிப்போ யிற்றா?
பொன்னான செயலிதுவே! திராவிடத்தை மீட்கப்
புலிப்போத்தே! குகைவிட்டுப் புறப்படடா இன்றே!

—வாணிதாசன்

கடல்கடந்தும்

திராவிடத்தின் எல்லாப் பகுதிகளிலும், தி. மு. க. பணியாற்றி வருகிறது! தமிழகத்தினைப் போலவே மலையாளத்திலும் மணம் பரப்பியுள்ளது. நாஞ்சில் மாவட்ட மாநாட்டின் பொழுது, கேரளப் பத்திரிகையாளர்கள் பலர் பொதுச் செயலாளரைக் கண்டு பேசினர். தம் தம் ஏடுகளில் எழுதினர். எழுத்தாளர்கள் நம்பக்கம் பேனாவைத் திருப்பியுள்ளனர். சட்டசபை அங்கத்தினர்கள் தம் வாயைத்திறந்துள்ளனர். கேரளர் நம்பக்கம் செவிகளை திருப்பி, விழிகளை அகலவிரித்துள்ளனர். மலையாளத்தில் பிரச்சாரம் செய்யவும் ஆற்றலுள்ள மனோகரன், நம் கருத்தைக் கேரளத்தாருக்குத்தளராது எடுத்துச் சொல்லும் ஜான் போன்றோர் கிடைத்துள்ளனர். ஆந்திரத்தினையும் நம் கழகம் தொட்டிருக்கிறது இந்த ஆண்டில்! சித்தூர் மாவட்டத்தில் தெலுங்குப் பேசுவோரிடையே நம் கருத்து பரவி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, திருத்தணி, பொதட்டூர்ப்பேட்டை, தாணிவாரகபுரம், சித்தூர், மத்தூர், அத்திமாஞ்சேரிப்பேட்டை, நல்லவாடன்பேட்டை, புத்தூர், பாகலா போன்ற இடங்களில் நம் கழகக் கிளையர் அழைத்தவண்ணமுள்ளனர். தெலுங்கில் பேசிடும், கோடீஸ்வரராவ், அனந்தராமன் போன்றோரை, இந்த ஆண்டு நம் அணிவகுப்புக்கு அழைத்து வந்திருக்கிறது. கன்னடத்திலும் நம் காலடிகள் பதியத்தான் செய்துள்ளோம். கன்னடத்தில் ஏழுகிளைக் கழகங்கள் உள்ளன.

வெளிமாகாணங்களிலும் நம் எண்ணம் பரவியிருக்கிறது. பம்பாய், ஆமதாபாத் போன்ற இடங்களில் நம் கிளைகள் தழைத்துள்ள சேதி நம்மை புளங்காகிதமடையச் செய்கிறது.

கடல் கடந்தும், நம் கருத்து சென்றுள்ளதை எண்ணி எண்ணி மகிழ்கிறோம். இலங்கையிலே நம் கிளைக்கழகங்கள் தழைத்து மத்திய கழகம் அமைக்கப்பட்டு நம் தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோரை அழைத்து அனுமதி மறுக்கப்பட்ட கொடுமை நடந்ததே. பர்மா திராவிட முன்னேற்றக் கழகம், இந்த ஆண்டு பணியாற்றிவருவதும், இரங்கூனில் கழக கட்டிடம் வாங்க ஏற்பாடு நடந்து வருவதும் கேட்க இனிய கீதம்போல் தித்திக்கும்!

அணிவகுப்பு

திராவிட மாணவ முன்னேற்றக் கழகங்கள், பள்ளிகள்தோறும், கல்லூரிகள் தவறாது சாட்சிபளிக்கின்றன. அதன் முழுவெற்றி சென்னையில் நடந்த தி. மா. மு. கழக மாநில மாநாட்டின்மூலம் நாடு உணர்ந்தது. சமூகநீதிப்போரிலே, மாணவ அணிவகுப்பு முழுப் பங்கேற்று பணியாற்றியது கண்டு நாம் மகிழ்ந்தோம். நாட்டோர் பாராட்டினர்.

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம், தனியமைப்பாயிருந்து பணியாற்றி வருகிறது. அம்பேத்காரின் இந்து சட்ட திருத்த மசோதாவுக்கு ஆதரவு தேடித்தரக்கூடிய பெண்களின் அணிவகுப்பே, நமது பெரும் பணிக்கு இனி தோல்வியில்லையென்பதைக் காட்டிவிட்டது.

நாடகப்பணி

நாட்டில் நாடகத்தால், நல்ல கருத்துகளைப் பரப்பிடும் முயற்சியிலே நம் கழகம் வழிகாட்டியாக இருந்திருக்கிறது. மாநாடுகளிலும், கழகப் பணிக்காக மற்றும் பல இடங்களில் நாம் நடத்திய 'சந்திரமோகன்' 'நீதிதேவன் மயக்கம்' தோழர் மு. கருணாநிதியின் 'வேதனைக் குரல்' 'வாழமுடியாதவர்கள்' பல நாடகங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டன.

தடைவிதித்த நாடகங்களை தடை நீக்கப்படாவிட்டால், மீறி நடத்துவோம் என்று நாம் தீர்மானித்துள்ளதைக்கண்டு ஆளவந்தார் அஞ்சுகிறார்கள். கதையைக் காட்டு, பேச்சை எழுதி நீட்டு என்று ஏதேதோ பேசுகிறார்கள்!

இந்த ஆண்டு நம் கருத்துள்ள நாடகங்கள் பல, பல இடங்களில் நடந்துள்ளன. அவைகளில் ஒருசில.

மறுமலர்ச்சி	சூறாவளி	நல்லதீர்ப்பு
அடிமை வாழ்வு	இலட்சியவாழ்வு	இலட்சியவீரன்
சரிந்தசாம்ராஜ்யம்	வீரபாண்டியன்	நல்வாழ்வு
மரண தண்டனை	எது பெரிது?	என் தங்கை
பலிபீடம்	அணைந்த விளக்கு	தொழிலாளி
மலைநாட்டுவீரன்	சிறைச்சாலை	புயல்.

இப்படி நாடகங்கள், நாம் நினைத்ததை, எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு விரிவாகவே, நம் கருத்து விதைகளை நாட்டோர் நெஞ்செனும் கழனியிலே தூவியுள்ளன. அவை கதிராகி, அறுவடைக்கேற்ற நல்நிலமாகிவிட்டதையும் நாம் காண்கிறோம்.

புது மாடி

தில்லை-வில்லாளன்

அந்த வீடு கலனாகிக் கிடந்தது.

சுவர்கள் இடிந்து கிடந்தன. ஓடுகள் சரிந்து வீழ்ந்திருந்தன.

சில இடங்களில் இருள் சூழ்ந்து கிடந்தது. அங்கு பெருச்சாளிகள், செங்கோல்செலுத்தின. வௌவால்கள் மந்திரிகளாயிருந்தன.

எங்கு திரும்பினாலும், புழுதி, குப்பை, கூளம்!

கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்திடுவார் இல்லை.

இடிந்த பகுதிகளை மீண்டும் எழுப்புவாரில்லை. இருக்கும் மிச்சப் பகுதியும் இடியாமல் காக்கவும் ஆள் இல்லை.

அந்த வீட்டின் பல சுவர்கள் மழையில் கரைந்தன. வெய்யிலில் உலர்ந்தன. பனியில் குளிர்ந்தன.

வீட்டின் வெளியறையிலே ஒருவர், அவருக்கோ வயதாகிவிட்டது. அவர்தான் அந்தப் பெரிய வீட்டில் இன்று இருப்பவர்.

அவர் ஏற்றி வைத்திடும் அகல் விளக்கே அந்த வீட்டிற்கு ஒளி செய்தது!

இடிந்ததைப் புதுப்பிக்க அவரால் முடியுமா? ஆகவே, அவர் தள்ளாடி நடந்தார். ஏதோ ஜனநடமாட்டம் இருக்கிறது அந்த வீட்டில் என்பதைக் காட்டியதோடு நின்றுவிட்டார்.

ஊரிலே பலர், அந்த வீட்டிலே பேய் இருக்கிறது என்று மிரட்டினார்கள்!

பிசாசு இந்தக் கிழத்தை அடித்துப் போடப் போகின்றது என்று அனுதாபத்தோடு எச்சரித்தனர்!

கிழவர் சிரித்தார். 'பேயாவது, பிசாசாவது, எனக்கு அதில் நம்பிக்கையில்லை' என்றார்.

அந்த வீட்டை, ஊராரும், ஊராள்வோரும் கேலி பேசாத நேரமில்லை.

குட்டிச்சுவர் கோமான் என்று கிழவரைக் கிண்டல் புரிந்தனர்.

சரிந்த மாளிகை தர்பார் என்பர், அவர் நடந்து செல்லும்பொழுது!

சஞ்சலப்பட்டதில்லை, அவர்! கேலிகளை, கிண்டல்களை, அலட்சியச் சிரிப்பால் ஒதுக்கித் தள்ளிடுவார்.

* * *

தூர தேசத்திலிருந்து வந்து சேர்ந்தான் மகன். அவன், அதுவரை, தன் பரம்பரைச் சொத்து, இப்படிப் பாழ்பட்டுக் கிடக்கும் என்று கனவில்கூட கருதியதில்லை.

வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான். விம்மினான். விதிர்ப்புற்றான். அழுதான்!

இடிந்த சுவர்கள் அவன் இதயத்தை இடித்துத் தள்ளிடுவது போலிருந்தன.

பாழடைந்த கூடம், அவனைப் பலநாள் அழும்படி செய்துவிட்டது.

செல்லரித்துப்போன உத்திரங்கள், தூண்கள் அவனைப் பார்த்துக் கேலி பேசின.

இருள் சூழ்ந்த அறைகளிலே, பெருச்சாளி தர்பாரைக் கண்டு வேதனைப்பட்டான்.

பயன்படுத்தாத இடங்களில் வௌவால்களின் ராஜ்யம் நடப்பதைப் பார்த்துப் பொருமினான்.

அவன் கண்கள் குளங்களாயின. கருத்துக்களோ புண்களாயின!

அவன் தினமும் பாழடைந்த வீட்டைப் பார்ப்பான். பிறகு, வயதான தந்தையைப் பார்ப்பான்.

அவரை அணுகுவான். அவரோ ஏதோ சிந்தனை செய்வார்.

"அப்பா நம் வீடா, இது!"

"ஆமடா!"

"ஏன் இப்படி......"

"பாழாகிக் கிடக்கிறதே என்று பார்க்கிறாயா? பொறுமைக்காரர்கள் இப்படி இடித்துத் தள்ளிவிட்டனர்"

"என்னால் இதைச் சகிக்கமுடியாதப்பா"

"சகிக்கக் கற்றுக்கொள்ளடா, இல்லாவிட்டால் சங்கடப்படுவாய்"

"இல்லை, இடிந்த வீட்டை, எழில் மாளிகையாக மாற்றுகிறேன். பாருங்கள்"

"முடியுமா?"

"முடியுமா என்பதல்ல, தேவையா என்பதுதான் இன்றைய கேள்வியப்பா. தேவை! ஆகவே செய்கிறேன்" என்றான்.

அன்றே தொடங்கினான், காளை, தன் பணியை!

ஓடினான், அலைந்தான், திரிந்தான்.

கட்டிடத்திற்கான சாமான்கள் வந்து சேர்ந்தன.

கற்கள் வண்டி வண்டியாகக் குவிந்தன. மரங்கள் வந்து இறங்கின. சிமெண்ட் மூட்டை மூட்டையாக வந்து மலைபோல் அடுக்கப்பட்டன.

ஆட்கள் வந்து சேர்ந்தனர். வேலை, தினமும் வேக வேகமாக நடந்துகொண்டிருந்தது.

அவனோ, இரவு, பகல் தூக்கமின்றி கட்டிடப் புதுப்பிப்பு வேலையிலேயே மூழ்கிக் கிடந்தான்.

கிழவர் பார்த்தார், பூரித்துப் போனார்.

இடிந்த சுவர்கள் கட்டப்பட்டன, சரிந்த கூரைகள் நிமிர்த்தப்பட்டன.

இருள் சூழ்ந்த இடங்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டன.

உறுப்பினர்கள்

60,000

பெருச்சாளிகள் ஓடின. வௌவால்கள் விரட்டப்பட்டன.

அதுமட்டுமா? கண்ணுக்குத் தெரியாமல் அங்கிருந்த தேள், பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் விரட்டப்பட்டன.

ஒட்டடை நீக்கப்பட்டது, குப்பை, கூளம் பெருக்கப்பட்டது!

இடிந்த வீட்டை, பல இன்னல்களைத் தாங்கிக்கொண்டு, எழில் மாளிகையாக்கினான்.

கேலி பேசியோர், அந்தி நேரப் பொழுதுபோக்கிற்கு இங்கு வரத் தொடங்கினர்.

பிசாசு, பேய் என்று பிதற்றியோர், இலட்சுமி களை, நல்ல மனை என்று தமது சுழல் நாக்கைச் சுற்ற விட்டனர்.

கிழவருக்கு எப்படி இருக்கும்? தாங்கமுடியாத மகிழ்ச்சி!

ஏன் இருக்காது? ஏதோ ஒரு அறையில், அகல் விளக்கடியில் கிடந்த அவருக்கு, அழகான அறை, கட்டில், மெத்தை, மின்சாரவிளக்கு, விசிறி, கூப்பிடும் மணி...... இப்படி அமைத்துக் கொடுத்தான், அவருக்கு!

மகன், தந்தைக்காற்றவேண்டியதை அவன் செய்தான்.

* * *

இடிந்த வீட்டில், இருளில் கிடந்த அவருக்கு, எழில் கொழிக்கும் இன்ப மாடத்திலிருப்பதை யுணர்ந்ததும் ஆசை வளர்ந்தது.

புதிய அறையொன்று கட்ட முயன்றார்.

மகனைக் கேட்கவில்லை. கேட்கக் கூடாதென்றே எண்ணினார்.

அவன் கேள்விப்பட்டான். கோபப்படவில்லை.

அறையைக் கட்ட கொத்தன் வந்தான்.

மகனுக்கு மன வருத்தம் ஏற்பட்டது.

பூஜை அறையொன்று கட்டி முடிக்கவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்.

ஊர், மீண்டும் தூற்ற ஆரம்பித்துவிட்டது.

பேய், பிசாசு குடியிருப்பதால் தான் குட்டிச்சுவராகி விட்டது என்று கூறியபொழுது, எனக்கு அதில் நம்பிக்கையில்லையென்றார் இந்த ஆசாமி, இப்பொழுது பூஜை அறை கட்டுகிறார்.

சாமியாவது, பூதமாவது, எல்லாம் நாமாக வைத்துக்கொள்வது என்று தத்துவார்த்தம் பேசினாரே இப்பொழுது சாமி கும்பிட அறை கட்டுகிறார். எல்லாம்சந்தர்ப்பமயம்!

ஓடி ஓடி அலைந்தான், மாளிகையாக்கினான். அவ்வளவு உழைப்பும் அந்த அறையால் அழிந்துவிட்டது!

இப்படி பேசினர். அவன் காதுகள் செவிடாகிவிடவில்லையே!

மகன் சிந்தித்தான், கண்ணீர் சிந்தினான்!

"பூஜை அறை கூடாதப்பா"

"பூஜை அறையென்ற பெயரால் ஒருபுதிய ஏற்பாடு! படமிருக்கும். படத்திற்குக்கீழே, திறந்தால்இரும்புப் பெட்டியிருக்கும். அதில் பணம் வைக்கலாம்"

"பணத்தைப் பதுக்க இந்தமுறை எனக்குப் பிடிக்கவில்லை"

"எனக்குப் பிடிக்கிறதே!"

அவர்கோபமடைந்தார். அவனோ கண்ணீர் சிந்தினான்.

"நான் உங்கள் பூஜை அறை திட்டத்தை எதிர்க்கிறேன்" என்றான்.

"பணத்தைப் பாதுகாக்கவேஇதனைச் செய்கிறேன்!"

"ஒப்பமுடியவில்லையே" என்றான்

"இது என்வீடு, என் விருப்பப்படி செய்வேன். இஷ்டமிருந்தால் இரு, இல்லாவிட்டால் போய்விடு" என்றார் அவர்.

அவன் திகைத்துப்போனான்.

அவன் நடந்தான், வெளியே!

இருள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டது.

கட்டிடம் கட்டும்பொழுது, அவனை விடாது உடனிருந்து பணியாற்றியோர் பலர் துயரக்கதைபேசினர். ஓரிருவர் தூண்டியும்விட்டனர். குத்திவிட்டு வேடிக்கை பார்த்தவரும் உண்டு!

அவன் செவிகளில் எதுவும் ஏறவில்லை.

ஊரிலே வதந்தியும், வம்புப்பேச்சும் நடந்துகொண்டிருந்தன.

பூஜை அறை கட்டப்பட்டது. தேவி படம் மாட்டப்பட்டது.

* * *

"நீங்கள் உண்மையிலேயே உழைப்பாளிகள் தானே?"

"அதோ அந்த அழகு மாளிகையைப் பார்த்தால் தெரியும்!"

"வீண் கதை பேசிடாதீர்கள்! பாழடைந்த வீட்டை, கட்டான மாளிகையாக்கித் தந்தீர்கள். அங்கே இருந்தும் வந்தீர்கள்! இனி, அவர் இருப்பார். அகல் விளக்குக்குப் பதில் மின்சார விளக்கிருக்கும்! ஆனால் பரந்து விரிந்த அந்த மாளிகையிலே என்ன நடமாட்டமிருக்கும்?"

"தேள் திருவிழா கொண்டாடும்! பெருச்சாளி, விருந்து நடத்தும்"

"இனி அந்தப் பழைய வீடு உங்கள் கவனத்திற்கு வரக் கூடாது. நாம் வீடற்றவர்களாகவே பிறந்தோம், வளர்ந்தோம் என்று எண்ணி, புதுவீடு கட்டவேண்டும்!"

கிளைக் கழகங்கள்

650

நமது முழக்கம்

பொதுக் கூட்டங்கள்

2473

கழக மாநாடுகள்

5

பொது மாநாடுகள்

8

"கட்டுவோம், அழகாக, பலமாக!"

"பேச்சில்லே, இனி—காரியம் — உம், இன்றே தொடங்குங்கள்"

இப்படிப் பேசினர், முதல் நாள்.

மறு நாளிலிருந்து புதிய கட்டிடத்தின் வேலே உருவாயிற்று.

அஸ்திவாரம் வெட்டப்பட்டது. அதற்கே பலபேர் போட்டியிட்டுக் கொண்டு வந்து வேலே செய்தனர்.

அடிப்படை போடப்பட்டது.

மேல் கட்டிடம் எழுப்புவதற்கு ஒவ்வொரு வேலேயை ஒவ்வொருவர் மேற்கொண்டனர்.

கட்டிடம் எழும்பத் தொடங்கிற்று.

ஊரார் தூபமிட்டனர், இரண்டு பக்கங்களிலும்!

அவன் தூண்டிலிலே சிக்கிடும் மீனுகவுமில்லே!

வலேயிலே சிக்கும் மானுகவுமில்லே!

தன் இச்சைப் போக்கிலே பறந்திடும் வானம்பாடியாகவே இருந்தான்.

கட்டிடம் வளரத் தொடங்கிற்று.

ஒவ்வொரு அறையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கட்டப்பெற்றது.

கூடம், தாழ்வாரம், வாயில், நுழைவு இடங்கள் எல்லாம் அலங்காரமாக மட்டுமல்ல, பலமாகவும் அமைக்கப்பட்டன.

சுவர்களுக்குச் செய்யப்பட்ட பூச்சு வேலேகள் பார்ப்போர் கண்களேக் கவரக்கூடியன.

வெளி வாயிலில் செய்யப்பட்ட சித்திர வேலேகள், கண்டவர்களே ஆச்சரியத்தில் அமிழ்த்தக்கூடியன!

கட்டிட அமைப்பு முறையே புதுவிதமானது — பலருக்கு வியப்பையே விருந்தாக்கக்கூடியது.

வேலே, வெகுதுரிதமாக நடந்தது.

பூஜை அறை விவகாரமே, இவர்கள் கவனத்திலிருந்து மறைந்துவிட்டது.

அவருக்கு மட்டும் உறுத்திக்கொண்டிருந்தது.

அகல் விளக்கிருந்த இடம், அவர் மறக்க முயன்ருலும், மறைக்க முடியாதபடி தெரியத்தானே செய்யும், சமயங்களில்!

இடிந்த வீடும், வௌவால் வட்டமிட்ட சப்தமும்,பெருச்சாளி ஓசையும் அவர் செவிகளில் ரீங்காரமிடத்தானே செய்யும்!

புதியவீட்டின்மீது அவர்பார்வை பாயும். பெருமூச்சு வரும்.

ஓராண்டு முடிந்தது. கட்டிடமும் முடிந்தது.

அவர்கள் தங்கள்உணர்ச்சியையே கற்களாக்கி, உழைப்பையே சேருக்கி, உற்சாகத்தை நீராக்கி, சுவர்களே எழுப்பி, எழுச்சி உத்திரங்களமைத்து, எண்ணச் சட்டங்களேப் பூட்டி, இலட்சியக் கூரை வேய்ந்தனர்.

வீடு முடிந்தது. உழைப்பின் பலன் புலனுகத் தொடங்கிற்று.

வீடெங்கும் ஒளி பரவிக் கிடந்தது.

விருந்து நடந்தது. விழா நடந்தது.

வீணையின் நாதம் கேட்டது! குயிலின் குரல் போல் இசையும் பிறந்தது!

கூத்தும், பேச்சும் குதூகலத்தோடு நடந்தன.

எங்கும் உற்சாகம், கொண்டாட்டம்!

புதுவீடு, புதுவீடு என்ற பெயர் போய், எல்லோரும் நம் வீடு, நம் வீடு என்று பேசத் தலேப்பட்டனர்.

நம் வீடு என்று உரிமை கொண்டாடுவோர் தொகை நாளும் வளரத் தொடங்கிற்று!

அது ஒரு கலேக் கூடமாயிற்று!

பகுத்தறிவு பரப்பும் பணி மனேயாயிற்று!

ஏடுகள் நிறைந்த கூடங்களாயின.

பாடல்கள் கேட்கும் இசை மேடைகளிருந்தன.

நாடகங்கள் நடிக்கும் அரங்கங்கள் இருந்தன.

அறிவுரை பகரும் அரிய மாடங்கள் இருந்தன.

அறப்போர் தொடுத்திடும் பாசறைகளும் உண்டு.

வீடு விரிந்திடத் தொடங்கிற்று.

தேவை அதிகரிக்க, திருப்திப்படுத்தும் நிலேயிலே அவர்கள் இருந்தார்கள்.

இரண்டாமாண்டு, அந்தவீட்டை மாடி வீடாக்கும் பணியிலே இறங்கினுன்.

தோழர்கள், புதிய உற்சாகத்துடன் மீண்டும் பணியாற்றினர்.

தளம் அமைக்கவே வெகு பாடுபட்டனர்.

இப்பொழுது ஊராரின் ஒத்துழைப்பு ஏராளமாகக் கிடைத்தது.

முன்னிருந்த வீட்டிலே இருந்த முடக்குவாத நோய் இப்பொழுதில்லே. யாரும் உரிமையுடன் உலவ முடிகிறது! நல்ல உரிமைக் காற்று வீசுகிறது!

அடக்குமுறை

குன்றத்தூர்
நாரணமங்கலம்
சித்தையன்கோட்டை
சின்னுளப்பட்டி
தென்தாமரைக்குளம்
வாகனேரி

நாடகங்கள்

★

11
சந்திர மோகன்

8
நீதிதேவன் மயக்கம்

4
ஓர் இரவு

4
வாழமுடியாதவர்கள்

1
வேதனேக்குரல்

நிரள் திரளாக ஊரார் அங்கு வரத் தொடங்கினர்.

மாடி கட்டிடும் மகத்தான பணி, மிக வெற்றிகரமாக நடந்தது.

ஊரிலே உள்ள சில குறும்பர்கள் மட்டும், மாடி இடிந்துவிடும், அடியோடு அழியப்போகிறார்கள் என்று பேசினர்.

அவரிடம் சென்று ஏசினர்.

மாடி வீடு கட்டி, பெரிய கொள்ளை நடத்துகிறார்கள் என்று பேசினர்.

ஏசல் முன்னணியும், ஏதும் செய்துவிடவில்லை.

* * *

மாடி அமைப்பதற்குள், ஊராள்வோர், புதுவித சட்டங்களியற்றி, புதுவீட்டை எப்படி எப்படிச் சிதைக்கலாமோ அத்தனைக்கும் வழி வகுத்தனர்.

வீடு கட்டிய பிறகு, அது சரியில்லை, இது சரியில்லையென்று குறை கூறினர்.

வீட்டு வரியை உயர்த்தப்போகிறேன் என்று மிரட்டினர்.

வீட்டிலுள்ளோர் மீது, வேண்டுமென்றே வம்பும், வழக்கும் பதிவு செய்து தொந்திரவு செய்தனர்.

சிலரை சிறையிலும் வைத்தனர்.

வேறு பலரை வேதனைப் படுகுழியில் தள்ளி வேடிக்கைப்பார்த்தனர்.

மிரட்டல் முன்னணியும் மண்ணைக் கவ்விற்று.

* * *

மாடி கட்டும்பொழுது, வேண்டிய உபகரணங்கள் கிடைக்காமல் செய்ய பொறாமைக்காரர்கள் என்னென்ன செய்தார்கள் தெரியுமா!

சூளைக்குசென்று சல் தராதீர்கள் என்றார்கள்.

மரந் தருவோரிடம், தராதே என்று மிரட்டினார்கள்.

இரும்பு வியாபாரியிடம் இரும்புச்சாமான்கள் தந்தால் உன் கடையை இடித்துவிடுவோம் என்றனர்.

எதிர்ப்பு முன்னணி நடத்தினர்.

எதுவும் பலிக்கவில்லை. இளித்தவாயர்கள் என்ற பட்டப் பெயரே, அவர்களுக்கு, இதனால் கிடைத்த வரவு!

* * *

மாடியும் கட்டி முடிந்தது, இரண்டாமாண்டில்.

அவன் முகத்திலே களிப்பு — அவர்கள் நெஞ்சிலே உறுதி!

இதனைக் கண்டு ஊரார் மெச்சுகின்றனர்.

அந்த மாடியிலே, உழைத்தவர்கள் கூடி, விருந்து நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அவன் அதற்கு மகத்தான முறையில் விருந்து நடத்த முயற்சி தொடங்கினான்.

அவர்களும் அப்படியே! ஊராரும் அதனை எதிர்பார்த்தே ஏங்கியிருந்தனர்.

மாடி வீடு கட்டியாயிற்று. மாடியிலே கூடி மகிழ்வோம் எனக் காத்திருந்தனர்.

★

ஷா சிந்திய முத்துக்கள்

துதிபாடுங் கூட்டத்தை உருவாக்குவதே அரசாங்கக் கலை.

* * *

மனிதன் புலியைக் கொன்றால் அது விளையாட்டுக்குச் செய்யும் வேட்டை. புலி மனிதனைக்கொன்றாலோ மிருகத்தனம். குற்றத்திற்கும், நீதிக்குமிடையே உள்ள தொடர்பு இதனைப் போன்றதே.

* * *

முட்டாள்கள் நிறைந்த தேசத்தில் அறிஞன் கடவுளாகிறான். எல்லோரும் அவனை வணங்குவார்கள். ஆனால் எவரும் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற மாட்டார்கள்.

* * *

அடிபட்டவன் உன்னைத் திருப்பி அடிக்காவிட்டால் அவனிடம் எச்சரிக்கையாக இரு. ஏனெனில் அவன் உன்னை மன்னிப்பதுமில்லை, நீ அவனை மறக்க முடிவதுமில்லை.

* * *

ஆகாயத்தில் ஆண்டவனைவைத்திருக்கும் மனிதனிடம் ஏமாந்து விடாதே!

★ புரட்சி ★

—வாணன்—

'எண்ணப் புரட்சி' வேண்டும். ஆனால் அரசியல் ரீதியாக அந்நிலை மக்களிடையே பரப்புவதென்பது எதிர்பார்க்கும் பலனை கொடுக்கும் என்று கூற முடியாது. உண்மையிலேயே விடுதலை அடைந்து, மதத்தின் தளையிலிருந்து விடுபட்டு முன்னேற்றப் பாதையில் நடக்கும் மனித சமுதாயத்தை, மனிதர்கள் தான் கொண்டு வரமுடியும். மதத்தின் அர்த்தமற்றத் தன்மைமையையும், பழங்கால எண்ணங்களின் உபயோகமற்ற நிலையையும் நன்கு உணர்ந்து முன்னேற்றக் கொள்கைகளின் அவசியத்தையும், விஞ்ஞான உலகின் அறைகூவலையும் உணர்ந்த பெரும்பான்மையானமனிதர்களால் தான் சமுதாயம் சீர் திருந்தும். இந்த நிலை ஏற்பட, பெரும்பான்மையான மக்கள் எண்ணப் புரட்சியின் வசப்பட அறிவுலகத்திற்கு அவர்கள் அழைத்துவரப் படவேண்டும். அப்படி அவர்களை அறிவுலகத்திற்கு அழைத்து வருவதுதான் சமுதாயத்தைசீர்திருத்தபுறப்பட்டவர்கள் ஒவ்வொருவருடைய வேலையும். மக்கள் அறிவுலகத்திற்கு அழைத்து வரப்பட்டால் பிறகு அவர்களே புரட்சி செய்து விடுவார்கள். பழைமையிலிருந்து விடுபட்டு சிந்திக்க ஆரம்பித்த மனிதர் கூட்டம் பின் இருண்ட உலத்திற்கு மறுபடியும் செல்லாது. ஆகவேதான் 'புரட்சி'க்குவேண்டியமுதல்தேவை பெரும் பான்மையான மக்கள் அறிவுலகத்திற்கு அழைத்து வரப்பட வேண்டும்.

இந்த அறிவுரையைத்தான் மனித வரலாறு நமக்கு நன்கு காண்பிக்கிறது. பிரஞ்சு, ரஷ்யப் புரட்சிகள் கற்பிக்கும் பாடங்கள் இவைகள் தான். பிரஞ்சு புரட்சி தோன்றுவதற்குக் காரணமாக இருந்த அருமையும், சமூகத்திலிருந்த ஏற்றத்தாழ்வுகளும், அது நடப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு, முன்னாலிருந்தே இருந்து வந்தன. மனிதனை நாயினும் கீழாய் நடத்திய பிரபுக்கள் பத்தாவது நூற்றாண்டிலேயே வாழ்ந்தனர். ஆனால் எல்லாவித கொடுமைகளும் அரசனுடையதெய்வீகத் தன்மையில் மறைக்கப் பட்டிருந்தன. கிறிஸ்துவமதத்தை அதிகமாக அனுபவித்து வந்த மக்கள், அரசனையோ, ஆண்டவனையோ கேள்வி கேட்பது ஆண்டவனுக்கு துரோகம் செய்வதற்கொப்பும் என்று எண்ணினர். ஆண்டவன் படைத்தது உலகம்; அதில் நம்மை அடிமையாக அவனே படைத்திருக்கிறான்; அப்படியிருக்கும் பொழுது நாம் இதில் குறைகாணுவதே தவறு, பாபம் என்று எண்ணினான், பிரஞ்சு அடிமை. 'உலகில் நான் ஏன் பாவியாய்ப்பிறந்தேன், என்றுபாடினானே தவிர, உலகில் மற்றவன் எப்படி பணக்காரனானன் என்பதை சிந்திக்கவேயில்லை.

கிட்டத்தட்ட 1500 ஆண்டுகள் அரியாசனத்தில் வீற்றிருந்த கிறிஸ்துவ மதத்தை, நவீன காலபிறப்பு—மறுமலர்ச்சி இயக்கம்—பதினைந்தாவது நூற்றாண்டில் கீழே தள்ளியது. மனிதன் முன்னேற்றப் பாதையில் நடக்க ஆரம்பித்தான். ஒரு சிலர் தான் ஆரம்பத்தில் தைரியமாக புரட்சி என்று கூறினர். கிட்டத்தட்ட நானூறு ஆண்டுகள் கழித்து தான் புரட்சி செயலுருவில் வந்தது! அதுவரை 'புரட்சி'கீதம் மக்களுக்கு பாடப் பட்டு வந்தது. ஒரு தடவை பழைமையிலிருந்து விடுபட்ட மக்கள் கூட்டம் பிறகு விழித்தது, வேகத்துடன் 'புரட்சி' நடத்த ஆரம்பித்து விட்டது!

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில், பிரஞ்சு அறிவாளிகள் சிலர் மக்களை அறிவுலகிற்கு அழைத்து வர ஆசைப்பட்டனர். மக்களுக்கு வளர்ந்துவரும் விஞ்ஞானத்தைப்பற்றிய அறிவு வரும் வகையில் பிரச்சாரம் செய்தனர். இந்த நோக்கத்துடனேயே 'அறிவுக் களஞ்சியம்' ஒன்றை தயார் செய்து மக்களை படிக்கச் சொன்னார்கள். இதை ஆளும் வர்க்கம் எதிர்த்தது. மடாதிபதிகள் 'பைபிளை'த் தவிர வேறு நூல் மக்களிடையே பரவவிடக் கூடாது என்றனர். ஆதிக்கக் காரர்கள் அத்தனை பேருடைய அடக்கு முறைக்கும் எதிராக அந்நூல்பரவியது. அந்நூலைப் படித்தவர் யாவரும் அறிவொளி பெற்றனர். உலகம் நம்முடையது, மனிதன் நினைத்தால் மனிதவாழ்வையே திருத்தியமைக்க முடியும்; மனிதனுக்கு, மனிதன் தான் தலைவன், ஆண்டவனல்ல என்பதை பிரஞ்சு மக்கள் உணர்ந்தனர். எண்ணத்திலே தெளிவு கொண்டனர். புரட்சி உலகிற்கு வந்தனர். இந்த அரிய மாறுதல்கள் ஏற்பட காரணமாயிருந்தவர்கள் அழிக்கப் பட்டார்கள். இருந்த போதிலும் அவர்கள் கொளுத்திய தீ பரவி ஆதிக்கக்காரர்களை அழித்தது. 1793—ல் பிரஞ்சு மக்கள் 'மனிதன்' நினைத்தால் சமூகத்தின் சாயலையே மாற்ற முடியும், அதற்கு ஆண்டவன் தேவையில்லை என்பதை நிரூபித்தனர்.

மனித வரலாற்றின் முக்கியக் கட்டங்களான இந்த இரண்டு புரட்சிகளும் நமக்கு நன்கு கற்பிக்கும் பாடம், மக்கள் அறிவுலகத்திற்கு அழைத்து வந்த பின்புதான் புரட்சி வரும், புது வாழ்வு மலரும்!

அறப்போர்

'ஆரிய மாயை' படித்தனர்
144 தடையை மீறினர்
கருப்புக்கொடி காட்டினர்
அபராதம் கட்ட மறுத்தனர்
விலங்கிடப்பட்டனர்
சிறை சென்றனர்
தடியடிபட்டனர்
துப்பாக்கி முனையில் நின்றனர்

மாவட்டக் கழகங்கள்

17

2ம் ஆண்டு காலண்டர்

1950-51

1950

செப்டம்பர்

1 ‘பிரிவினை வாரங் கொண்டாடுக’ என்று பிரச்சாரக்குழுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., விடுத்த வேண்டுகோள்.

2 சேலங் கல்லூரி பிரின்ஸ்பால் இராமசாமி மறைவு குறித்து தி. மு. மா. க. பொதுச் செயலாளர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. அனுதாப அறிக்கை.

3 செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டுச் செயற்குழுக் கூட்டம் காஞ்சி ‘திராவிடநாடு’ நிலையத்தில் நடந்தது.

சென்னை மாவட்டச் செயற்குழு சென்னை, தங்கசாலை தலைமை நிலையக்கட்டிடத்தில் கூடிற்று. சென்னைக்கு வரும் திவாகருக்கு கருப்புக்கொடி காட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

4 திவாகர் கருப்புக்கொடிக்கு முன்னேற்பாடு.

5 திவாகர் கருப்புக்கொடி நிகழ்ச்சியை விளக்கிடும் ‘திராவிடநாடு’ தனிமலர் கொண்டுவர முடிவு.

6 பொதுச் செயலாளர் சி. என். ஏ. சென்னை சென்று, திவாகர் கருப்புக்கொடி ஏற்பாடுகளை நேரில் கண்டார். ‘அன்பழைப்பு’ அறிக்கை.

7 சென்னை, சேப்பாக்கம் பெல்ஸ்ரோட் அருகில் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை தலைமையில் சி. என். ஏ. மு. கருணாநிதி, ஈ. வே. கி. சம்பத் ‘கோவில்பட்டி தீர்மானங்கள்’ குறித்துப்பேசினர்.

8 சென்னை தங்கசாலை தலைமை நிலையத்தில், செயல் வீரர்கள் அனைவரும் கூடினர். நாட்டின்பலஇடங்களிலிருந்தும் முன்னணி வீரர்கள்வந்திருந்தனர்.

9 சென்னை தியாகராயர்நகர் இந்திப் பிரச்சாரப் பள்ளிப் பட்டமளிப்பு விழாவிற்கு வந்த திவாகருக்குக் கருப்புக்கொடி காட்டினர். ஆர்வமும், ஒழுங்கும்கைகோர்த்திடபணியாற்றினர். பிறகு கவர்ன்மெண்ட் மாளிகையிலும் ஆயிரக்கணக்கானவர் கருப்புக்கொடி காட்டினர்.

10 காஞ்சி வரதராசப்பெருமாள் கோவிலருகில் திவாகருக்குக் கருப்புக்கொடி வரவேற்புநடந்தது

11 காஞ்சி பகுத்தறிவு மன்ற சார்பில், மு. கருணாநிதி, அரங்கண்ணல், தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) பேசினர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருச்சி சிறையிலிருந்து விடுதலை.

12 சென்னை கருப்புக்கொடி நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிய தோழர்களுக்கு செயலாளர் கோவிந்தசாமி நன்றியறிவிப்பு.

13 சென்னை ராயப்பேட்டையில், சி. என். ஏ. என். வி. நடராசன். ஈ. வே. கி. சம்பத், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி பேசினர்.

14 பொன்மலைத் திராவிட வாலிபர் கழகத் தோட்ட வழக்கு விசாரணை திருவரம்பூரில் நடந்தது.

15 குறிஞ்சிப்பாடியில் கழகப் பிரச்சாரக் குழுவில் ஒருவரும் சட்டதிட்டக் குழுவில் அங்கத்தினரும், முன்னணி வீரருமான இரெ. இளம்வழுதி எம். ஏ. பி. எல். விசாலாட்சியம்மை திருமணம்.

16 தி. மு. க. முதலாண்டு நிறைவு.

17 திராவிடநாடு நாள். நாடெங்கும், வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதுவரை கிளைக் கழகங்கள் எண்ணிக்கை 505.

18 ‘ஆரியமாயை’ நூல் எழுதியமைக்காக, பொதுச் செயலாளர் சி. என். ஏ. வுக்கு ரூ 700 அபராதமும், தவறினால் ஆறுமாத சிறைவாசமும், நூலை வெளியிட்ட ‘திராவிடப்பண்ணை’ கண்ணப்பருக்கு ரூ 500 அபராதமும், தவறினால் 4 மாத சிறைவாசமும் அளிக்கப்பட்டது. ‘பொன்மொழிகள்’ எழுதியமைக்காக, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ராவுக்கும், நூல் வெளியிட்ட டி. எம். முத்துவுக்கும் அதேவித தண்டனை அளிக்கப்பட்டது.

அன்று மாலை திருச்சியில் கண்டனக் கூட்டம் திருச்சி சாம்பு தலைமையில் இரா. நெடுஞ்செழி

யன் எம். ஏ. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி டி. கே. சீனுவாசன்; ஈ. வே. கி. சம்பத் எம்.எஸ். சிவசாமி பேசினர்.

19 காஞ்சியில் கண்டனம்—கடையடைப்பு. காலையில் மாபெரும் கண்டன ஊர்வலம். மாலையில் ஆடிசன் பேட்டையில் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி பேசினர்.

சென்னை குடந்தை, தேசமுகிப்பேட்டை, அருப்புக்கோட்டை, அரியலூர், தூத்துக்குடி, கோவில்பட்டி, திண்டுக்கல், மணப்பாறை இப்படி திராவிடமெங்கும் கண்டனம்.

20 மத்திய செயற்குழுவினர், பொதுச் செயலாளர் சிறையிலிருக்கும்பொழுது நம்கடமையைவிளக்கி வேண்டுகோள்.

21 சிவகெங்கை மாநாட்டு அமைப்பாளர்கள் திருச்சி வந்தனர்.

22 சென்னையில் கான்ரான்ஸ்மித் மைதானத்தில், எஸ். வி. லிங்கம் தலைமையில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., மதியழகன் பி. ஏ., கே. ஆர். ராமசாமி, ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

23 சேலத்தில் கண்டனப் பொதுக்கூட்டம்.

24 'சென்று வருகிறேன்'—பொதுச் செயலாளர் அறிக்கை, 'திராவிட நாட்டில்.'

25 காஞ்சியிலிருந்து ஈழத்தடிகள் திருச்சிக்கு சி. என். ஏ. வைச் சந்திக்கச் சென்றார்.

26 சென்னையில் 'ஆரியமாயை' 'காந்தியார் சாந்தியடைய' நூல்களைப் படித்தமைக்காக கழகத் தோழர்கள் கைது.

27 திருவாரூரில் 144 தடை விதிக்கப்பட்டது.

28 சர்க்காரின் விசேஷ அதிகாரத்தின் பேரில், சி. என். ஏ., பெரியார் விடுதலை.

திருச்சியில் என். சங்கரன் தலைமையில் வரவேற்பும் பாராட்டும்.

29 அதிராம்பட்டினத்திலும், தஞ்சையிலும் 144 தடை விதிக்கப்பட்டது.

30 சிவகெங்கையில் இராமநாதபுர மாவட்ட தி.மு.க மாநாடு. தலைவர் என்.வி. நடராசன் துவக்கியவர், எம். எஸ். கனகராசன்.

அக்டோபர்

1 சிவகெங்கை மாநாட்டு இரண்டாம்நாள் நிகழ்ச்சி கழகத்திற்கு 144 தடையுத்தரவு போட்டால் மீறுவதென முடிவு செய்யப்பட்டது.

2 பல இடங்களில், ரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி போர்டுகள் அழிக்கப்பட்டன.

3 மதுரை அனுப்பானடியில் தி.மு. கழக நிதிக்காக 'சந்திரமோகன்' நாடகம் — நல்ல மழையில், நள்ளிரவில்!

4 என். எஸ். இளங்கோ, தமக்களிக்கப்பட்ட ஊர்ப் பாதுகாப்புக் கமிட்டித் தலைவர் பதவியை, சர்க்காரின் அடக்குமுறைப் போக்கை எதிர்ப்பதன் அறிகுறியாக, ராஜினாமா செய்தார்.

5 காஞ்சியில் சி.என்.ஏ வுக்கு வரவேற்பும் பாராட்டும்.

6 சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் சி. என். ஏ. வுக்கு அமோக வரவேற்பு.

7 சென்னையில் காஞ்சி மணிமொழியார் தலைமையில் சி. என். ஏ. வுக்கு பாராட்டுக்கூட்டம்.

8 சென்னை நுங்கம்பாக்கத்தில் 'நிலவு' ஆசிரியர் பூ. கணேசன் தலைமையில் பாராட்டுக்கூட்டம்.

9 'சென்றேன், வந்தேன்'—சி. என். ஏ. அறிக்கை.

10 பொதுச் செயலாளர் சி. என். ஏ.வை, வடநாட்டு இந்தி நல்லெண்ணத் தூதுகோஷ்டி காரியதரிசி சந்திரகாந்தர் சந்தித்தார்.

'திராவிடநாடு' தினசரிக்கு ரூ 1000 ஜாமீன்கேட்கப்பட்டது.

11 காஞ்சி திராவிடநாடு நிலையத்தில் இந்தி நல்லெண்ணத் தூதுகோஷ்டியினர் சந்தித்தனர். சென்னை மத்திய கழக நிலையத்தில் மாணவர் மாநாட்டு வரவேற்புக் கழக அமைப்புக் கூட்டம்.

12 23ல் சென்னையில் நடைபெறும் மத்திய செயற்குழுக்கூட்ட அழைப்பு.

13 கருணாநிதி, கண்ணதாசன் வடார்க்காடு மாவட்ட சுற்றுப் பிரயாணத் துவக்கம்.

14 ஆம்பூரில் மாபெரும் பொதுக்கூட்டம்.

15 காஞ்சியில் சஞ்சீவி தலைமையில் டி. கே. சீனுவாசன், காஞ்சி கல்யாணசுந்தரம். நல்லமழையிலே பேசினர். மக்கள் கலையவில்லை.

16 மூன்றாம் முறையாக 'சவுக்கடி' வழக்கு எடுக்கப்பட்டது.

17 சென்னை வண்ணையம்பதியில் 'ஆரியமாயை' படித்தமைக்காக சிறைசென்ற தோழர்களுக்கு பாராட்டு.

18 சென்னையில் மாணவமாநாட்டு வரவேற்புக் குழுக்கூட்டம்.

19 சென்னை மாவட்டக் கழக நிதிக்காக நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி 'ஓர் இரவு' நாடகம்

20 நடத்தி ரூ 3139 நிதிதந்தார். அதைக்கொண்டு ஒலிபெருக்கி வாங்கப்பட்டது.

21 ஆர்க்காட்டில் இலட்ச மக்கள் கூடினர். சி.என்.ஏ சொற்பொழி வாற்றினர்.

22 கோவையில் கட்டட நிதிக்காக சி. என். ஏ. விடம் ரூ 4000 அளிக்கப்பட்டது.

23 சென்னையில் மத்திய செயற்குழுக்கூட்டம். 144 தடையை எங்கு விதித்தாலும் மீறும்படி, கழகத் தோழர்களுக்கு தாக்கீது.

24 சென்னையில் ஆச்சாரியாருக்கு கோட்டை ஸ்டேஷனில் கருப்புக்கொடி காட்டினர். நல்லதடியடி—பலர் படுகாயமடைந்தனர். கா. அப்பாதுரையார் பலமாகத் தாக்கப்பட்டார். மாலை ராயப்பேட்டையிலும் கைது. 1000 பேர் காயமடைந்தனர்......

60 பேருக்குமேல் கைது — 34 பேர் சிறைசென்றனர்.

25 சென்னை மத்திய கழக கட்டிடமே, அடிபட்டோரின் மருத்துவ மனையாக காட்சியளித்தது.

26 குன்றத்தூரில் எட்டுமுறை சுட்டனர். என். வி. நடராசன், பாலசுந்திரம் உட்பட 27 பேர் கைது. 48 மணி நேர ஊரடங்குச் சட்டம்.

27 காஞ்சியிலிருந்து, ஈழத்தடிகள், புட்டாசாமி, கணபதி, தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) குன்றத்தூர், சைதாப்பேட்டை முதலிய இடங்களுக்குச் சென்று குன்றத்தூர் நிலைமைகளை அறிந்துவந்தனர்.

28 புதுக்கோட்டையில், அண்ணா படிப்பக உதவி நிதிக்காக, 'பகுத்தறிவின் பரிசு' என்னும் நாடகம் மு. கருணாநிதி நடத்தினர்.

29 குன்றத்தூர் கொடுமையைப்பற்றி பொதுச் செயலாளர் அறிக்கை.

30 குன்றத்தூர் வழக்கில்சிக்கியதோழர்களை, சைதாப்பேட்டையில், சென்னையிலிருந்தும், காஞ்சியிலிருந்தும் தோழர்கள் கண்டு சென்றனர்.

31 ஆசைத்தம்பி அப்பீல் வழக்குநிதிக்கு ரூ 513-2-0 அன்றுவரை என கே. எஸ். எஸ். அய்யாச்சாமி கணக்கு.

நவம்பர்

1 குன்றத்தூர் எம். நடராசனை நள்ளிரவில் கைது செய்தனர்.

2 ஸ்ரீவைகுண்டத்தில் சி. என். ஏ. கே. ஆர். ராமசாமி பேசினர்.

3 சென்னையில் காட்கினுக்குக் கருப்புக்கொடி காட்ட முன்னேற்பாடு.

4 சென்னைக்கு காட்கில் வரவில்லை

5 காஞ்சியில் ஈ. வே. கி. சம்பத் சொற்பொழிவு.

6 ஆச்சாரியாருக்கு சென்னையில் கருப்புக்கொடி காட்டிய 34 தோழர்களின் வழக்கு.

7 தொடர்ந்து விசாரணை நடந்தது.

8. சென்னை, செயிண்ட் மேரி மண்டபத்தில் மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு. தலைவர்: சத்தியேந்திரன் பி. ஏ., பி. எல். துவக்கியவர்: சி. என். ஏ.

9 திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநிலக் குழு அமைக்கப்பட்டது.

10 காஞ்சி மாநாடு கழகத்தோழர்களைக் கண்டு பேசினர். சி. என். ஏ.

11 சென்னை மூன்றும் வட்டக் கழகக் கமிட்டிக் கூட்டம்.

12 காஞ்சி அறிவு வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது.

13 குன்றத்தூர் கொடுமையை எதிர்த்து குன்றத்தூர் மக்கள் மகஜர்.

14 குன்றத்தூர் கழகத் தோழர்கள் விலங்கிடப்பட்டு வீதி வழியே அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஈ. வே. கி. சம்பத் வடார்க்காடு மாவட்டச் சுற்றுப் பிரயாணத் தொடக்கம்.

15 செங்கத்தில் ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

16 வந்தவாசியில் சம்பத், தில்லை—வில்லாளன் மற்றும் பலர் பேசினர்.

17 ஆரணியில் ஈ. வே. கி. சம்பத், போளூர் சுப்பிரமணியம் பேசினர்.

18 மதுரைக்கு மகதாப் வருவதாக அறிவிக்கப்பட்டு, கழகத் தோழர்கள் கருப்புக்கொடி காட்ட ஆயத்தமுடனிருந்து மந்திரி வரவில்லை.

சென்னை சிறைகோட்டத்தில், ஆச்சாரியார் கருப்புக்கொடி நிகழ்ச்சியில் கலந்து சிறைசென்ற தோழர்களுக்கு வரவேற்பு.

19 வாணியம்பாடியில் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவு.

20 காஞ்சியில் சிறைசென்ற கே. டி. எஸ். மணி, வி. பி. சிவம் ஆகியோருக்கு வரவேற்பு. சி. என். ஏ. சொற்பொழிவாற்றினர்.

21 வடார்க்காடு மாவட்டச் சுற்றுப்பிரயாண முடிவு. ஈ. வே. கி. சம்பத் நன்றியுரை.

22 ஆசைத்தம்பிக்கு மொட்டை யடிக்கவில்லையென சர்க்கார் அறிக்கை.

23 மேலூரில் எம். அய்யாச்சாமி தலைமையில் காஞ்சி கல்யாணசுந்தம் சொற்பொழிவு.

24 'சவுக்கடி' வழக்கு.

25 ஆசைத்தம்பி, சர்க்கார் அறிக்கையை மறுத்து விளக்கம் விடுத்தார்.

26 பொள்ளாச்சிப் பீடித் தொழிலாளர் மாநாட்டில் ஆசைத்தம்பி, சிற்றரசு, கனகராசன் சொற்பொழிவு.

27 திருச்சியை அடுத்த நாரணமங்கலத்தில் 144 தடையுத்தரவை வானமாமலை தலைமையில் சண்பகராசன், விஜயகோபால், ஆதிமூலம், வடிவேலு, மருதமுத்து, அமராவதி மீறினர்.

28 வத்தலகுண்டில் முத்து தலைமையில் காஞ்சி கலியாணசுந்தரம் பேசினர்.

29 ஆலங்குடியில் தி. மு. க. சார்பில் அழகிரிசாமி வாசகசாலை திறக்கப்பட்டது.

30 இராமநாதபுரத்தில் எம். எஸ். ராமசாமி தலைமையில் ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

டிசம்பர்

1 சென்னை கிண்டி இன்ஜினியரிங் கல்லூரியில் சி. என். ஏ. பேச்சு.

2 திருவண்ணாமலையில், தி. மு. க. நிதிக்காக நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் 'ஓர் இரவு' நாடகம்.

3 சென்னையில் 'வருங்கால வீரன்' நாடகத்திற்கு சி. என். ஏ. தலைமை வகித்தார்.

4 சங்கரநயினார் கோவிலில் திராவிட முன்னேற்றக் கழகத் திறப்பு விழா.

5 குன்றத்தூர் வழக்கு நிதிபற்றி சி. என். ஏ. அறிக்கை.

6 சென்னையில், சிறைசென்ற தோழர்களை பாராட்டி மு. கருணாநிதி, ஈ. வே. கி. சம்பத், என். வி. நடராசன் பேசினர்.

7 நாரணமங்கலத் தோழர்களுக்கு மூன்று மாத தண்டனை.

8 சென்னை, 'வான்கார்ட்' அச்சகத்தில் காகித கட்டுகளைக் கைப்பற்றினர்.

9 குன்றத்தூர் வழக்கு நிதிக்காக வாலாஜாபாத்தில் மு. கருணாநிதியின் 'வேதனைக் குரல்' நாடகம். வழக்கு நிதிக்கு ரூ. 1000, செங்கற்பட்டு மாவட்டக் கழகத்திற்கு ரூ. 500 அளிக்கப்பட்டது.

10 மதுராந்தகத்தில் சி. என். ஏ. தில்லை-வில்லாளன், அழகரசு சொற்பொழிவாற்றினர்.

11 புளியங்குடியில், எம். எஸ் இராமசாமி, திராவிடமணி பேசினர்.

12 கிழப்பாவூரில் எம். எஸ். ராமசாமி, திராவிடமணி நடராசன் பேசினர்.

13 திருவத்திபுரம் கோவிந்தன், சி. என். ஏ.வைக் கண்டு பேசினர்.

14 காமய்யக் கவுண்டன்பட்டியில் நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினர்.

15 கண்டவராயன்பட்டியில் நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினர்.

16 சொக்கநாதபுரத்திலும் நெடுஞ்செழியன் எம். ஏ. சொற்பொழிவு.

17 சென்னையில் திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது.

18 சின்னசேலத்தில் ஈ. வே. கி. சம்பத், ஈரோடு அப்பாவு பேசினர்.

19 காஞ்சி மாநாட்டுக் காரியங்களை சி.என்.ஏ. நேரில் கண்டார்.

20 செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டுத் தொண்டர் படைக் கூட்டம்.

21 திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத் துவக்க விழா அமைப்புக் கூட்டம்.

22 காஞ்சிக்கு, பல ஊர்களிலிருந்து தோழர்கள் வந்த வண்ணமிருந்தனர்.

23 | செங்கற்பட்டு மாவட்ட மாநாடு.
24 | தலைவர் : சிற்றரசு திறப்பாளர் : ஆசைத்தம்பி.

25 நாஞ்சில் மாவட்டத்திலிருந்து மாநாடு சம்மந்தமாக, மதியழகன் வந்து பேசினர்.

26 காஞ்சி மாநாட்டு வரவு—செலவு கணக்கு சோதனைக் களிக்கப்பட்டது.

27 நடிக நண்பர்கள் நாகர்கோயிலுக்குப் புறப்பட்டனர்.

28 நாகர்கோயில் பிரயாணம்.

29 | நாஞ்சில் மாவட்ட மாநாடு.
30 | தலைவர்: இரெ. இளம்வழுதி துவக்கியவர்: என். எஸ். இளங்கோ.

31 தோழர்கள் கன்னியாகுமரிக்குச் சென்றனர்.

1951

ஜனவரி

1 மதுரையில் முத்து தலைமையில் திராவிட மாணவர் கூட்டம்.

2 கிழப்பழுவூரில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினர்.

3 அலங்காநல்லூரில் நல்ல கூட்டம். நெடுஞ்செழியன் எம். ஏ. நீண்ட நேரம் பேசினர்.

4 நாரணமங்கலத்தில் சிறை சென்ற தோழர்களின் பெற்றோர்களை சி.என்.ஏ பார்த்துப் பேசினர்.

5 சென்னை வண்ணாரப் பேட்டையில் ஜீவரத்தினம், சத்தியவாணிமுத்து பேசினர்.

6 திண்டிவனத்தில் நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினர்.

7 திருவாரூர் 'அழகிரி மாளிகை' நிதிக்காக, கலைவாணர் என். எஸ். கே. வின் "கிந்தனார்" காலட்சேபம்.

அரிகிருஷ்ண மகதாபுக்கு சென்னையில் கருப்புக் கொடி. காஞ்சி. மணிமொழியார் தலைமையில் கோவிந்தசாமி, மணிமொழியார், பஞ்சாட்சரம் கைது.

8 நாரணமங்கலம் தோழர்களை சி. என். ஏ. புட்டாசாமி, சாம்பு, முத்துகிருஷ்ணன் ஆகியோர் சிறையில் சந்தித்தனர்.

9 கோவையில் மகதாப்புக்கு கருப்புக்கொடி காட்டினர். சுவரொட்டி ஒட்டியதற்காக கோவையில் ராயப்பன், அங்கமுத்து, சுந்தரம் கோவிந்தராசு. திருச்சியில் அர்பில் தர்மலிங்கப் கைது.

10 திருச்சி சிந்தாமணிப் பாலத்திற்கருகில் மகதாப்புக்கு கருப்புக் கொடி. டி. வி. முத்துகிருஷ்ணன், எம். எஸ். மணி கைது. தங்கவேல் கால் முறிந்தது.

குளித்தலையில் கருப்புக்கொடி, எட்டுபேர் சிறை சென்றனர்.

புத்தூர் பாண்டியன், தங்கையன் துண்டு வெளியீடுகள் கொடுத்தற்காக கைது.

11 சேலம் சித்தையன் நெசவாளர் போர் காரணமாக கைது.

திண்டுக்கல்லில் மகதாபுக்கு கருப்புக்கொடி. பலர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

12 மதுரையில் மகதாப்புக்கு கருப்புக் கொடி. காஞ்சி. கல்யாணசுந்தரம், இன்னும் முதல் நாள் 160 பேர், மறுநாள் 43 பேர் கைது. 32 பேருக்கு தண்டனை.

13 மதுரையில் 46 பேர் விடுதலையடைந்தனர்.

14 தஞ்சை மாவட்டத்தில் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ சுற்றுப் பிரயாணம்.

15 பொதுச் செயலாளர், கருப்புக் கொடி நிகழ்ச்சி பற்றிய அறிக்கை.

16 ஆம்பூரில் இராமாமிர்தத்தம்மையார் சொற்பொழிவு.

17 பேட்டைப்பாளையத்தில் கருணாநிதி, என். எஸ் இளங்கோ சொற்பொழிவு.

18 மதுரையில் சிறைமீண்ட தோழர்களுக்கு வரவேற்பு.

19 குன்றத்தூரில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., என். வி. நடராசன் சொற்பொழிவு.

20 சென்னை ராயபுரத்தில் மா. இளஞ்செழியன் பேசினர்.

21 பெண்கள் முன்னேற்றக் கழகம் துவக்கப் பட்டது.

22 வேலூர் பொதுக் கூட்டத்தில் வேலன் சொற்பொழிவு.

23 திருத்தணியில் தி. மு. க. பொதுக்கூட்டம். ஆந்திரர் ஆதரவு காட்டினர்.

24 சமூகநீதி மாநாடு சம்மந்தமாக இளமுருகு பொற்செல்வியார் சி. என். ஏ.வை சந்தித்தார்.

25 பட்டுக்கோட்டையில் என். எஸ். இளங்கோ கைது.

தஞ்சையில் ஏ. வி. பி. பதி, பெத்தண்ணன், எம். எம். நடராசன், எஸ். எஸ். மணி, சோமு கைது.

26 திருவையாற்றில் கருப்புக்கொடி நிகழ்ச்சி அமைதியான முறையில், நடந்தது.

27 சென்னை நுங்கம்பாக்கத்தில் ஜீவரத்தினம், சத்தியவாணிமுத்து பேசினர்.

28 பெரியகுளத்தில் சமூக நீதி மாநாடு—தலைவர்: நாரண துரைக்கண்ணன்.

29 சென்னை சாந்தோம் உயர்நிலைப்பள்ளியில் கா. அப்பாதுரை, கே. ஏ. மதியழகன் சொற்பொழிவாற்றினர்.

30 தஞ்சை மாவட்ட சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாக நடத்தியவர்களுக்கு மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ நன்றியுரை.

31 சென்னை காசிவிசுவநாதர் கோவில் மைதானத்தில் கா. அப்பாதுரை, ஜீவரத்தினம் பேச்சுரிமைக்காக கைதாயினர்.

பிப்ரவரி

1 முன்ஷிக்கு சென்னையில் கருப்புக் கொடி. முனுசாமி, கோவிந்தசாமி, என். வி. நடராசன், ரத்தினம், எப். ஆர். பாண்டியன், முத்துச்சாமி, செல்லக்கண்ணம்மாள் கைது.

2 கைதானோர் வழக்கு.

3 மங்கநல்லூரில், தி. மு. க. சார்பில் கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி ஆகியோருக்கு விருந்து.

4 செயங்கொண்டானில், பெண்கள் முன்னேற்றக் கழக சார்பில் சத்தியவாணிமுத்து, இராமாமிர்தத்தம்மையார் சொற்பொழிவு.

5 அரியலூரில் சத்தியவாணிமுத்தம்மையார் சொற்பொழிவு.

6 தாத்தையங்கார் பேட்டையில் ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

7 அடக்குமுறைப் பற்றிப் பொதுச் செயலாளர் அறிக்கை.

8 சென்னையில் அப்பாதுரை, ஜீவரத்தினம் வழக்கு.

9 சென்னையில் தி. மு. க. சார்பில் மாணவர் பயிற்சி வகுப்பு.

10 வளவனூரில் என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து பேசினர்.

11 கோவையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசினர்.

12 ஓத்தக்கடையில் நெடுஞ்செழியன் எம், ஏ, சொற்பொழிவாற்றினர்.

13 சைதாப்பேட்டையில், கே. ஏ. மதியழகன் பி. ஏ,, பேசினர்.

14 திருக்களாச்சேரியில் நெடுஞ்செழியன் எம். ஏ., பேசினர்.

15 திருவண்ணாமலையில், தி. மு. மத்திய கழக நிதிக்காக நெடுஞ்செழியன் எம். ஏ., வசம் ரூ 1000 நன்கொடை.

16 பழைய சிலுக்குவார்ப்பட்டியில் எதிர்ப்புக் கிடையில் தி. மு. கழக துவக்க விழா.

17 திண்டிவனத்தில் சி. என். ஏ. தில்லை-வில்லாளன், இராம. அரங்கண்ணல் பேசினர்.

18 திருவாரூரில் உடல் நோயுற்ற மு. கருணாநிதியை நேரில் கண்டு ஓய்வெடுத்துக் கொள்ளும்படி சி. என். ஏ. கூறினர்.

19 சிதம்பரத்தில் சி என். ஏ., தில்லை-வில்லாளன் பேசினர்

20 தர்மபுரி வட்டாரத்தில் குட்டியப்பன் தலைமையில் நெசவாளர் அறப்போர்.

21 பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தில் நெடுஞ்செழியன் எம். ஏ., பேசினர்.

22 சென்னையில் முன்ஷிக்கு கருப்புக்கொடி வழக்கு.

23 போடியில் நெடுஞ்செழியன் எம். ஏ., சொற்பொழிவு.

24 வாணியம்பாடியில் திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாடு. தலைவர்: பி. ஆர். கோகுல் கிருஷ்ணன். துவக்கியவர்: இராம-அரங்கண்ணல். நாரணமங்கலம் தோழர்கள் விடுதலை.

25 கீழ்வழித்துணையாங்குப்பத்தில் சி. பி. சிற்றரசு பொதுக் கூட்டம்.

26 குளித்தலையில் கருப்புக் கொடி வழக்கில் சிறை சென்ற தோழர்களுக்கு வரவேற்பு.

27 காங்கேயத்தில் சி. என். ஏ. பேசினார்.
28 நாரணமங்கலத்தில் சி. என். ஏ. சிறை மீண்ட தோழர்களைப் பாராட்டினார்.

மார்ச்

1 வடார்க்காடு மாவட்டத்தில் 109 இடங்களில், 'ஆரிய மாயை' படிக்கப்பட்டது.
2 மணப்பாறையில் சி. என். ஏ. பொதுக்கூட்டம்.
3-4 மாயவரத்தில் தஞ்சை மாவட்ட மாநாடு தலைவர்: என். ஜீவரத்தினம் துவக்கியவர்: காஞ்சி கல்யாண சுந்தரம்.
5 சாந்தோம் உயர்நிலைப் பள்ளி மாணவ மன்றத்தில் மா. இளஞ்செழியன் பேசினார்.
6 சித்தையன், நாராயணசாமி, வரதராஜுலு ஆகியோர் மீது கி. பு. கோ. 112 பிரிவின்படி வழக்கு.
7 தண்டலத்தில் என். வி. நடராசன் பேசினார்.
8 திருவாதவூரில் தி. மு. க. செயற்குழு கூடிற்று.
9 காஞ்சி திராவிட மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா.
10 குடியேற்றத்தில் என். எஸ். இளங்கோ பேசினார்.
11 காஞ்சியில் பொதுக்குழு கூட்டம் நடந்தது. மாநில மாநாட்டை சென்னையில் நடத்தவும், மாவட்டம் ஒவ்வொன்றும் ரூ 2000 நன்கொடையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.
இரவு சி. என். ஏ. தீட்டிய "காதல் ஜோதி" நாடகம் நடந்தது.
12 சூளேசுவரன்பட்டியில் கிளைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
13 இலங்கையில் தி. மு. க. பேச்சாளர் பயிற்சி நடத்தப் பட்டது.
14 சென்னையில் முன்ஷிக்குச் கருப்புக்கொடி வழக்கு.
15 காஞ்சி பச்சையப்பன் கல்லூரி நிதிக்காக கலை விழா.
16 'ஆரியமாயை' நூல் படித்த தோழர்களைப் பாராட்டி, மாவட்டச் செயலாளர் போளூர் சுப்பிரமணியம் அறிக்கை.
17 ஆனந்தூரில் என். வி. நடராசன் பேசினார்.
18 திருப்பூரில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசினார்.
19 ஆலம்பட்டியில் என். வி. நடராசன் பொதுக் கூட்டம்.
20 சென்னையில் மாணவர் பயிற்சி வகுப்பு.
21 காஞ்சி கலைவிழா மைதானத்தில் ரூ. 21000. கல்லூரி கட்ட நிதிக்காக, சி. என். ஏ. அளித்தார்.
22 வாணியம்பாடியில் தி. மு. க. செயலாளர் தத்தப்பன் தலைமையில் விவசாயிகள் கூடினர்.
23 கூடல்நகரில் என். வி. நடராசன் பேசினார்
24 இலங்கை தி. மு. க. பொதுக்குழு கூட்டம்.
25 நெல்லை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்.
26 ஈரோட்டில் சி. என். ஏ. சொற்பொழிவு.
27 கண்ணமங்கலம் முனும்மீது வழக்கு.
28 முசிறியில் இராம-அரங்கண்ணல், தில்லை-வில்லாளன் பொதுக்கூட்டம்.
29 சேலம் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்.
30 ஆலத்தம்பாடியில் என். எஸ். இளங்கோ, என். வி. நடராசன் பேசினர்.
31 திருச்சியில் உழவர் மாநாடு. ஓமந்தூர் ராமசாமி, சி. என். ஏ. பேசினர்.

ஏப்ரல்

1 திருச்சி கிராமப்பஞ்சாயத்து மாநாட்டில் வி. நாடிமுத்து தலைமையில் சி. என். ஏ. பேசினார்.
2. உசிலம்பட்டியில் ஜீவரத்தினம், இளமுருகு பொற்செல்வியார் பேசினர்.
3 சீர்காழியில் சி. என். ஏ. பொதுக்கூட்டம்.
4 சேலத்தில் நெடுஞ்செழியன் எம். ஏ. சி. பி. சிற்றரசு, ஆசைத்தம்பி பேசினர்.
5 மீர்சாகிப்பேட்டையில் கா. அப்பாதுரை, எம். எஸ். மணி பேசினர்.
6 சென்னையில் ராஜேந்திர பிரசாத்துக்கு எம். ஆர். பாண்டியன் தலைமையில் கருப்புக் கொடி.
7 ஒட்டிமேட்டில் என். வி. நடராசன் பேசினார்.
8 சென்னையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஜீவரத்தினம், முத்துச்சாமி பேசினர்.
9 கிருஷ்ணகிரியில் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.
10 குன்றத்தூர் வழக்கில் ராஜவேலு, சாமிக்கண்ணு, பச்சையப்பன் விடுதலை.
11 மேலக்கோட்டையூரில் எம். எஸ். ராமசாமி, சிதம்பர பாண்டியன் பேசினர்.
12 காஞ்சியில் சி. என். ஏ., ஏ. கே. கோபாலன் சந்திப்பு.
13 புலிமகாப்பட்டியில் இரா. நெடுஞ்செழியன், எஸ். முத்து, அய்யாச்சாமி பேசினர்.
14 அரியலூரில் தி. மா. மு. கழக அமைப்புக் கூட்டம்.
15 சென்னையில் ரயில்வே மந்திரி கோபால்சாமி அய்யங்காருக்கு கருப்புக் கொடி.
16 பேராவூரணியில் இரா. நெடுஞ்செழியன், ஏ. கே. வேலன், என். எஸ். இளங்கோ.
17 ஏரலில் சி. என். ஏ. பேசினார்.
18 அம்மையப்பனில் இரா. நெடுஞ்செழியன் பொதுக்கூட்டம்.
19 கலவையில் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.
20 திருச்சியில் பாரதிதாசன் மணிவிழா துவக்கம்.
21 அமைந்தகரையில் இரா. நெடுஞ்செழியன் பொதுக் கூட்டம்.

22 குடந்தையில் ஏ. கே. வேலன், எம். எஸ். ராமசாமி, பேசினர்.
23 சென்னை முன்ஷி கருப்புக் கொடி வழக்கு.
24 புதுவையில் இரா. நெடுஞ்செழியன் பொதுக் கூட்டம்.
25 கோவையில் சொற்பயிற்சிக் கூட்டம்.
26 கல்லக்குத்தில் சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினர்.
27 கொழுமங்களியில் கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் பேசினர்.
28 கொடுவாயில் என். வி. நடராசன் பொதுக் கூட்டம்.
29 சிதம்பரத்தில் 'சந்திர மோகன்' நாடகம். மத்திய கழகச் செலவுகளுக்காக ரூ. 1000 அளிக்கப்பட்டது.
30 வெள்ளாழப்பட்டியில் இரா. நெடுஞ்செழியன் பேசினர்.

மே

1 சென்னை மே தின விழாவில் சி. என். ஏ. சொற்பொழிவு.
2 குடியேற்றத்தில் என். வி. நடராசன் பேசினர்.
3 காஞ்சி, அய்யம்பேட்டையில், காஞ்சி. கல்யாணசுந்தரம், ஜீவரத்தினம், இராம–அரங்கண்ணல் பேசினர்.
4 புவனகிரியில் என். எஸ். இளங்கோ சொற்பொழிவு.
5, 6 சேலம் மாவட்ட மாநாடு. சேலத்தில் தலைவர்: வி. எம். ஜான். துவக்கியவர்: சத்தியவாணிமுத்து.
7 சேலத்தில் மத்திய செயற் குழு கூடிற்று.
8 சென்னை முன்ஷி கருப்புக் கொடி வழக்கில் தோழர்கள் விடுதலை.
9 திருத்தணியில் மேதின விழாவில் காஞ்சி. கல்யாணசுந்தரம் பேசினர்.
10 அபிவிருத்தீஸ்வரத்தில் என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமிபேசினர்.
11 சென்னிமலையில் சி. என். ஏ. சொற்பொழிவு.
12 திருப்பூரில் சி. என். ஏ. பேசினர்.
13 கோவையில், 'நீதிதேவன் மயக்கம்' நாடகம் மூலம், மன்றம் அச்சக நிதிக்காக, நெடுஞ்செழியனுக்கு ரூ. 5000 நிதியளிப்பு.
14 ஆனைமலையில் சி. என். ஏ. சொற்பொழிவு.
15 நரசிங்கபுரத்தில் ஜீவரத்தினம், காஞ்சி. கல்யாணசுந்தரம் பேசினர்.
16 ஈரோட்டில் நெடுஞ்செழியன், எஸ். ஆர். சந்தானம் பேசினர்.
17 கிரனூரில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது.
18 புதூரில் சி. பி. சிற்றரசு பொதுக் கூட்டம்.
19 பாலையூரில் கே. ஏ. மதியழகன் பி ஏ. பேசினர்.
20 திண்டிவனத்தில் சமூக சீர்திருத்த மாநாடு. தலைவர்: காரணதுரைக் கண்ணன், துவக்கியவர்: கே ஆர். ராமசாமி.
21 மஞ்சகுப்பம்
22 வளவனூர் ஆகிய இடங்களில் சி. என். ஏ. பேசினர்.
23 பெத்துநாய்க்கன்பேட்டை தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்.
24 சேவூர் தி. மு. க. செயற்குழு கூட்டம்,
25 பம்பாயில் தூக்குமேடை நாடகத்திற்குத் தடை.
26 தலைஞாயிறில் ஏ. கே. வேலன் பேசினர்.
27 சென்னையில் எஸ். வேதரத்தினம் எம். ஏ. எம். எஸ். சிவசாமி, ஆர். எஸ். தங்கப்பழம் பேசினர்.
28 கல்லுப்பட்டி,
29 செயங்கொண்டம் ஆகிய இடங்களில் சி. என். ஏ. சொற்பொழிவு.
30 பாலமேட்டில் எம். எஸ். ராமசாமி பேசினர்.
31 பெண்ணாத்தூரில் ஏ.கே. வேலன் சொற்பொழிவு.

ஜூன்

1 'சவுக்கடி' வழக்கில் 7-வாரச்சிறைவாச தண்டனை பெற்ற தங்கப்பழத்திற்கு பத்திரிகைகள்பாராட்டு.
2 திருப்பத்தூரில் நெடுஞ்செழியன் பேசினர்.
3 தொரப்பாடியில் ஏ. கே. வேலன் பேசினர்.
4 திருவண்ணாமலை,
5 சென்னை ராபின்சன்பார்க் இடங்களில் என். வி. நடராசன் பொதுக் கூட்டம்.
6 மாங்காட்டில் என். வி. நடராசன் பேசினர்.
7 தங்கப்பழத்திற்கு மதுரை சிறைக்கு மாற்றம்.
8 அதிராம்பட்டினத்தில் என். வி. நடராசன் பேசினர்.
9 ஆரணியில் மனோகரன் பேசினர்
10 தங்கவயலில் சி. என். ஏ. பேசினர்.
11 கண்ணமங்கலத்தில் மனோகரன் சொற்பொழிவு.
12 புலியஞ்சுவனம் தி. மு. க. துவக்கு விழா.
13 ஒரகடத்தில் என். வி. நடராசன் பேசினர்.
14 திருக்களாச்சேரியில் ஈ. வே. கி. சம்பத் பேசினர்.
15 சென்னை மாவட்ட தி. மு. க. கூட்டம்.
16 விழுப்புரம் 'தோழன்' நாடகத்தில் என். வி. நடராசன் பேசினர்.
17 ஆத்தூரில் சி. பி. சிற்றரசு பேசினர்.
18 மேட்டூரில் ஏ. கே. வேலன் பேசினர்.
19 குமாரசாமிப்பேட்டையில் தி. மு. க. செயற் குழுக் கூட்டம்.
20 செண்டங்காட்டில்சி. என். ஏ. பேசினர்.
21 தியாகதுருக்கத்தில் ஈ. வே. கி. சம்பத் பேசினர்.
22 நெல்லிக்குப்பத்தில் சி. பி. சிற்றரசு, இராமாமிர்தம்மையார் பேசினர்.
23 கட்டிமேட்டில் ஏ. கே. வேலன் பேசினர்.
24 திருப்பூரில் மாணவர் வகுப்புரிமை மாநாடு. தலைவர்: கா. அப்பாதுரை, துவக்கியவர்: பூங்கோதை
25 நன்னிலத்தில் என். வி. நடராசன் பேசினர்.
26 பூவிருந்தவல்லியில் சத்தியவாணிமுத்து, என். வி. நடராசன், ஜீவரத்தினம் பேசினர்.

27 போளூர் சுப்பிரமணியம் காஞ்சி வந்து சி. என். ஏ.வைக் கண்டு பேசிச் சென்றார்.
28 இராசிபுரத்தில் ஈ. வே. கி. சம்பத். ஜி. பி. சோமசுந்தரம் பேசினர்.
29 ஆர்க்காட்டில் சி. என். ஏ. தலைமையில். மு. கருணாநிதி, தில்லை-வில்லாளன், க. அன்பழகன் எம். ஏ. முன்னிலையில் 'நச்சுக்கோப்பை' நாடகம்.
30 திருப்பத்தூரில் சமூகநீதிமாநாடு. தலைவர்: க. அன்பழகன் எம். ஏ., துவக்கியவர்: முனுசாமி.

ஜூலை

1 திருப்பத்தூரில் பேச்சுரிமை எழுத்துரிமை மாநாடு. தலைவர்: ஈ. வே. கி. சம்பத், துவக்கியவர்: சி. வி. எம். அண்ணாமலை.
2 குருராயப்பேட்டையில் சி. என். ஏ. காஞ்சி மணிமொழியார், தில்லை-வில்லாளன் பேசினர்.
3 காஞ்சியில் சழக முக்கியஸ்தர்கள், செங்கற்பட்டு மாவட்டக் கழக கட்டிடம் வாங்குவதுபற்றிக் கலந்து பேசினர்.
4 தேனியில் காங்கிரஸ் காலிகள் கலகம்.
7 சென்னையில் திவாகருக்குக் கருப்புக்கொடி.
8 மாயவரத்தில் சி. பி. சிற்றரசு பேசினார்.
9 குன்றத்தூர் வழக்கு
10 அம்மாசத்திரத்தில் ஏ. கே. வேலன் சொற்பொழிவு.
11 தேனி கலவரம்பற்றி சி. என். ஏ. அறிக்கை.
12 பத்திரிகை சுதந்திரத்திற்காக இயக்க இதழ்கள் நிறுத்தப்பட்டன.
13 மானூரில் சி. பி. சிற்றரசு பேசினார்.
14 பொன்மலையில் ஏ. கே. வேலன் பொதுக்கூட்டம்.
15 சேலத்தில் ஜகஜீவன் ராமுக்கு கருப்புக்கொடி.
16 கோலார் தங்கவயலில் நேருவுக்கு கருப்புக்கொடி தோழர்கள் கைது—பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.
17 கோவையில் ஜகஜீவன் ராமுக்கு கருப்புக்கொடி.
18 மதுரையில் வள்ளிமுத்து வந்து கருப்புக்கொடி ஏற்பாடுகள் செய்தார்.
19 மதுரையில் ஜகன்ஜீவன்ராமுக்கு கருப்புக்கொடி.
20 தங்கப்பழம் விடுதலை.
21 சென்னையில் ஜகஜீவன்ராமுக்கு கருப்புக்கொடி. என். வி. கலைமணி கைது.
22 காஞ்சியில் தங்கப்பழத்திற்கு வரவேற்பு.
23 சென்னையில் தங்கப்பழத்திற்கு வரவேற்பு.
24 மீன்சுருட்டியில் ஈ. வே. கி. சம்பத் பேசினார்.
25 திண்டுக்கல் மாநாட்டில் நடத்தும் நாடகம் பற்றி போலீஸ் கடுபிடி.
26 மதுரை மாவட்டத்தில் முத்து, அய்யாச்சாமி, இளஞ்செழியன் சுற்றுப் பிரயாணத் திட்டம்.
27 சென்னை என். வி. கலைமணி விடுதலை.
28 கோத்தகிரியில் ஏ. கே. வேலன் சொற்பொழிவு.
29 திண்டுக்கல்லில் எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடு. தலைவர்: தங்கப்பழம், துவக்கியவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
30 பொட்டல் புதூர்
31 சோமாதேவி ஆகிய இடங்களில் என். வி. நடராசன் பேசினார்.

ஆகஸ்ட்

1 கல்லிடைக்குறிச்சி
2 முக்கூடல்
3 செங்கோட்டை, ஆகிய இடங்களில் என். வி. நடராசன் சுற்றுப் பிரயாணம்.
4 சேலத்தில் சித்தையன், சி. பி. சிற்றரசு பேசினர்.
5 ஈரோடு சமூக சீர்திருத்த மாநாடு தலைவர்: ஏ. கே. வேலன். துவக்கியவர், ப. உ. சண்முகம்.
6 குளித்தலையில், கருப்புக்கொடி வழக்கு வெற்றி சிறை மீண்ட தோழர்களுக்கு பாராட்டு விழா சி. என். ஏ. கலந்துகொண்டார்.
7 நாமக்கல்லில் மனோகரன் பேசினார்.
8 சென்னையில் 'வாழமுடியாதவர்கள்' நாடகம். மாநில மாநாட்டிற்கு ரூ. 1000, சென்னை மாவட்டக் கழகத்திற்கு ரூ. 500 நிதியளிக்கப்பட்டது.
9 சிறுமதுரைகழகத் தோழர்கள் வீடுகளில் காங்கிரஸ் காலிகள் கலவரம்.
10 வதுவார்ப்பட்டியில் எம். எஸ். ராமசாமி பேசினார்.
11 இன்றுவரை தேனி கண்டனக் கூட்டங்கள் 278.
12 காஞ்சியில் 'வாழமுடியாதவர்கள்' நாடகம். மாநில மாநாட்டிற்கு ரூ. 1000 அளிக்கப்பட்டது.
13 'நீதிதேவன் மயக்கம்'
14 ''சந்திரமோகன்'' நாடகங்கள் சென்னை தியாகராயர் கல்லூரி நிதிக்காக நடத்தப்பட்டன.
15 ஈரோடு சந்தானம், சமூக சீர்திருத்த மாநாட்டு நன்றியுரை.
16 தேனியில் 144-தடையுத்தரவு மீண்டும் நீடிக்கப்பட்டது.
17 'தேனி' சம்மந்தமாக சஸ்பெண்ட் செய்யப்பட்ட சப்—மாஜிஸ்ட்ரேட் திரு பவும் அழைக்கப்பட்டார்.
18 மடத்தூரில் ஈ. வே. அ. வள்ளிமுத்து பேசினார்.
19 திருமங்கலத்தில் சி. பி. சிற்றரசு பேசினார்.
20 ஜோலார்ப் பேட்டையில் காஞ்சி மணிமொழியார், கே. ஏ. மதியழகன், முல்லை வடிவேல் பேசினர்.
21 அய்யம்பாளையத்தில் எம். எஸ். சிவசாமி, தங்கப்பழம் பேசினர்.
22 அம்பாசமுத்திரக்கிளைசெயற்குழுநிறுவப்பட்டது
23 மானாமதுரையில் என். வி. நடராசன் பேசினர்.
24 காரைக்குடியில் சி. பி. சிற்றரசு, காஞ்சி கல்யாணசுந்தரம், மனோகரன், கண்ணதாசன் பேசினர்.
25 அண்ணாமலை நகரில் சி. பி. சிற்றரசு பேசினார்.
26 வேலூரில் சி. என் ஏ. பேசினார்.
27 சோளிங்கபுரத்தில் என். வி. நடராசன் பேசினார்.
28 புளியம்பட்டியில் ஈ. வே. கி. சம்பத், எஸ். அப்பாவு பேசினர்.
29 மாநில மாநாட்டு நன்கொடை வசூலிக்க திருச்சி மாவட்டச் செயலாளர் சுற்றுப் பிரயாணம்.
30 இன்றுவரை தேனி கண்டனக் கூட்டங்கள் 578.
31 நரசிங்கபுரத்தில் கண்ணதாசன் பேசினார்.

அறிவிப்பு
(பிராஸ்பெக்டஸ் அல்ல)

பொன்னி லிமிடெட்

(1913-ம் ஆண்டு இந்தியக் கம்பெனிச் சட்டப்படி இணைக்கப் பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ... ரூ 4,00,000

(ரூ. 100 பெறுமானமுள்ள 4,000 சாதாரணப் பங்குகளா கப் பிரிக்கப்படுகிறது)

வழங்கப்பட்ட மூலதனம் ... ரூ 1,00,000

(விண்ணப்பத்தோடு முழுத் தொகையும்வசூலிக்கப்படுகிறது)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:

16, சேணியம்மன் கோயில் தெரு,
தண்டையார்ப் பேட்டை — சென்னை 21.

இணைப்புச் சர்டிபிகேட்டும் தொழில் துவக்க அனுமதிச் சர்டிபிகேட்டும் சென்னை நகர ஜாயிண்ட் கம்பெனிகளின் உதவி ரிஜிஸ்தாரவர்களால் வழங்கப் பட்டிருக்கின்றன.

நோக்கங்கள்

★ ஐந்து ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டையில் தொடங்கப்பெற்று, இப்போது சென்னையில் நடைபெற்று வருகிற 'பொன்னி' இதழைத் தமிழ் மக்களின் குடும்பப் பத்திரிகையாகச் சிறந்த முறையில் நடத்துவதே கம்பெனியின் உடனடியான நோக்கம்; மாதமிருமுறையாக வெளிவரும் 'பொன்னி' இதழை விரைவில் வார இதழாக மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

★ மேலும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழிலக்கியம் சீரும் சிறப்பும் பெற்று மற்ற உலக மொழிகளோடு சம நிலையில் விளங்குவதற்காகவும், தமிழ்ப் பெருமக்களின் முன்னேற்றத்திற்காகவும் 'பொன்னி' தொடங்கிய நாள்தொட்டு ஆற்றி வந்த அரும்பணியை முழு அளவில் நிறைவேற்றுவதும் கம்பெனியின் நோக்கமாகும்.

★ 'பொன்னி' இதழை நடத்துவதோடு, தமிழில் சிறந்த புத்தகங்களை முறையாக வெளியிடுவதும், உலக இலக்கியச் செல்வங்களை அழகு தமிழில் சிறு சிறு புத்தகமாக 'விருந்து' வடிவில் மாதம் ஒரு வெளியீடாக வழங்குவதும், அச்சகத்தில் வெளி வேலைகளை ஏற்று முடித்துத் தருவதும், இன்னும் அவ்வப்போது கம்பெனியின் நோக்கங்களுக்கு இணைந்த மற்ற தொழில்களில் ஈடுபடுவதும் கம்பெனியின் நோக்கங்களாகும்.

★ 'பொன்னி'யை வார இதழாக ஆக்குவதோடு, தமிழகத்தில் தமிழர்க்கென ஒரு தினசரி இல்லாத குறையைப் போக்கும் வகையில், சிறப்பான தமிழ்த் தினசரி ஒன்று தொடங்குவதும் எங்கள் உடனடி நோக்கங்களில் ஒன்றாகும்.

★ 'பொன்னி' லிமிடெட் தமிழர் நலனையும் தமிழ் மொழியின் நலனையும் காக்கும் பெரிய நிறுவனமாக உருப்பெறவும், வருவாய் வகையில் நிகரற்ற தொழில் நிலையமாக விளங்கவும் ஆவன செய்ய டைரக்டர்கள் உறுதி கொண்டுள்ளனர்.

★ மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் தங்கு தடையின்றி நிறைவேறுவதற்குத் தமிழ்ப் பெரு மக்களின் ஒத்துழைப்பு அவசியமென்று கூறவேண்டியதில்லை; பொன்னி லிமிடெட்டில் பங்கு பெறுவதன் மூலம், தங்கள் நண்பர்களைப் பங்கு பெறத் தூண்டுவதன் மூலம், தமிழ் மக்களின் கூட்டுறவு நிறுவனமாகப் பெரிய அமைப்பில் செயற்படும் தொழிலகத்தை உருவாக்கி வளர்ப்பது இயல்வதாகும்.

பொன்னி லிமிடெட் — தமிழ் மக்களுக்காகத் தமிழ் மக்களால் நடத்தப்படும் தமிழ் நிறுவனம்.

மனிதன் ஏன் உயர்ந்தவன்!

சாமி கைவல்யம்...

கூடி வாழ்தல், சிநேகம், அன்பு ஆகிய இவைகளே மனிதர்கள் எக்காலத்தும் விரும்புவது. இப்படி எக்காலத்தும் சதா விரும்பும் மனிதனுடைய ஸ்வரூபத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாதென்றே சொல்லவேண்டும், மனிதன் பிறக்கிறான்; பின்பு அவன் இறக்கிறான். அவன் எங்கிருந்து வருகிறான்? எங்கே பின்னர் போகிறான்? என்பதே நமக்குத் தெரியாது. ஒருவன் கவியாகவும், மற்றொருவன் போர்வீரனாகவும் இருக்கிறான். இவர்கள் இப்படியிருக்கக் காரணம் என்ன என்பதும் நமக்குத் தெரியாது. மனிதன் உயிரோடிருக்கக்குங்கால் மூச்சு விடுகிறான்! அவன் இறந்த பின் மூச்சு நின்றுவிடுகிறது, மூச்சுவிட்டுக்கொண்டிருந்தது யாது? மூச்சில்லாது கிடப்பது யாது? நாமெங்கே போகிறோம்? மரணத்தோடு நாம் வாழ்க்கை முடிந்ததா? நாம் ஆத்மாவா? அனாத்மாவா? மனமா? இந்திரியங்களா? அல்லது ஒன்றுமே இல்லையா? என்ற இந்தச் சந்தேகங்களுக்கு எந்த தேக தத்துவ சரித்திரத்தாலும் தக்க விடை கொடுக்க முடிவதில்லை. இம்மாதிரி பெரிதாயும் ஆழ்ந்ததாயும் உள்ள இரகசியங்களால் மனிதன் சூழப்பட்டிருக்கிறான். இதை அறிய நாம் எவ்வளவோ முயன்றாலும் நம்மால் ஆவதில்லை. இம்மாதிரியான இருளில் நாம் தத்தளிக்கிறோம். அதிக பழக்கத்தால் உண்டாகும் மந்த குணத்தைச்சிதறடித்த மனிதர்களின் வாக்கியங்கள் என்றாலும் சமுத்திரத்தில் மீனுக்காக அலைகளை எளிதில் தாண்டிச் செல்லும் செம்படவனுக்குச் சமுத்திர ஒளியின் கம்பீரமும், அதிலுண்டாகும் புயல்களின் கம்பீரமும் எவ்வாறு தோன்றாதோ அவ்வாறு ஓயாத சமுத்திர அலை போல மோதிக் கொண்டிருக்கும் விஷயங்களைக் கவனியாது அவைகட்கு அப்பாற்பட்டு நிற்கும் வழி தோன்றாது அதிகப் பழக்கத்திற்கு ஆளாகிக் கெட்டுப்போகும் மனிதர்கள் நிறைந்த இவ்வுலகின் பிரபஞ்ச விசித்திரம், அதன் ரகசியத்தின் பெருமை அதை பூரணமாக அறிய முடியாது என்பவைகளையும் நமது அறிவின் சிறுமையையும் உள்ளபடி உணரும் சக்தி ஒன்று உண்டென்றும், அது வருவதற்கே ஈஸ்வர கிருபை என்றும், ஞானமென்றும், புண்ணியமென்றும், தவமென்றும் சொல்லி அதை அடைவதற்கே கடவுள் பக்தியென்றும், யோகமென்றும், கர்மமென்றும் வழிகாட்டி அவ்வழியில் நடக்கும் திறமை வருவதற்கே சமத்துவம், சகோதரத்துவம், தன்னலம் விரும்பாமை முதலிய குணங்கள் நிறைந்ததால் இப்பிரபஞ்ச வாழ்க்கையின் விருத்தியிலும் அதற்கு அப்பாற்பட்ட ஞானத்தின் ஆனந்தத்திலும் இருக்கும் மனிதனே எல்லா ஜெந்துக்களையும் விட உயர்ந்தவனாவான் என்பது தேசப் பெரியவர்கள் வாக்கு.

நம் தேசப் பெரியவர்கள் கண்டு அறிந்து அனுபவித்த ஞானம் எல்லாம் நமக்கு உதவியாகவே இருக்கின்றன. அவைகளின் சகாயத்தின் பேரிலும் நமது சிற்றறிவிற்கெட்டிய வரையிலும் அகங்காரம் நிறைந்த விசித்திர ஜந்துவாகிய மனிதனது ஸ்வரூபத்தைப் பற்றி ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். மனித தேகத்தின் ஸ்வரூபத்தை நோக்கில் இதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. மனித தேகம் எவ்வளவு விசித்திரமாக இருந்த போதிலும் மனிதனைவிட அதிக பலம், அழகு, கம்பீரம் முதலிய சிறப்பு வாய்ந்த சரீரங்களையுடைய ஜந்துக்கள் காணப்படுகின்றன. குதிரையே நல்ல தேகக் கட்டுடையதென்று பிரகிருதிகள் சொல்கிறார்கள், நல்ல கொம்பன் யானைக்கிருக்கின்ற கம்பீரமும் நல்ல மல்லக ஜெட்டுக்குக் கூட இல்லை, சிங்கத்திற்குள்ள பார்வை நல்ல வம்சத்திற் பிறந்த அரசனுக்குக்கூட இல்லை. சிறந்த காளை மாட்டின் நடையானது போர் வீரனது நடையைப் பழிக்கும் திறனுடையது. கானமயிலாடக் காணும் கண் குளிரும் காட்சி கை காட்டும் நடன மாதரிடமும் காணாது. ரம்பைக்குக் கூட பஞ்சவர்ணக் கிளியின் அழகு இருந்திருக்காது. படமெடுத்தாடும் சர்ப்பமும் ஆகாயத்தில் அசையாது உருவிச் செல்லும் கருடப் பட்சியும் அபூர்வ ஜெந்துக்கள். ஆகையினால் தேக விஷயமாகப் பார்க்குங்கால் மனிதன் மற்ற ஜெந்துக்களை விட சிறப்பு வாய்ந்தவனென்று சொவ்வதற்கில்லை. ஆகையால் மனிதனுக்குச் சிறப்பு அவன் தேகத்தாற் உண்டாவதில்லை.

இனி மனிதனது சிறப்பு தேகத்தைவிடச் சிறந்தனவாகிய இந்திரியங்கள் மனஸ் ஆகிய இவைகளால் உயர்வு உண்டாகின்றதோ, என்பதை விசாரிக்கப் புகுவோம். இந்திரிய வியாபாரங்களை மாத்திரம் நாம் தனியாகப் பார்த்தால் மனிதன் மற்ற ஜந்துக்களைவிட மிகத் தாழ்ந்தவனாகப் போகிறான். உற்று நோக்குங்கால் 'புலி' கரடி முதலியவைகூட நல்லவைகள் என்ற மதிப்பை நமக்கு உண்டாக்கும் குணம் வாய்ந்தவர்கள் மனிதர்களுள் அநேகர் காணப்படுகிறார்கள். புலிக்கும் கரடிக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள இயல்புகளுண்டு மனிதனுக்கு இவற்றில் எல்லையில்லை. ஆடு மாடுகள், இன்னும் பூமியில் உலாவும் மிருகங்கள், ஆகாயத்தில் பறக்கும் பட்சிகள், சமுத்திரத்திலுள்ள மீன்கள், சமுத்திரத்தில் ஓடும் ஜீவஜெந்துக்கள் ஆகிய எல்லாம் மனித விரோதிகளாக ஏற்படலாம். எறும்பு முதல் மனிதர் பரியந்தம் உள்ள ஜீவராசிகளில் எதைத்தான் மனிதன் தன்னலம் கருதி வருத்தாது விடு

கிருன்?: இந்திரியவியாபாரப் பழக்கத்தில் மேலான உறவுகள் எல்லாம் சிதறிப் போகின்றன. தாயாதி என்ற நெருங்கின உறவைக் காட்டும் ஓர் பதம் விரோதி என்ற பொருளைக் கொடுக்கும் நிலைக்கு வந்துவிட்டது. சிலந்தியும், எறும்பும் அநேகருக்கு நல்போதனை செய்திருக்கின்றன. பசுவின் சாத்மீகம் பழமொழியாகிவிட்டது. பாம்புகள் தமக்குள்ள சங்கீத அனுபவ சக்தி, புஷ்பங்கள் வாசனை முதலியவற்றை அனுபவிக்கும் சக்தியாகிய இவைகளால் கவிராயர்களைப் பழிக்கும் திறனுடையவையாகின்றன. மனிதனது அளவிட முடியாத சுயநலங் கருதல், வீண் பெருமை பேசல், கொடுமை, தற்புகழ்ச்சி, விளையாட்டுத் தனம் ஆகிய இவைகளைப் போன்ற பிசாச குணங்களை ஆழ்ந்து நோக்கினால், தனது சமூக வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் தற்கொலை செய்து கொண்டால் நலமாக இருக்குமென்ற எண்ணம் வந்திராத மனிதன் சும்மாவிருக்கக் கற்றுக்கொண்டானாகில் உலகிலுள்ள அரைவாசி துக்கங்களும் பறந்தோடிப்போம் என்றார் மற்றோர் காஸ்கல் என்ற பிரகிருத சாஸ்திரி. மனிதன் அவ்வாறு இருக்க முடியாது. கீதையில் கிருஷ்ணன் சொன்னது போல சதா கர்மங்களைச் செய்துகொண்டு பிறப்பு, இறப்பு ஆகிய இவைகள் வளருவதற்கு வேண்டிய விதை விதைத்துக் கொண்டே இருக்கவேண்டியிருக்கிறது. சிங்கத்தினது கோபமும், யானையினது மாறுப்பகையும், புலியினது கொடுமையும், பாம்பின் விஷமும், நரியின் தந்திரமும். பன்றியின் ஆபாசக் குணங்களும், எலியின் கெட்ட குணமும், மனிதனிடம் குடிகொண்டிருக்கின்றன. சிற்சில சமயங்களில் முற்கூறிய ஜந்துக்களைவிட அதிகமாகவும் போய் நடந்துகொள்ளுகிறபடியால் அவன் ஸ்திரமாயும் வரவரப் பலமாகும் குணமுடையதாயும் இனத்துவேஷங்களாகியதாயும் உள்ள வலையைச்சிலந்தி தன்வலையை உண்டாக்குவதுபோல ஸ்வபாவமாகவே உண்டாக்கொண்டு வருவதால் மனதிலும் இந்திரியங்களினுலும் மற்ற ஜந்துக்களைவிட மனிதன் உயர்ந்தவன் என்று சொல்லுவதற்கில்லை.

மனிதனது அறிவின் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவன் ஜீவராசிகளை விடச்சிறப்பு வாய்ந்தவனாகக்காணப்படுகிறான், இதில்தான் அவனுக்கு ஏற்றம் சற்று காணப்படுகிறது. தனது கணித விஷயங்களில்மனதை இழந்துகிடந்த நியூடனும், மலைச் சிகரத்திலிருந்து சந்திர மண்டலத்தைத்தமது தூரதிருஷ்டிக்கண்ணாடி மூலமாகப் பார்த்து ஆனந்தித்த கலிலீயோ என்ற வானசாஸ்திரியும் இன்னும் அபூர்வத்தைக் கண்டு ஆனந்தப்பட்டவர்களும், நமது தேசத்துயோகிகளும், சித்தர்களும் அறிவில் ஈடுபட்டு பிரபஞ்சத்தை மறந்த மகான்களல்லவா? இப்பேர்ப்பட்டவர்கள் நம்முன் எவ்வளவு அபூர்வமாகக் காணப்படுகிறார்கள். மிஞ்சியிருந்தும் ஜனங்கள் என்னும் பாலைவனத்தோடு ஒப்பிட்டால் இவர்கள் எவ்வளவு அபூர்வம்! ஒவ்வொருவனுக்கும் அறிவுண்டு, அது இந்திரிய வியாபாரங்களோடு பேதாபேதமின்றி தவழ்ந்திருப்பதால் அது அவனைவெகுகாலம்காப்பாற்றுவதில்லை. அது பிரபஞ்ச விஷயங்களாகிய கொடிய சமுத்திரத்தில் இடைவிடாது அவனைத் தத்தளிக்கச்செய்யும் புயலாகஏற்படுகின்றது. மனிதன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச் சிறந்ததே, ஆனால் வக்கீல் ராஜ்யவாதி போன்றவர்களிடத்தில் அது சீர்குலைந்து காணப்பட்டு பொதுவாகவும் சிறப்பாகவும் ஜனங்களுக்குக் கெடுதலாக முடிகின்றது. அற்பமான தேகத்தோடும் ஒழிவான இந்திரியங்களோடும் மிகக் குறைந்த சக்திவாய்ந்த அறிவோடும் கெட்டகுணம், வீண்பெருமை, அறியாமை ஆகிய இவைகளோடு நாம் இருந்து கொண்டு நம்மை அறிவாளி என்று நினைப்பது பொருந்தாது. அறிவாளியாக இருக்க வேண்டுமானால் மனமும் இந்திரியங்களும் சுத்தப்படவேண்டும். இவைகள் சுத்தப்படவே கோவில், தெய்வ வழிபாடு, ஆசாரஅனுஷ்டானம் இத்தனையும் உண்டானது. ஆனால் அவையனைத்தையும் தன் பக்கமே தன்வாதத்தின் பிழைப்பின் பெருமைக்கே திருப்பி அநேக அக்ரமங்கள் செய்யப்படுவதும் எல்லோர் முன்னும் நிற்கிறது. அவையனைத்தையும் சீர்திருத்தினாலொழிய மனமும் இந்திரியங்களும் சுத்தப்படாது என்பதை நாம் தெரிந்து கொள்ளும் வரையில் அறிவால் நாம் அடையும் பலனுமொன்றுமில்லை. உயர்ந்த ஜாதி என்று நினைத்து யாரையும் தொடாமல் இருப்பானானால் மனம் சுத்தமடையாது, அறிவு வந்துவிடாது. இந்திரிய சேஷ்டையும்போகாது மதக்குறியணிந்து கோவிலுக்குப் போய் கன்னத்திலடித்துச் சுத்தினாலும் மனம் சுத்தியாகாது; இந்திரிய ஆதிக்கம் குறையாது. ஆயிரம் குடும்பத்தை அனாதியாக்கி ஒரு ஆட்டுத் துண்டைக் கண்டு ஜீவகாருண்யமென்று தேசத்தை எல்லாம் குறுக்கிக் கொண்டாலும் மனதிற்கு இரக்கம் வந்துவிடாது; இந்திரியங்களின் கொடுமை போய்விடாது. விசாரணை செய்து பார்த்தாலே அறிவின் தன்மை புலப்படும். அப்பொழுதுதான் மனிதன் மற்ற ஜீவராசிகளில் மேம்பட்டவனாகக் காட்டமுடியும்.

புத்தியின் மற்றைய பாகமாகிய கற்பனா சக்தி என்ற ஓர் சக்தி மனிதனிடமிருக்கிறது. அதுதான் மனிதனது சிறுமை எல்லாவற்றையும் அகற்றும் திறனுடையது. இந்த சக்திவிசாரணையினால்உண்டாகிறது. மனம் இந்திரியம், அறிவு இத்தனையும் போட்டு விசாரணை என்னும் மத்தால் கடைந்தால் உண்டாக்கும் வெண்ணெய்க்குத்தான் சிந்தனா சக்தி என்று பெயர். இந்த சக்திக்குத்தான் கடவுள் அருள் என்றும், கடவுள் கடாட்சமென்றும் ஞானமென்றும் சொல்லுவது. தேகம், மனஸ், இந்திரியங்கள், முதலிய பிரபஞ்சமெல்லாவற்றையும் அப்பாற்பட்டு ஆனந்திக்கும் சக்தியும் அதுவே. மனிதனுக்கு உண்மையாக ஏற்பட்டுள்ள பெரும் உரிமை பெருஞ் செல்வம், மலைகள், ஆறுகள் பிரபஞ்சத்தில் காணும் அத்தனையும் கண்டு களித்து பிரபஞ்சத்தோடு கலந்து ஆனந்தப்படுவதாகிய அந்த சக்தியே. இந்த நிலையில் தான் மனிதன் எல்லாவற்றையும் விட உயர்ந்தவன்.

★

ஜூபிடர்
ரிலீஸ்
வினோதாவின்
ஆந்திரா, சீடெட், சித்தூர், நைஜாம்
மைசூர் வட இந்தியா, நீங்கலாக
பூரண உரிமையாளர்கள்
பெல் பிக்சர்ஸ்
தமிழ்

பர்ணசாலை

இராதாமணாளன்

"ஆற்றிலே பாரப்பா, அற்புதமான காட்சி!"

"எங்கே?"

"அதோ! அதோ! சொகுசாக நீந்தும் பொர்ண விக்கிரகம்!"

"தனியாக வந்திருக்கிறாள்போல தெரிகிறதே!"

"ஆமாம்! துணையின்றி வந்திருப்பதினால்தான், கணை தொடுப்பது சுலபம் என்கிறேன்!"

"அருகில் போகலாம் வா, மித்திர தேவா!"

"அவசரப்படாதே சுமித்திரா, அஞ்சியோடிவிடப் போகிறது, மான்!"

"புலிபோல பாய்ந்து சென்றால்?"

"பிரயோஜனமில்லாமல் போய்விடும்!"

"வேறு?"

"பாய்ந்து செல்லாமல், பதுங்கி செல்லவேண்டும் என்கிறேன்!"

கங்கை நதியிலே, கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்திலே ஓர் இளம் பெண், தனித்துக் குளித்துக் கொண்டிருந்தாள். அந்த அணங்கைச் சுமித்திரனுக்குக் காட்டியதோடு மட்டும் நில்லாமல், அவள் அழகைப் பற்றியும், அடையும் வழியைப் பற்றியும் விளக்கம் கூறத் தொடங்கிவிட்டான், மித்திர தேவன்.

மகத நாட்டை ஆண்டு வந்த அக்கினிமித்திரன் செல்வ புதல்வன், சுமித்திரன். பர்ணசாலையில் வேதம் ஓதும் ஒரு வேதியனின் மகன், மித்திரதேவன். இருவரும் உயிர்த் தோழர்கள்! பாராள்வோனின் மகன் பசிகொண்ட காளையாகத் திரிந்தபோது, வேதியனின் மகன் விதவிதமான கனிகளைக் கொண்டு வந்து தரும் வள்ளலாக விளங்கினான்!

இருவரும் செடி கொடிகளுக்குள் புகுந்து சென்று — அந்தப் பெண் குளிக்குமிடத்திற்கு அருகே —ஒரு புதருக்குள் மறைந்து நின்றனர். நீராடும் அந்த எழிலுடையாளை சுமித்திரன் உற்றுப் பார்த்தான்! கண் இமைகள் விரிந்து கொடுத்து, பார்வையைக் கூர்மையாக்கின! உள்ளம் கூத்தாட தன் நண்பனைப் பார்த்தான். அவன் சிரித்துவிட்டு, கண் சிமிட்டினான்.

"மித்திரதேவா! மேகங்களுக்கிடையே புகுந்து செல்லும் நிலவைப் போல, நீருக்குள்ளே புகுந்து விளையாடும் இந்த வனிதாமணி யார்?"

"இவளா? இவள், தேவலோகத்தை விட்டுப் பூலோகத்திற்கு வந்திருக்கும் தெய்வமகள்!"

"பர்ணசாலையில் வளரும் பாவையோ?"

"பளபளப்பைக் கண்டாலே தெரியவில்லையோ?"

"அப்படியானால் வலை வீசவேண்டிய சிரமமே இல்லை!"

"ஏன்?"

"ஏனா? அனுபவம் அப்படி!" என்று கூறிக் கொண்டே சுமித்திரன் சிரித்ததும், மித்திரதேவன் உரக்கக் கனைத்தான்!

நீரிலே நீந்திக் கொண்டிருந்த சேல்விழியாள் சுற்றும் முற்றும் பார்த்தாள்! அவள் பரந்த விழிகளில் மிரட்சி! உள்ளத்தில் அதிர்ச்சி! வேகவேகமாக ஈரச்சேலையைச் சரி செய்து கொண்டு, கரைக்கு வந்தாள்!

எதிரே புன்னகை பூத்த முகத்தோடு மன்னனின் மகன் வருவதைக் கண்டதும், அச்சம் மறைந்து அவளுக்கு வெட்கம் பிறந்தது!

"மித்திரதேவா, இந்த அழகு தெய்வம் யார்?"

"இதுகூடவா தெரியவில்லை! இவள் தேன் நிறைந்த பொற்குடமப்பா, பொற்குடம்!"

"அப்படியா?"

"அதுமட்டுமல்ல! இன்பமாக ஆடும் கலாபமயில்! இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் கர்பகவிருட்சம்!"

"ஆகா! வேல்விழிகளால் தாக்குவதைத் தவிர — வேறொன்றும் வாய்திறந்து பேசத் தெரியாதோ, இவளுக்கு?"

"இளவரசனைக் கண்டால் நாணமிருக்காதா?"

"நாணமா?........ இவள் சொகுசையும் சுழலும் கண்களையும் பார்த்தால்......"

"சேசே! தவறாக எண்ணிவிடாதே, மித்திரா! இவள் விரல் படாத வீணை! ஆமாம், முகராத முல்லை!"

பூத்திருந்த முல்லை மலரின் மணம், அவன் மனதை இழுத்தது! மலரைப் பறித்தான், முகர்ந்தும் பார்த்தான்!

• • •

"அக்னிமித்திரா, கேட்டாயா விஷயத்தை?"

"எதைப்பற்றி, குருதேவா?"

"எதைப்பற்றி? எல்லாம் உன் மகன் சுமித்திரனைக் குறித்துத் தான்!"

"நானும் கேள்விப்பட்டேன், குருதேவா! நாளுக்கு நாள் அவன் நடத்தை கேவலமாகிக்கொண்டுவருவதாக........."

"உன் மகன் அவன், எங்களை இழித்தும் பழித்தும் பேசுகிறானாம்........"

"அவனா?"

"ஆமாம் அக்னிமித்திரா. ஆமாம்! எங்கள் மதத்தை இருந்த இடம் தெரியாமல் செய்துவிடப் போகிறானாம்! பௌத்தமதத்தைச் சிம்மாசனத்தில் ஏற்றப் போகிறானாம்! இந்த மகதத்தில் ....."

அக்னிமித்திரன் சல சலவென சிரிப்பதைக் கண்டதும், பதஞ்சலி தன் பேச்சை முடிக்காமலேயே நிறுத்தி விட்டு, விழிகளை உருட்டிப் பார்த்தான்.

"குருதேவா! ஏதோ, எதுவோ என்று திடுக்கிட்டு விட்டேன்! செய்தி இவ்வளவு தானா?"

"பெரியவர்களைத் தூஷிப்பதும், அரச மதத்தை அவமதிப்பதும்— சாதாரண விஷயமா?"

"சஞ்சலம் வேண்டாம், குருதேவா! ஆரம்பத்தில நான் எப்படி இருந்தேன்? இப்பொழுது எப்படி மாறிவிட்டேன்? வயதானல் அவனுக்குப் புத்திவந்து விடுகிறது!"

"ஆமாம், ஆரம்பத்தில் அக்னி மித்திரனும் ஒரு பௌத்தனுகத்தான் திகழ்ந்தான். வேதமோதிகள் என்றால் கனல் கக்குவான், கத்தியை உருவிக் காட்டுவான். அப்பொழுது அவன் பாராளும் அரசன் அல்ல, சாதாரண படைத் தலைவன்!

அது சமயம், மகத நாட்டை மௌரிய மன்னன் பிருகத்ரதன் ஆண்டு வந்தான். அவனும் பௌத்த மதத்தவன். நாட்டின் நாலா பக்கங்களிலும் எதிரிகளின் தொல்லை அதிகமாக இருந்தபோது, உள்ளே அவர்கள் வேறு புகையும் எரிமலையாக இருந்து தந்தனர். நிலைமையைச் சமாளிப்பதற்காக, ஆந்திர நாட்டிலிருந்த ஆரிய மதக் குருவான பதஞ்சலியை வரவழைக்க அரசன் ஏற்பாடு செய்தான். கூடாதெனக் கூக்குரல் எழுப்பினன், அக்னி மித்திரன். வந்தால் அவனைச் சும்மா விடுகிறேனா பார் என்று குதித்தான்! நந்தவனத்திலே பாம்பும், நாட்டிலே ஆரியமும் ஒழிக்கப்பட வேண்டியவை என்று கொக்கரித்தான்!

அப்படிப்பட்ட அசகாயச் சூரனாக விளங்கிய அக்னி மித்திரனின் மீது, பதஞ்சலி என்ற தந்திரக்காரன் வஞ்சக வலை வீசினன்!

பர்ணசாலையில் சதி! அதன் விளைவாக, கி. மு. 204ம் ஆண்டு மன்னன் பிருகத்ரதன் கொலை செய்யப்பட்டான்! பூசுரர் பூரிக்க, அக்னி மித்திரன் புவியாளும் மன்னனாக மகுடம் சூடினன்!

இந்தப் பழைய வரலாறு நினைவிற்கு வந்ததும், அரும்பிய புன்னகை அஸ்தமித்து விட்டது! வேதனை பெருமூச்சாக வெளியே வந்தது!

ஆந்திரத்தைச் சாதகர்ணி ஆண்டு வந்தபோது, பதஞ்சலி இட்டது தான் பிச்சை. அவனது உதடுகளின் அசைவுகளுக்கு ஏற்றபடி, மன்னனின் செங்கோலும் ஆடிக் கொண்டிருந்தது. சாதகர்ணி மாண்டதும், அவன் மகன் வேதஸ்ரீ கி. மு. 226ம் ஆண்டு பட்டத்திற்கு வந்தான். வேதஸ்ரீ தன் தந்தை தழுவியிருந்த ஆரிய மதத்தை வெறுத்தது. ஒதுக்கிவிட்டு, பௌத்த மதத்தில் சேர்ந்துவிட்டான். செல்வாக்கைப் பறிகொடுத்துவிட்ட பதஞ்சலி, சிறகொடிந்த கழுகாகி விட்டான்!

* * *

சமஸ்கிருத பிரியர்கள் போற்றிப் புகழும் நூல்களிலேயே, மகாபாஷ்யம் என்ற பெயர் பெற்ற நூலும் ஒன்று. அப்படிப்பட்ட ஏட்டின் ஆசிரியன்தான், பதஞ்சலி! அக்னி மித்திரனைக் கொடூரமான வழிகளிலே செல்லச் செய்த வஞ்சகனும் அவனேதான்!

தந்திர திட்டமிட்டு பதஞ்சலி வேலை செய்து வரும்போது, இளவரசன் சுமித்திரன் ஆரியமதத்தைப் பற்றி இகழ்ச்சியாகவும், பௌத்த மதத்தைக் குறித்துப் புகழ்ச்சியாகவும் பேசிக் கொண்டிருந்தால் அவன் உள்ளம் பதைக்காதா? பதைக்காதா? உடல எரியாதா?

பர்ணசாலையின் அழகு வலையிலே இளவரசனைச் சிக்கச் செய்து, அவன் சித்தத்தை மாற்றவேண்டுமென்று அவன் திட்டமிட்டான். அந்தப் பணியிலே ஆர்வத்தோடு ஈடுபட தன் இனத்தவனை மித்திர தேவன் என்பவனைத் தேர்ந்தெடுத்தான்.

மித்திர தேவனும் சுமித்திரனின் நண்பனைப் போல நடந்தான். அவன் செல்லும் இடங்களிலெல்லாம் நிழல்போல தொடர்ந்தான். மன்னன் மன மகிழ்ச்சிக்கான துறைகளில் நுழைந்து வேலை செய்தான்.

மித்திர தேவனும் அவர்களில் ஒருவன் தானே. இனப் பண்பு மாறுமா, அவனை நம்பவும் முடியுமா என்ற எண்ணம் முதலில் சுமித்திரனின் மனதில் எழாமலில்லை. ஆனல் அவன் நடத்திய வர்ணஜால விளையாட்டுகளில் மயங்கி, கடைசியில் அவனை நம்பி விட்டான்!

* * *

மகத நாடு, மதோன்மத்தர்களின் மேய்ச்சல் நிலமாக மாறிவிட்டதே என்றெண்ணி சுமித்திரன் வேதனை அடைந்தான். பொக்கிஷத்திலிருந்த பொன்னும் பொருளும் பூசுரர்களின் இன்ப வாழ்விற்காகச் செலவழிக்கப் படுவதையும், நாட்டு மக்கள் வறுமையின் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிவதையும் கண்டு அவன் உள்ளம் துடி துடித்தது!

சுமித்திரனுக்கு நாடகம் என்றால் அபாரமான ஆசை. எவ்வளவு தொலைவான தூரத்தில் நாடகம் நடந்தாலும், அங்கு சென்று அதைக் கண்டு களிப்பது அவனது வழக்கம். சிறந்த நடிக நடிகைகளை அவன் போற்றிப் புகழ்வதோடு, அவர்களுக்கு ஏராளமான சன்மானங்களையும் வழங்குவான்.

நாடகத்திற்கு அடுத்தபடியாக அவன் நாட்டம் கட்டிளங் கன்னியர்மீது சென்றது! உள்ளப் பசியைத் தணிக்கும் உல்லாசிகளுக்கு மகதத்தில் பஞ்சமில்லை!

தேனீ

வெறிபிடித்த தேனீக்கள்
என்ன செய்யும்?

வேடுவனை நெருங்குதற்கோ
இயலாதாகிச்

செறிவுடைய தேனடையைக்
காப்பதற்கும்

திறனின்றி உயிர் காக்க
ஒளிந்ததோடி!

அறிவுடைமை கொண்டின்ப
வாழ்வுத் தேனை

அடைவதற்குத் திராவிடத்
தார் முயலும் போது!

வெறிபிடித்தோர் அத்தேனீச்
செயல் மேற்கொண்டால்

வெற்றி கொள்வாரோ
அறிவுத் தீயின் முன்னே

—புதுவை சிவம்

அந்தக்காலக் கண்கொண்டு பார்க்கும்போது, சுமித்திரன் பல பெண்களை விரும்பியதில், சிறுமையோ தவறோ ஒன்றுமில்லை!

* * *

இனத்திற்கேற்ற குணம் மித்திர தேவனிடம் பரிபூர்ணமாக அமையப் பெற்றிருந்தது. சாகசமான முறைகளைக் கையாண்டு, அவன் சக்கரவர்த்தியின் மகனுக்குத் தோழனானான். இளவரசனின் விருப்பம் இன்னதென்று அறிந்து, அதன்படி நடந்துகொள்வதில் கை தேர்ந்தவன்.

சுமித்திரனுக்குப் பௌத்தமதத்தில் பற்று அதிகம் என்பதை அறிந்து, தானும் பௌத்தனாகப் போவதாகவும், ஆரிய மதத்தின் ஆபாசங்கள் தனக்குப் பிடிக்கவில்லை என்றும் அவன் கூறிவந்தான்.

"மித்திரதேவா, உன் இனத்திலே உன்னைப்போன்ற உத்தமர்கள் பிறப்பது குதிரைக் கொம்பு தான்!"

"என் இனம் என்று இன்னும் ஏன் அதைக் கூறுகிறாய்? நான்தான் பௌத்தனாகிவிடப் போகிறேனே!"

"அந்த மதத்திலே பிறந்த நீ, அதை எதிர்த்துப் பிரசாரம் செய்தால், மயக்கத்திலிருந்து மக்கள் சுலபத்தில் விடுபடுவார்கள்!"

"ஆமாம் சுமித்திரா! மதத்தின் ஆபாசங்களை நான் விளக்க ஆரம்பித்தால்......"

"மக்கள் கைகொட்டி நகைப்பார்கள்!"

"ஏன்? வெட்கமில்லாமல் நானே சொல்கிறேனே என்பதற்காகவா?"

"அல்ல, அல்ல! அப்படிப்பட்ட ஆபாச மதமா, இன்னும் அரச மதமாக கொலுவீற்றிருக்கிறதென்று!"

"சுமித்திரா!"

"என்ன?"

"நமக்கென்று சொந்தமாக ஒரு ஓடம் இருக்கிறதென்று வைத்துக்கொள்! அந்த ஓடத்தின் அடியிலே சிறிது ஓட்டை! பலகைகளும் கொஞ்சம் கட்டுத் தளர்ந்திருக்கின்றன! சிறிய ஓட்டையை அடைத்து, பலகைகளின் கட்டைச் சரிசெய்து அந்த சொந்த ஓடத்தைப் பயன்படுத்திப் பார்க்க முயற்சி செய்யாமல், இரவல் ஓடமொன்றைத் தேடுவது சரியா? யோசிக்கவேண்டும் நாம், சுமித்திரா!......அதுபோல, நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த ஆரிய மதத்தின் சிற்சில அம்சங்கள்......"

"சிற்சில அல்ல......"

"பெரும் பகுதி என்றுதான் வைத்துக்கொள்ளேன்! அந்த மதத்தை நம்மால் திருத்த முடிகிறதா — தூய்மைப்படுத்த இயலுகிறதா—என்று ஒருமுறை முயற்சி செய்து பார்ப்போம்"

"புளித்த கள்ளின் நாற்றத்தைப் போக்கப் பாடுபடவேண்டுமென்கிறாயா?"

"அல்ல! தேனின்மீது படிந்திருக்கும் தூசியைப் போக்க முடிகிறதா என்று பார்த்துவிடவேண்டுமென்கிறேன்"

"என்னப்பா, சுற்றி வளைத்துப் பேசுகிறாய்? என்ன இருந்தாலும்......"

கோபம் வேண்டாம், சுமித்திரா! அப்படி ஒரு யோசனை தோன்றியது! சொன்னேன்! தவறு என்று நீ சொன்னால், தள்ளிவிட்டால் போகிறது! இளநீர் குடித்தால்தான் உன் கோபம் தணியும், வா போகலாம்!"

"எங்கே?"

"பர்ணசாலைக்கு!"

இருவரும் பர்ணசாலையை நோக்கி நடந்தார்கள்.

அந்த நாட்களில், பர்ணசாலைகளுக்கு இருந்த சீரும் சிறப்பும் அரண்மனைகளுக்குக்கூட இருந்ததில்லை. சாம்ராஜ்யங்கள் பல, அவற்றிற்குச் சரணடைந்திருக்கின்றன. அரசுகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி, அவைகளுக்கு இருந்திருக்கின்றன.

ஆசிரமங்களில் சேல் விழியும், சிவந்த மேனியும் கொண்ட பாகு மொழினர் பலர் உண்டு. மாளிகைகளில் நடைபெற்ற காமக் களியாட்டங்களை விட, அந்த மண்குடில்களில் நடைபெற்ற காம வெறியாட்டங்கள் அமோகம்!

பர்ணசாலைகள், வீரர்களை வீழ்த்தும் படுகுழி! வீணர்களை உண்டாக்கும் பள்ளி! சதிகாரர்களின் குகை! சரசவல்லிகளின் சல்லாபக் கோட்டம்—அதற்கு சுமித்தரனே சாட்சி!

சுமித்திரன் கோமள வல்லிகளின் கொஞ்சு மொழியிலும், வெட்டும் விழியிலும் சொக்கிவிடுவான்—ஆனாலும் தன் சொந்தக் கருத்தைத் தளரவிட மாட்டான்! இளகும் மனம்—ஒழுக விடாத இலட்சியம் அவனுக்கு—அவன் ஒரு விசித்திரப் பிறவியே தான்! பதஞ்சலி திணறினான். அப்படிப் பட்டவனை எப்படிச் சரி செய்வதென்று புரியாமல் கலங்கினான்.

* * *

மகத நாட்டிற்கு அடுத்திருந்தது, விதர்ப்ப நாடு. அந்தத் தேசத்து அரசனின் மகள் மாளவிகா பேரழகியாக விளங்கினாள்.

வயோதிக பருவத்திலிருந்த அக்னிமித்திரன், மாளவிகாவின் மீது மையல்கொண்டான். எப்படியாவது அவளை அடைய வேண்டும் — மனைவியாக மாலையிட வேண்டும்—என்ற ஆசைக்கனல் அவன் உள்ளத்தை எரித்தது.

விதர்ப்ப நாட்டு மன்னன் தன் செல்வ மகளை ஒரு வயோதிகனுக்கு மனைவியாக்க இசையவில்லை. அதைக் கேட்ட அக்னிமித்திரனுக்கு அடங்காத ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. விளைவு—இரு நாடுகளுக்குமிடையே கடும் போர் மூண்டு விட்டது!

சுமித்திரனைப் பற்றி ஒரு முடிவிற்கு வர, அந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொள்ள பதஞ்சலி நினைத்தான், ஏதேதோ

என் கவலை

அறிவுத் துறையிலே வளர்ந்து வருகின்ற மனிதனைப் பற்றித்தான் ஒவ்வொரு நாளும் கவலைப் படுகிறேனே தவிர, மற்றவைகளைப் பற்றி நான் கவலை கொள்வதில்லை.

—ஆப்ரகாம் லிங்கன்

யோசனைகளுக்குப் பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டான். மித்திர தேவனை அழைத்து வர ஆள் அனுப்பிவிட்டு, பர்ணசாலையின் முன் புறத்தில் உலவிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் ஓட்டமும் நடையுமாக மித்திர தேவன் அங்கே வந்து சேர்ந்தான்,

"மித்திர தேவ, வா!"

"என்னை அழைத்தீர்களாமே?"

"ஆமாம்! உன் திறமையினால் தான் ஒரு திட்டம் நிறைவேற வேண்டும்!"

"சொல்லுங்கள்! என் உயிரைக் கொடுத்தாகிலும், அதை நிறைவேற்றுகிறேன்!"

"உன் உயிரைக் கொடுக்க வேண்டாம், மித்திர தேவா! உயிரைப் பறிக்க வேண்டும்!"

"என்ன? என்ன?"

"பதறாதே—பயப்படாதே—மித்திர தேவா! என் திட்டம் சுலபமானது!" என்று கூறிவிட்டு, அவன் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான், பதஞ்சலி!

மித்திர தேவனின் முகத்தில் பயத்தின் ரேகைகள் மின்னலிட்டோடின!

"என்ன சொல்லி அழைத்துப் போவது?"

"அபூர்வமான நாடகம் என்று சொல்! வேலை எதுவாக இருந்தாலும் விட்டு விட்டு, நாடகம் என்றால் அவன் தான் ஓடிவந்து விடுவானே! இந்தத்திட்டம் நிறைவேறி விட்டால், : இரண்டு விதங்களிலே நமக்கு லாபம்! ஒன்று, நம் இனத்தின் பகைவன் ஒழிவான்! மற்றொன்று, பௌத்தர்களின் மீது அரசனின் கோபம் இன்னும் அதிகமாகும்!"

"இடம்?"

"பர்ணசாலையைவிட வசதியா— இடமும் வேறு இருக்கிறதா?"

"இன்றே செய்ய வேண்டுமா?"

"அல்ல! உள்ளத்தைத் தைரியப் படுத்திக்கொள், உன்னைத் திரும்பவும் சந்திக்கிறேன்! அன்று கூறுகிறேன், என்று இதைச் செய்ய வேண்டுமென்று!"

* * *

விதர்ப்ப நாட்டு வேந்தன் தன் மகள் மாளவிகாவை அக்னிமித்திரனுக்குத் தாரைவார்த்துத் தர ஒத்துக் கொண்டான்!

அரச சபை கூடியிருந்தது.

அந்தச் சமயத்தில், சிகப்புத் துணியால் கட்டப்பட்ட ஒரு மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு மித்திரதேவன் மன்றத்தினுள் நுழைந்தான் புலம்பிக்கொண்டே!

மன்னனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. "அபசகுனம்! அபசகுனம்!" என்று முணுமுணுத்தான்.

பதஞ்சலி ஆசனத்தைவிட்டு எழுந்து, அரசனைக் கோபம் தணியும்படி வேண்டிக்கொண்டான்.

மித்திரதேவா! இதென்ன கோலம்? ஏன் கதறுகிறாய்?" என்று பதஞ்சலி கேட்டதும், மித்திர தேவன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டே நடந்துவந்து, வேந்தனின் காலடியில் வைத்தான்!

"இதென்ன கோமாளிக்கூத்து?" என்று ஆத்திரத்தோடு கூறிக் கொண்டே, காலடியிலிருந்த மூட்டையை வேகமாக எட்டி உதைத்தான், மன்னன்!

சிறிது தூரத்தில் போய் விழுந்த அந்த மூட்டையை ஓடிச் சென்று எடுத்து, தன் மார்போடு அணைத்துக்கொண்டு திரும்பவும் குரலெடுத்து அழ ஆரம்பித்துவிட்டான், மித்திரதேவன்!

"இவனை இழுத்துக்கொண்டு போகாமல், இன்னுமா வேடிக்கை பார்க்கிறீர்கள்?" என்று அரசன் ஆவேசத்தோடு கத்தினான்.

"பொறு அக்னிமித்திரா, பொறு; இங்கே வா, மித்திரதேவா! ஏன் அழுகிறாய்? ஏன் அந்த மூட்டையை வேந்தனின் காலடியில் வைத்தாய்? அதில் இருப்பது என்ன?"

"என் ஆருயிர் நண்பனின் தலை!" என்று தேம்பிக்கொண்டே : மித்திர தேவன் கூறியதைக் கேட்டதும், சபையில் நிசப்தம் நிலவியது.

"உன் நண்பனின் தலையா?" என்று ஆச்சரியத்தோடு அரசன் வினவினான்.

"ஆமாம் அரசே! என் நண்பன் சுமித்திரனின் தலை!"

"என்ன?"

"தங்கள் மகன் சுமித்திரனின் தலைதான்!"

மன்றத்திலிருந்தவர் அனைவரும் ஏககாலத்தில், அலறிக்கொண்டே எழுந்தனர்.

அக்னி மித்திரன் கதறிக் கொண்டே ஓடி, மூட்டையை வாங்கி அதை அவிழ்த்தான்!—அலறினான்.

"மித்திர தேவா, இந்தக் கொடூர செயலை செய்த வஞ்சகன் யார்? சொல்! விரைவாகச் சொல்!" என்று கடுங் கோபம் கொண்டவனைப் போல பதஞ்சலி கேட்டான்!

"ஒரு பௌத்தன்!" என்று தேம்பும் குரலிலே பதில் வந்தது!

"ஒரு பௌத்தனா? மன்னனின் ஒப்பற்ற மகனின் தலையை வெட்டியது ஒரு பௌத்தனா? இந்நாட்டின் இளவரசனின் பொன்னான உயிரைப் போக்கிய மாபாவி, ஒரு பௌத்தனா?" ஆத்திரத்தில் தோய்த்தெடுத்த வார்த்தைகளை அள்ளி வீசினான், பதஞ்சலி!

"அந்தப் பௌத்தனுக்கு ஒரு மகன் இருந்தானாம்! அந்த மகனின் தலையை நம் இளவரசர் வெட்டி விட்டாராம்! ஆகவே அவன் பழிக்குப் பழி வாங்கக் காத்திருந்து, இந்தப் பாதகச் செயலை புரிந்தானாம்!"

"எங்கே இருக்கிறான் அந்தப் படுபாவி! சொல்! விரைவாகச் சொல்!" பக்கத்திலிருந்த ஒரு வீரனின் வாளை உருவி எடுத்துக் கொண்டு, பதஞ்சலி இப்படிக் கொக்கரித்தான்!

"அவனும் வாளினால் குத்திக் கொண்டு இறந்து விட்டான்!" என்று மித்திர தேவன் கைகளைப் பிசைந்துகொண்டே பதிலளித்தான்!

"ஒரு பௌத்தன்!" என்று கோபத்தோடு கூறிக் கொண்டே பதஞ்சலி முகத்தைத் திருப்பினான்!

அக்னிமித்திரன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மகன் சுமித்திரனின் முகத்தை உற்றுப் பார்த்தான்! வேதனையால் துடி துடித்தான்!" "சுமித்திரா! சுமித்திரா!" என்று தரையில் மோதிக் கொண்டு கதறினான்! துக்கத்தைத் தாங்கமுடியாமல் உதட்டைக் கடித்துக்கொண்டான்! கண்ணீர் அவன் பார்வையை மறைத்துக் கொண்டது!

★

உலக அரசியல்

குமுறலும், கொந்தளிப்பும்

—எஸ். வேதரத்னம், எம். ஏ

1914-1939. இவ்விரு எண்களுக்கும் நடுவே கிடப்பது கால் நூற்றாண்டு.

முதல் உலக யுத்தம் மூண்டது, 1914-ல். மறுபடியும் அது வெடித்தது, 1939-ல். இவ்விரண்டையும் பிரிப்பது, ஒரு கால் நூற்றாண்டுதான் மிகக் குறுகிய இடைக்காலம் ஆனால், நடந்த சம்பவங்களோ மிகப் பெரியன. உலகம் நடுங்கிற்று, உலக சமுதாயத்தின் அச்சு முறிந்தது.

அடங்காப் பசி கொண்ட பெருந் தீ, இரண்டு தடவைகள், உலகை வளைத்து எரித்தது அதன் நாக்கு, வானத்தை எட்டிப் பார்த்தது. அதன் பசிக்கு, இலட்சக் கணக்கான மக்கள் இரையாகினர்.

மூன்றாம் முறையாக, மறுபடியும் தீ மூளுமோ என்ற அச்சம், இப்பொழுது மக்களை வாட்டுகிறது, அச்சத்தின் காரணமாக, ஆபத்தை நோக்கி விரைந்து செல்கிறது, ஒளியிழந்த, உலக சமுதாயம்.

இரண்டு யுத்தங்களுக்கு நடுவே, இருபத்தைந்து ஆண்டுகள் கொண்ட இடைக்காலம்! மறுபடியும் எட்டிப் பார்க்கிறது, மூன்றாவது யுத்தம்! ஏன் இரண்டு தடவைகள் மக்கள் ஒருவரை யொருவர் கொன்று குவித்தனர்? உரம் இட்டுப் பண் செய்து, பச்சைப்பயிர் விளைவிக்கும் நிலத்தில், மக்களின் பிணமலைகளை இருமுறை அடுக்கியது போதாதா? மறுபடியுமா இந்த அடாத செயலுக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்? இச்சூழ்நிலை உண்டாகக் காரணம் என்ன?

காரணங்கள் பல, கணக்கில் அடங்காதவை. இரண்டு யுத்தங்கள் தோன்றியதற்கும், மறுபடியும் தோன்றுமோ என்ற அச்சம் நிலவுவதற்கும், காரணங்கள் பலப் பல!

சிந்தனை விமானத்திலேறி, கால வானத்திலே சிறிது நேரம் யாத்திரை போவோம்.

இந்த நூற்றாண்டிலிருந்து திரும்பி, பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு மேல் பறந்து செல்லுவோம். இன்னும் கொஞ்சம் விரைவாகப் பறந்து, அதற்குப் பின்னுள்ள நூற்றாண்டுகளையும் பார்க்கலாம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு தோன்றிய காலம் முதற்கொண்டு, தான் தனிமையாக வாழ வேண்டும் என்ற அவனது ஆசையுடன், எல்லோரோடும் கூடி வாழ வேண்டும் என்ற மற்றொரு ஆசையும் கலந்து, இவ்விரண்டும் ஒன்றோடொன்று மோதி வருதலைக் காணலாம்.

உலகில். ஒருவனைப் போல மற்றொருவனைக் காண முடியாது. இது இயற்கை அமைப்பு. எங்காவது, இரண்டு பேர்களின் அங்க அமைப்பின் பல அம்சங்களில் ஒற்றுமை காணப் பட்டாலும், எல்லா அம்சங்களிலும் நூற்றுக்கு நூறு ஒற்றுமை காண முடியவே முடியாது. அவரவர்களின் மன அமைப்பும், இவ்வாறு வேறு பட்டதேயாகும்.

ஒவ்வொரு மனிதனும், தன் மனதிற்கு இசைந்த முறையில் வாழ விரும்புகிறான். தன்னுடைய மனைவி, தன்னுடைய குழந்தைகள், தன்னுடைய வீடு, தன்னுடைய நிலம், என்று உரிமை கொண்டாடவும் விரும்புகிறான். இம்மாதிரி உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தன் உயிரையும் இழக்கத் துணிகிறான்.

ஆனால். அதே சமயத்தில், அடுத்த வீட்டுக்காரன் நோயுற்றால், வைத்தியனை அழைத்துவரத் தான் விரைந்து செல்கிறான். தன் வீட்டில் திருமணம் நடந்தால், மற்ற வீட்டுக்காரர்களையும் அழைத்து, விருந்து வைக்கிறான். நன்மை தீமை இரண்டிலும், மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளும் வழியில் அவன் மனம் செல்கிறது.

இவ்வாறு கலந்து வாழ விரும்பும், கூடியவரையில் ஒத்த பண்பாட்டை உடைய பலர், பல ஆயிரம், அல்லது இலட்சம், அல்லது கோடிக் கணக்கில் ஒருங்கே சேர்ந்துள்ள அமைப்பைச் சமூகம் என்று அழைக்கிறோம். இச் சமூகத்தின் உறைவிடம் நாடு எனப்படும். நாட்டின் பொதுக் காரியங்களை நிர்வகிப்பது அரசாங்கம்.

உலகில் பல நாடுகள் உள்ளன. சில நாடுகள், தங்களுக்குள் மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஒற்றுமையுடன் வாழ்கின்றன. ஒருவன், தன் வீட்டு விருந்திற்கு, ஊரிலுள்ள எல்லோரையும் அழைப்பதில்லை. தன் மனதிற்கிசைந்தவரை மட்டுந்தான் அழைக்கிறான். அல்லது, குறிப்பிட்ட சிலரின் உதவி, தனக்கு மிக அவசியம் தேவை என்று கருதினால், அவர்களுடன் உறவு கொள்வதற்காக, அவர்களையும் அழைக்கிறான்; உபசரித்து, அவர்கள் மனங்குளிர நடந்து கொள்கிறான்.

உலக நாடுகளின் உறவும், இவ்வாறுதான் ஒத்த பண்பாட்டின் காரணமாகவும், அவசியத்தை முன்

னிட்டும், ஒன்றுக்கொன்று உறவு ஏற்படுகிறது.

தீய எண்ணம் படைத்தவன், மற்றவர்களை அடித்துப் பிழைக்க எண்ணுகிறான். பேராசை பிடித்த ஒரு நாடு, மற்ற நாடுகளைச் சுரண்டி வாழ நினைக்கிறது. நாடு பிடிக்கும் இந்த ஆசைக்கு ஏகாதிபத்தியம் என்ற பெயர் இடப்பட்டுள்ளது. சாம்ராஜ்யம் என்ற மற்றொரு அழகான பெயரும் இதற்குண்டு.

சாம்ராஜ்யங்கள் தோன்றியதற்குப் பேராசை மாத்திரம் காரணம் என்று கூறுவதும் தவறு. ஒருநாடு, தன்னைச் சாப்பிட வந்த மற்ற நாடுகளை முறியடித்து, அவற்றைத் தன்னுள் அடக்கிக்கொள்வதின் காரணமாகவும் சாம்ராஜயங்கள் தோன்ற வகையுண்டு.

தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பதைப் போல, தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டை, மற்ற நாடுகள் சுலபமாக விழுங்கி விட்டால், தங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ எனப் பயந்து, தூங்கும் நாடு மற்றவர்கள் கையில் சிக்காமல் இருப்பதற்காக, அதைத் தாங்களே கைப்பற்ற வேண்டிய அவசியமும் சில நாடுகளுக்குச் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு.

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து வெள்ளையரின் போர்க்காலம் ஆரம்பமாகிறது. குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், பிரிட்டிஷ் தீவுகளிலிருந்தும் கிளம்பிய வெள்ளையர், சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, உலகின் எளிய நாடுகளை ஆக்கிரமித்துப் பிடித்துக் கொண்டனர்.

எல்லாத் திசைகளையும் நோக்கி அவர்கள் நடந்தார்சள். வாள் வலிமையால், சில நாடுகளைத் தங்கள் ராஜதந்திரத்தால் கட்டுப்படுத்தி அடிமையாக்கினர். சில நாடுகளில், புதிதாகக் குடி புகுந்து, தங்கள் கொடியை நாட்டினர். வலிவிழந்த சில நாடுகன், பயந்து, போரிடாமலாயே, அவர்களிடம் சரணடைந்தன.

சுமார் ஐநூறு ஆண்டுகளுக்குள், வடக்கு — தெற்கு அமெரிக்கா கிழக்கு—மேற்கு இந்தியத்தீவுகள், ஆப்பிரிக்காவின் கரையோர நாடுகள், இந்தியத் துணைக்கண்டம், ஆஸ்திரேலியா, இன்னும் பல நாடுகள் வெள்ளையரின் ஆதிக்கத்தின் கீழ்வந்தன.

ஸ்பானிஷ், பிரெஞ்சு, டேனிஷ், டச்சு, பிரிட்டிஷ், போர்ச்சுகீஸிய, சாம்ராஜ்யங்கள் தோன்றின. வெள்ளையரின் நாகரிகம், மொழி, மதம், சட்டதிட்டங்கள், அரசியல் ஸ்தாபனங்கள், இசை, இலக்கியம், விஞ்ஞானம், இவைகள் உலகெங்கும் பரவின.

ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், சிதறிக்கிடக்கும் இஸ்லாமிய நாடுகளும், ஏனைய ஆசியநாடுகளும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. வெள்ளையர் நாட்டுக்கொடிகள், எட்டுத் திக்குகளிலும் பெருமிதத்துடன் பறந்தன.

வெள்ளையர் வாழ்வதற்காகவே இந்த உலகம் ஏற்பட்டது. என்று கூறும் அளவிற்கு, அவர்களது ஆதிக்கம் வேரூன்றியது.

பிறகு, இங்கிலாந்தில், தோன்றிய தொழிற் புரட்சி, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. விஞ்ஞானத்தின் வெற்றிச் சின்னங்கள் போன்ற இயந்திரங்களின் மூலம், மனிதனின் வாழ்க்கை வசதிகள் பெருகின.

அடிமைப்பட்ட நாடுகளின்மூலம் பொருள்களெல்லாம். வெள்ளையர் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அங்குள்ள இயந்திரங்களுக்கு ஆகாரம் அளிப்பதற்காக கீழ்நாட்டினரின் செல்வங்களெல்லாம், வெள்ளையரின் நாடுகள் நோக்கி விரைந்தோடின.

முக்கியமாக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், உலகத்திற்கே ஒரு புதுமையாகக்காட்சியளித்தது. அதன் சீரும், சிறப்பும், செல்வமும், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் வசதிநிலை அடைந்தன

உலகின் எல்லா நாடுகளிலும், பிரிட்டிஷ வியாபாரம் பரவியிருந்தது, ஏழு கடல்களிலும், பிரிட்டிஷ் கொடி தாங்கிய கப்பல்கள் ஓடின. ஐந்து கண்டங்களிலும், பிரிட்டனுக்குக் கட்டுப்பட்ட நாடுகள் இருந்தன.

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து, நமது நூற்றாண்டின் ஆரம்பம் வரையில், சரித்திரம் காட்டும் உலகின் பொதுநிலைமை மேலே தரப்பட்டது. இப் பொதுநிலைமையை ஊன்றிப் பார்த்தால், இரண்டு உண்மைகள் தெளிவாக விளங்கும்.

ஒன்று: பற்பல காரணங்களுக்காக, உலகின் பல நாடுகள், தங்களுக்குள் நல்லுறவும் நட்பும் ஏற்படுத்திக்கொண்டு வாழ விரும்பி, உலகின் பல சமூகங்களைப் பொதுநலம் கருதி, ஒன்றாகத் திரட்டி, உலக சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், சர்வதேச அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சி ஒரு பக்கம்.

இரண்டு: குறுகிய, சுயநலம் காரணமாகவோ, அல்லது தற்காப்பிற்காகவோ சிலநாடுகள், மற்ற நாடுகளை ஆக்கிரமித்து, சர்வதேச ஒற்றுமையை உடைக்கச் செய்து வரும் முயற்சி மற்றொரு பக்கம்.

ஒரு பக்கம், ஒற்றுமை உணர்ச்சி மற்றொரு பக்கம், பகைமையின் வேகம். ஆனால், எல்லா ஒற்றுமை உணர்ச்சியும் தாராள மனப்பான்மை காரணமாக ஏற்பட்டதென்றும், பேராசை மாத்திரந்தான் பகைமைக்குக் காரணமென்றும், தெளிவாகக் கூறுவதற்கில்லை.

வியாபாரம் உலகெங்கும் பரவின. பிறகு, வியாபாரத்திற்கான விதிக

பூத்தது பொன்யுகம்!

பூத்தது பூத்தது
பொன்யுகம்—இனி
பூரண மாகஎங் கும்சுகம்!

ஆர்த்தது வெற்றி
முரசொலி—துன்பம்
அத்தனைக்குமே பெருங்கிலி!

கோர்த்தனம் ஒற்றுமை
கை கொண்டு—இனி
குவலயத் தீடெவர் தானுண்டு?

வேர்த்தது நெஞ்சினில்
வீரம் தான்—நன்கு
விளைந்தது தோளிலே பூரிப்பு!

'தமிழழகன்'

ளும், சாதனங்களும் உலக நாடுகள் எல்லாவற்றிலும் அநேகமாக ஒரே மாதிரியாக இருந்தால்தான் உலக வியாபாரத்தை நடத்த முடியும்.

இந்த வசதிகளைப் பெறுவதற்காக, வியாபார ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. முதலில், ஒவ்வொரு நாடும், தனித் தனியாக, மற்ற நாடுகளுடன், ஒப்பந்தங்கள் செய்து கொண்டது.

பிறகு, சில பொது விதிகளை, எல்லா நாடுகளும் அனுசரிக்க வேண்டுமென்று, ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

அதன்பின், ஒப்பந்த விதிகளை மீறும் நாடுகளை, எப்படித் தண்டிப்பதென்பது ஆராயப் பட்டது. இறக்குமதித் தீர்வை, தபால் தந்தி பரிவர்த்தனை, வியாபார அடையாளங்கள் (Trade marks), ரெயில்வே போக்குவரத்து, கப்பலோட்டும் மார்க்கங்கள், சர்வதேச நாணயம், சர்வதேச ஆறுகள், போரில் ஒரு பக்கமும் சேராது நடுநிலைமை வகிக்கும்நாடுகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், ஆகிய இவை பற்றியும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும், சர்வதேச ஒப்பந்தங்கள் ஏற்படலாயின.

இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம், இவைகளைப் பற்றிய சர்வதேச ஸ்தாபனங்கள் நூற்றுக் கணக்கில் தோன்றின.

வியாபார அவசியம் காரணமாக ஏற்பட்ட சர்வதேசக் கூட்டுறவு இவ்வாறு, மற்றத் துறைகளிலும் பரவிற்று. பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள், ஒரே கட்டிடத்தில், ஒரே மன்றத்தின் கீழ்க் கூடிக் கலந்து பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்பு, அடிக்கடி எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டதால், உலக நாடுகள் ஒன்றுடனொன்று நெருங்கி, ஒன்றாகக் கலந்து, நல்லுறவு கொண்டாடும் நாள் நெருங்கி வந்தது.

இந்த நல்லுறவை வளர்ப்பதற்கு வியாபார அவசியம் ஒரு முக்கிய காரணமாக இருந்ததெனினும், விரிந்த மனப்பான்மை கொண்ட இலட்சியவாதிகளின் கனவும் ஒரு காரணம், எனக் கூறலாம்.

கனவு வீண் போகவில்லை. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சர்வதேசக் கூட்டுறவு, ஸ்தாபன உருவம் (Organizational shape) அடைய ஆரம்பித்தது. உலக சமாதானம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, நூற்றுக் கணக்கான சங்கங்கள் எல்லா நாடுகளிலும் தோன்றின. இம்மாதிரி 160 சங்கங்கள் ஒன்றுகூடி, ஸ்விட்ஸர்லந்தின் பேர்ன் நகரில், 1891ல், தங்கள் சங்கங்களின் நிரந்தரத் தலைமைக் காரியாலயம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன.

சென்ற நூற்றாண்டின் இறுதியில், அதாவது 1899-ல் ஹேக் சமாதான மாநாடு கூடிற்று! இம்மாநாட்டில், ஐரோப்பிய நாடுகளும், வட அமெரிக்க, ஆசிய நாடுகளும் கலந்து கொண்டன. ஆனால், ஆயுதக் குறைப்பைப் பற்றிய உருப்படியான முடிவுகள் எதுவும் செய்யப்படவில்லை. இருப்பினும், முதன் முதலாக, உலக நீதி மன்றம் ஏற்பட்டது, இம் மாநாட்டின் முயற்சியால்தான்.

தகராறில் தீர்ப்புக் கூறும் உரிமையும், அந்தஸ்தும் நீதி மன்றத்திற்கு உண்டு. ஆனால், தீர்ப்பை நிறைவேற்ற அதற்கு அதிகாரமில்லை. அன்றும், இன்றும், அதே நிலையில் தான் இயங்கி வருகிறது, இந்த விநோதமான நீதி மன்றம்.

உலக சமுதாயம் இவ்வாறு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கையில் திடீரென இடி விழுந்தது. வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தது.

1914-ம் ஆண்டு ஜூன் 28-ம் தேதி. ஆஸ்திரிய நாட்டுச் சிங்காதனத்திற்கு வாரிசான ஆர்ச்டியூக் பேர்டினண்ட் கோமகனையும், அவனது மனைவி சோபி என்பவளையும், ஒரு வெறியன் சரஜீவோ நகரத்து வீதியில் சுட்டுக் கொன்றான்.

ஜூலை மாதம் 28-ம் தேதி காலை 11 மணிக்கு, செர்பியா நாட்டுடன் தான் போர் தொடுத்திருப்பதாக, ஆஸ்திரியா பிரகடனம் செய்தது,

செர்பிய நாட்டு மக்களுடன் நெருங்கி உறவு கொண்டிருந்த ரஷ்யா, ஆஸ்திரியாவிற்கு எதிராக படை திரட்டிற்று.

ஆஸ்திரியாவின் அன்பனான ஜெர்மனி, ரஷ்யாவை எதிர்ப்பதாக போர்ப் பிரகடனம் செய்தது, ஆகஸ்டு முதல் தேதி மத்தியானம்.

ரஷ்யாவுடன் நல்லுறவு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்த பிரான்ஸ், ஜெர்மனியை எதிர்த்துப் போர் முரசு கொட்டிற்று.

ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி இரவு 11 மணிக்கு, ஜெர்மனியுடன் தான் போர் தொடுத்திருப்பதாக பிரிட்டன் அறிவித்தது.

இவ்வாறு ஆரம்பித்தது முதல் உலகயுத்தம். 1914-ம் ஆண்டு ஆகஸ்டு 4-ம் தேதி நள்ளிரவில் ஆரம்பித்த இந்த யுத்தம், 1918ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதி காலை 11-மணிக்கு முடிந்தது.

நாடுகள் ஒன்றுகூடி வாழ விரும்புவது போல், தனித்து வாழவும் விழைகின்றன என்பதை முதலில் குறிப்பிட்டோம். அவைகளை இந்த இடத்தில் நினைவிற்குக் கொண்டு வருதல் அவசியம்.

ஜெர்மனி, ஆஸ்திரியா—ஹங்கேரி துருக்கி, இவை ராணுவ சாம்ராஜ்யங்கள் (Military empires), முடியரசுகள். பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், இதாலி, அமெரிக்கா, ஜனநாயக நாடுகள்.

யுத்தத்தைக் கிளப்பிவிட்டால், ராணுவ சாம்ராஜ்யங்களுக்கு வேலையில்லை. உபயோகப் படுத்தாத ஆயுதம் துருப் பிடித்துப் போகும். கொள்ளையடிக்கத் தெரியாதவன், திருடர் கூட்டத்திற்குத் தலைவனாக வாழமுடியாது. கொள்ளை அடிக்காவிடின், அவன், தனது தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

பெரும் சாம்ராஜ்யங்கள் இருப்பதே உலக சமாதானத்திற்குப் பேராபத்து.

மனிதன்

தன்னுணர்வு கொள்ளா மனிதன் இவ்வுலகில் வாழும் தகுதியே இல்லாதவன்.

—கவி இக்பால்.

கால் நூற்றாண்டு ஒரு கொடியில் உருண்டோடியது. மறுபடியும், 1939ல், இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாயிற்று.

அரசியல் வானத்தைக் கரு மேகங்கள் கவ்வின. ஒளி மறைந்தது. இருள் சூழ்ந்தது. கடல்கள் குமுறி எழுந்தன. மலைகள் ஒன்றோடொன்று மோதின.

தீயில் விழுந்து பொசுங்கும் புழுக்கள் போல் மக்கள் மாண்டனர், மறுபடியுயும், ஆறு ஆண்டுகளில். ஏன்?

ஆனால், இங்கு ஒரு கேள்வி எழுகிறது. உலக சமுதாயம் ஒன்று சேர்ந்து நடப்பதற்கு இட்ட பாதைகள் எங்கே? 1914—க்கு முன், பல நூற்றாண்டுகளாகத் திரண்டு வந்த ஒற்றுமை உணர்ச்சி, முதல் யுத்தத்தின் காரணமாக, அடியோடு அழிந்து, மறைந்தா போயிற்று? இரண்டு யுத்தங்களுக்கும் இடையே கிடந்த இருபத்தைந்து ஆண்டுகளிலும், உலக சமுதாயத்தைத் திரட்டி, ஒன்று சேர்த்து ஓருருவாக்குவதற்கு, யாருமே, எந்த முயற்சியும் செய்யவில்லையா?

முயற்சி நடந்தது. ஆனால், அரை மனதுடன், வஞ்சக எண்ணத்துடன் அதில் ஈடுபட்டன, உலக வல்லரசுகள். ஜினீவாவில் நிறுவப்பட்ட சர்வதேச சங்கம் (League of Nations) பாராளுமன்றத்தின் வேலையைச் செய்யுமென எதிர் பார்க்கப்பட்டது. வலியவன், எளியவனை அடித்துத் துன்புறுத்தாமல் பார்த்துக் கொள்வதற்காக அது ஏற்பட்டது. சர்வதேசத் தகராறுகளைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்து, போர் மூளாமல் தடுக்க வேண்டுமென்பது அதன் குறிக்கோள்.

சர்வதேச சங்கம் நிறுவப்பட்ட பொழுது, அதன் உறுப்பினர் எண்ணிக்கை முப்பத்துமூன்று. ஆறு ஆண்டுகளுக்குள், இந்த எண்ணிக்கை, ஐம்பத்தைந்தாக உயர்ந்தது. உலக ஜனத்தொகையின், ஆறில் ஐந்து பாகங்களைக் கொண்ட மக்களின் நாடுகள், இச் சங்கத்தில் இடம் பெற்றன.

“இது உலக மக்களின் இன்ப மாளிகை. இன்றைக் கில்லாவிட்டாலும். நாளையாவது, உலக மக்களெல்லோரும், நம்பிக்கையுடன், இந்த மாளிகைக்குள் நுழைந்து வாசம் செய்வார்கள்” என்று இச் சங்கத்தை வர்ணித்து, அழகாகப் பேசினார் வின்ஸ்டன் சர்ச்சில்.

இன்ப மாளிகை, வெகு விரைவில், துன்ப மாளிகையாக மாறிற்று. மாளிகை கட்டுவதற்கு முதற் காரணமாயிருந்த அமெரிக்கா, “எனக்கு இந்த மாளிகை வேண்டாம்” எனக் கூறி, அதன் தலைவாயிலைக் கூட மிதிக்காமல்; தன் நாட்டிற்குச் சென்று விட்டது. தீண்டத்தகாதவன் போல் கருதப்பட்ட ரஷ்யாவிற்கு, உள்ளே நுழைவதற்கும் அனுமதி மறுத்தனர். மாளிகைக்குள் வசித்த நாடுகளோ, கீரியும் பாம்பும் போல, ஒன்றுடனொன்று பகைமை பாராட்டின.

இந் நிலையில், சர்வதேச நீதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, அநீதி வெற்றியடையச் செய்வதில் ஆர்வம் காட்டப்பட்டது.

அபிசினியாவை விழுங்கிற்று இதாலி. விழுங்கிய இதாலிக்கு அனுசரணையாக, அதனுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தது பிரான்ஸ். ராஜதந்திரத்தில் அனுபவம் மிகுந்த பிரிட்டன், இப்படியும் அப்படியுமாகக் காலத்தை ஓட்டியது.

சீனாவை ஜப்பான் சாப்பிட ஆரம்பித்தபொழுதும், இதே வெட்கக் கேடான நிலைமைதான்.

இன்ப மாளிகை, ஏற்கனவே வேரூன்றியிருந்த சாம்ராஜ்யங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கோட்டையாக மாறியது.

மற்றவர்களுக்கு எது நேரிட்டாலும் பரவாயில்லை, தனக்கு ஆபத்து வராமலிருந்தால் போதும், என்ற மனப்பான்மை கொண்ட பிரான்ஸ், மாகினட் அரண்கள் கட்டுவதில் முனைந்தது, அநீதிக்கு ஆதரவளிப்பதில் முன்னணிக்கு வந்தது. சமாதான உடன்படிக்கையில் தனக்குச் சாதகமான, ஆனால் அநீதியான ஷரத்துகளை, விடாப்பிடியாகப்பிடித்துக் கொண்டு, முன்னேற்றம் ஏற்படாமல் தடை செய்தது

பற்பல நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றி மறைந்த, தனது சாம்ராஜ்யப் பெருமைகளை, மறுபடியும் அடைவதற்கு இடைவிடாது முயற்சி செய்தது, இதாலி.

அப்பொழுதுதான் கம்யூனிஸ்டு நாடாக மாறிய ரஷ்யா, உலகின் மற்ற நாடுகளையெல்லாம் சந்தேகக் கண்கொண்டு பார்வையிட்டது. தன்னைத் தவிர, மற்ற எல்லா நாடுகளும், முதலாளித்துவ சாக்கடையில் நெளியும் புழுக்கள், எனமுடிவு செய்தது. தன்னைப் பற்றித் தனக்குச் சாதகமான பிரசாரம் செய்வதற்கு, சர்வதேச சங்கம் ஒரு தகுந்த கருவி, என்று ரஷ்யா நினைத்ததே தவிர, அச்சங்கத்தின் மூலம் உலக சமாதானத்தையும், ஒற்றுமையையும், வளர்க்கவேண்டும், என்ற எண்ணம் அதற்குத் தோன்றவில்லை,

முதலில் மேல்தளங்கள் இடிந்தன. பிறகு சுவர்கள் சரிந்தன. கடைசியாக மாளிகை தரைமட்டமாயிற்று.

உலகின் அரங்கம், ராஜ தந்திரிகள் இறுமாப்புடன் வீற்றிருந்த இன்ப மாளிகை, அவர்கள் விருந்துண்டு நடனமாடிக் களித்த கேளிக்கை விலாசம், உலகின் தலையெழுத்தை நிர்ணயிக்க வந்த நீதி மன்றம், முடிவில் கழுதை உலவும் கட்டாந்தரையாக மாறிற்று.

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. இரண்டாவது யுத்தமும் முடிந்தது. முடிந்ததிலிருந்து, ஆறு ஆண்டுகளைத்தான் நாம் கடந்து வந்துள்ளோம்,

ஆனால், இதற்குள்ளாகவே, அரசியல் வானத்தில் மறுபடியும் போர் மேகங்கள் சூழ்கின்றன.

கொரியாவில் கடும்போர் நடக்கிறது. பாரசீகத்திற்குப் பக்கத்தில்

முக்கியம்

நான் பலபொருள்களை அறிய, பிறகு சிந்திக்க, சிந்தித்தவற்றை நம்ப, நம்பியவற்றை மனச் சாட்சிக்கு விரோதமின்றி எடுத்துக் கூற, எனக்குச் சுதந்திரம் வேண்டும். இதுவே எல்லா சுதந்திரத்திலும் மிகமிக முக்கியமானது

—மில்டன்

பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் ஊர்ந்து செல்கின்றன. சீனாவில் புரட்சி. எரிமலை கக்கியதால், பழைய அரசாங்கம் அழிந்து, புதிய கம்யூனிஸ்டு அரசாங்கம் ஏற்பட்டுள்ளது. தோற்ற ஜெர்மனி, நான்கு கூறுகளாக அறுக்கப்பட்டுக் கிடக்கிறது. சூயஸ் கால்வாயில், கப்பல் போக்குவரத்துக்குத் தடை. டிரான்ஸ் ஜோர்தான் நாட்டு மன்னன் சுட்டுக் கொல்லப்பட்டான். பாலஸ்தீனத்தில், யூதர்களும் அரபியர்களும், சமர் செய்கின்றனர். இந்தோநேஷியாவில், உள்நாட்டுக் கலகம். இந்தோசீனா, பிரான்சின் விலங்கு பிடியிலிருந்து, விடுதலை அடைய முயற்சிக்கிறது. கிரீஸ் கலகம், இன்னும் குமுறிக்கொண்டுதான் இருக்கிறது. துருக்கி, தனக்குச் சுற்றிலுமுள்ள வல்லரசுகளைப் பார்த்து நடுங்கிச் சாகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில், உற்பத்தி குலைவு. பணப் பஞ்சம், மறுபடியும் போர் இவற்றுள், வல்லரசு என அழைக்கப்படும் பிரான்ஸில், ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு மந்திரி சபை. தென்னாப்ரிக்காவில், தீண்டாமைக்கு ஆதரவு தரும் விசித்திரம். மறுபடியும் ஜப்பான் கிளம்பிவிட்டால் என்ன நேரிடுமோ என்ற பயத்தினால், ஆஸ்திரேலியா, இப்பொழுதிருந்தே தன் பக்க பலத்திற்கு ஆள் தேடுகிறது. கிசான் தொந்திரவிற்கு ஆளான மிராசுதார் மாதிரி, அமெரிக்கா பொறுமையை இழந்துவிட்ட பிரிட்டன், வாய் வேதாந்தம் பேசி, உலக நாடுகளுக்கு உபதேசம் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அண்டை நாடாகிய பர்மாவில், அரசாங்கத்தின் அஸ்திவாரமே இன்னும் பலப்படவில்லை. ஏன், நமது துணைக்கண்டத்திலேயே, காஷ்மீரத்தில் ஒரு சிறிய சண்டை நடந்தது, மறுபடியும் நடக்குமோ என்ற சந்தேகம் வலுக்கிறது. நமது உள்நாட்டு நிலைமையை விவரிப்பதற்கு இது இடமல்ல.

இந்நிலையில், உலக சமுதாயக் குறிக்கோள் என்ன ஆயிற்று என்பதை, வாசகர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சான் பிரான்ஸிஸ்கோ நகரில் உருவான ஐக்கிய நாடுகள் சபை ஏன் சரிவர வேலை செய்யவில்லை? இதுவரை கூறி வந்ததைத் துணையாகக்கொண்டு, இக்கேள்விக்கு வாசகர்களே விடையளிக்க முயற்சிக்கலாம்.

★

மறுமலர்ச்சி இயக்கம்

கா. அப்பாதுரை. எம். ஏ.

திராவிட மறுமலர்ச்சி இயக்கம் பண்டைத் திராவிடர் வாழ்வின் பண்பில் ஊன்றி, திராவிடர் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வளர்த்து, திராவிடர் வாழ்வை வளப்படுத்த முனையும் இயக்கம் ஆகும். அதன் நோக்கம் நாட்டு வளர்ச்சியும் நாட்டு மக்கள் வளமுமேயானாலும், அது பண்பாட்டியக்கமாதலால், மற்ற எல்லாப் பண்பாட்டு இயக்கங்களையும் போலவே நாடு கடந்து உலகை இயக்கும் தன்மையுடையது. நாட்டுடன் உலகையும், உலகுடன் நாட்டையும் இணைத்து, அது நாட்டை உலகத்தின் ஒரு நல்லுறுப்பாகிறது.

திராவிட மறுமலர்ச்சி இயக்கம் பண்பாட்டியக்கமாதலால், அதன் வரலாறு வருங்காலத் திராவிட நாட்டு வரலாற்றில் மட்டுமன்றி, வருங்கால உலக வரலாற்றிலேயே இடம்பெற வேண்டிய ஒன்றாகத் திகழ்வது உறுதி.

மேலை உலக வரலாற்று மாணவர் உலக வரலாற்றில் பல இயக்கங்களைக் காண்பர்; ஆனால் ஒரே ஒரு இயக்கந்தான் மறுமலர்ச்சி இயக்கம் (Renaissance) என்று அழைக்கப் படுகிறது. மேலீடாகப் பார்ப்பவருக்கு இது இயக்கத்துக்கு ஒரு இயக்கமாகத் தோற்றலாம். உண்மையில் அது எல்லா இயக்கங்களின் தாயாகவும், ஐரோப்பிய நாகரிகத்தின் தாயாகவும் இருக்கக் காண்பர்; உலக வரலாற்றை அந்த இயக்க அடிப்படையிலேயே மூன்று ஊழிகளாக மேலை நாட்டுப் புலவர் பிரித்துள்ளனர்.

மேலை உலக மறுமலர்ச்சி இயக்கத்துக்குத் தாயகமான நாகரிகம் கிரேக்க நாகரிகம். இது கலை ஒளியும் அறிவொளியும் பரவிய நாகரிகம். இது நிலவிய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளைப் பண்டை ஊழி (Ancient Period கி. மு. 1000—கி. பி. 500) என்கிறோம். இந்நாகரிக ஒளி பரவாத காலம் இடைக்காலம் அல்லது இடையிருட்காலம் (Dark or Middle Age) என்கிறோம். பண்டை நாகரிக ஒளி பரவியதற்குக் காரணமான மறுமலர்ச்சி இயக்கக் காலமுதல் இன்றுவரை தற்காலம் (Modern Age) என்கிறோம். இத்தக் காலமே ஐரோப்பிய நாகரிகம் பிறந்த காலம் ஆகும்.

கீழ்நாட்டினும் வரலாற்றில் இதே போல மூன்று பிரிவுகள் உண்டு. திராவிட நாகரிகம் புகழ் வீசிப் பரவியிருந்த காலம் கீழ்நாட்டின் பண்டை ஊழி. இது தமிழ்ச் சங்ககால முடிவுடன் முடிவுறுகிறது. மேல் நாட்டில் கி. பி. 500ல் ரோமப் பேரரசையும் நாகரிகத்தையும் அழித்த காட்டுமிராண்டிகள் கோத்தியர், விசிகோத்தியர், வாண்டவர், ஊணர்கள், மங்கோலியர்கள், ஆகியவர்கள், கீழ்நாட்டினும்

பண்டை உலக நாகரிகத்தை அழித்தவர்கள் இதே ஹூணர்கள், மங்கோலியர்கள், குஷாணர்கள் ஆகியவர்களே. இரண்டு உலகிலும் இதன் பின் அநாகரிக இருள் நிறைந்த ஆட்சியாகிய புராண ஆட்சியும் நிலவிற்று. மேனாட்டு மறுமலர்ச்சி இயக்கத்திலிருந்தே ஐரோப்பிய நாகரிகம் உருவானது போல, திராவிட மறுமலர்ச்சியிலிருக்கும் தற்காலக் கீழ்நாட்டு நாகரிகம் வருங்காலத்தில் கணிக்கப்படும் என்று துணிந்து கூறலாம்.

ஆனால் திராவிட மறுமலர்ச்சி சில வகைகளில் மேனாட்டு மறுமலர்ச்சியிலிருந்து வேறுபட்டு உள்ளது முதலாவதாக மேனாட்டில் நாகரிகத்தைக் காட்டுமிராண்டிகள் முற்றிலும் அழித்து விட்டனர். 1500 ஆண்டுகள் முழு இருள் நிலவிற்று. கீழ்நாட்டில் காட்டுமிராண்டிகள் வடமேற்கு இந்தியாவை மட்டுமே முழுதும் அழித்தனர். கிழக்கும் தெற்கும் அவர்கள் அழிவு முழுவதும் எட்டவில்லை. ஆகவே திராவிடநாடு ஒளிபிழந்தாலும் அழியாது இன்றுவரை நிலவுகிறது.

இரண்டாவதாக, ஐரோப்பாவில் பண்டைத் தாயக நாகரிகம் வளர்ந்தழிந்தமண் கிரேக்கநாடு. அதுமறுமலர்ச்சி அடைந்தது மேலை ஐரோபாவில். ஆகவே அது உலகத்திற்கு மறுமலர்ச்சியாயினும், மேலைஐரோபாவுக்குப் புதுமலர்ச்சியேயாகும். கீழ்நாட்டிலோ திராவிட நாகரிகத்தின் தாயகத்திலிருந்தே மறுமலர்ச்சியும் தொடங்குகிறது. எனவே தான் அது முதலில் மொழியியக்கமாகவும் நாட்டியியக்கமாகவும் தொடங்குகிறது. அதன் உலகப் பரப்பு ஆராய்பவர்க்கன்றி எளிதில் புலனாவதில்லை. ஆயினும் நாளடைவில் அதன் உலகவிளைவுகள், ஆகிய விளைவுகள் தெரியவராமல்போகாது.

மூன்றாவது, கிரேக்க நாகரிகம் பண்டை ஊழியில் வளர்ந்தது. கிரேக்கர்கள், ஆரியர்கள், அவர்கள் நாகரிகம் எகிப்திய, பாபிலோனிய, அஸிரிய நாகரிகங்களின் அழிவிலிருந்தே கிரேக்க நாகரிகம் தோற்றுவித்தவுடன் இதற்கு கிரேக்க எழுத்து முறையும் அதினின்று பிறந்த இன்றைய 24 அல்லது 26 எழுத்துக்கள் கூட்டியே ஏபிரேயம் அரபுமொழிகளின் 34 எழுத்துக்களின் சிறு திரிபுடன்! ஆனால் திராவிடநாகரிகம், கிரேக்க நாகரிகத்தையும் ஆரிய நாகரிகத்தையும் விடப் பழைமையானது. ஆரியருக்குநாகரிகம் தந்த எகிப்தியர், அஸிரியருடன் அது உடன் பிறப்புத் தோழமையும் சமகாலப் பழமையும் உடையது. எனவே, திராவிட நாகரிகத்தின் வேர் பண்டைக்காலந் தாண்டி வரலாற்றுக்கு முற்பட்ட ஊழி (Prehistoric age) அதாவது கி.மு. 1000-க்கு முற்பட்ட பல்லாயிர ஆண்டுக்காலம் சார்ந்தது.

எனவே, திராவிட நாகரிகம் இன்றைய உலக நாகரிகத்தைவிடப் பழமையானது. அது உலக நாகரிகத்தின் தாய். மேனாட்டு மறுமலர்ச்சி இயக்கமும் மேனாட்டு நாகரிகமும் உண்மையில் அதன் தொலைதூர கலையேயன்றி வேறல்ல.

வடநாட்டு ஆரிய நாகரிகம், ஆரியக்கலை என்று கூறப்படுவதெல்லாம் ஹூணரின் அண்ணன்மாராய் வந்த ஆரியரின் வரவால் சீர்கேடுற்ற பண்டைத் திராவிட நாகரிகத்தின் சிதைவுமட்டுமே ஆரிய நாகரிக முன்னேற்றம் என்றால் திராவிட நாகரிகத்தின் அழிவு என்பது தவிர வேறு பொருளில்லை.

திராவிட நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு திராவிட நாட்டில் நடைபெறும் நாட்டியக்கம், பொருளாதார இயக்கம், கலையியக்கம், சமுதாயச் சீர்திருத்த (ஆரிய ஆபாச எதிர்ப்பு) இயக்கம் ஆகியவற்றின் கூட்டமைப்பே திராவிட மறுமலர்ச்சி இயக்கம்.

இவ்வுயிரியக்கத்தின் துடிப்பை இன்று திராவிட மேடைகளில் காணலாம். இளைஞர் நங்கையர் கண்ணொளியில், ஆர்வத்தில், கருத்தில், பேச்சில் அதன் சீரிய ஆற்றல் விளங்குகிறது. ஆனால் அதன் முழுப் பரப்பாற்றல் கட்சி கடந்து, திராவிட இயக்கம் கடந்து, சனாதனிகளைக்கூட மாற்றி வருகிறது. இதில் வியப்புக்கு இடமில்லை. அது தென்கிழக்காசியாவையே மாற்றி அதன்மூலம் உலகையே மாற்றியமைக்கவல்லது. திராவிட வரலாற்றையும் உலக வரலாற்றையும் ஒப்பிட்டுக் காண்பவருக்கு, இது புதிதன்று. என்றும் திராவிடத்தின் ஒளி உலகை இயக்கியே வந்துள்ளது என்று காணலாம்.

★

கருத்திலே புரட்சி!
கதைப் போக்கிலே புதுமை!!
நடையிலே நளின லாவண்யம்!!!

இதயக் குமுறல்

(எஸ். சதாசிவம்)

விலை ரூ 1—8—0

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு. முன்பணம் அனுப்புவோருக்கு மட்டும் எங்கள் செலவில் நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

இன்பவாழ்வுப் பதிப்பகம்
இரத்தின சபாபதிபுரம் P. O.

வருகிறது
சிங்காரி
லலிதா · பத்மினி · ராகினி
S.V.சஹஸ்ரநாமம்
T.K.ராமச்சந்திரன்
T.R.ராமச்சந்திரன்
D.பாலசுப்பிரமணியம்
V.K.ராமசாமி · துரைபாண்டியன்
M.S.S.பாக்கியம் · M.M.ராதாபாய்
ராதாகிருஷ்ணன்
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
நேஷனல் புரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு
குமரவேல் பிக்சர்ஸ்....
ரிலீஸ்
BALU BROS

நன்கொடை

சிறு அரசியல் நாடகம்

பிரங்கி பீமராவ் நாயுடு	காங்கிரஸ் பிரசாரகர்
ஜவுளி ஜம்புலிங்கம்	காங்கிரஸ் எம். எல். ஏ.
வனிதா	ஜம்புலிங்கத்தின் மகள்
நருமலிங்கம்	ஜம்புலிங்கத்தின் தம்பி
மன்னன்	ஜம்புலிங்கத்தின் மகன்
சங்கரலிங்க ஐயர்	ஜம்புலிங்கத்தின் கடை மானேஜர்
இடம்:-	தமிழகத்தில் ஒரு நகரம்
காலம்:-	இப்போது
கண்டவர்:-	யூகம்

[விசாலமான அறை—அறைச் சுவர்களில் காந்தி, நேரு, பட்டேல் ஆகியோரின் உருவப் படங்கள் மிகப் பெரிய அளவில் மாட்டப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் எம். எல் ஏ. ஜம்புலிங்கம் தூய கதருடையில் தோற்றமளிக்கிறார். சோபாவில் சாய்ந்தபடியிருக்கிறார். எதிரில் அன்று வந்த தினசரிகள் பிரிப்பவரின்றி வைத்தபடியே உள்ளன. 'வந்தேமாதரம்' என்று கூறிக்கொண்டே உள்ளே வந்த காங்கிரஸ் பிரசாரகர் பீரங்கி பீமராவ் நாயுடுவை வரவேற்கிறார்]

ஜ:- வா, தம்பீ, வா. ஏது இவ்வளவு நேரத்தோடே, இவ்வளவு தூரம்?

பீ:- எல்லாம் உங்களைப் பார்த்துப் போகத்தான்.

ஜ:- நல்லா பாரு, தம்பீ—நிக்கிறியே, உக்காரு.

[பீமராவ் உட்காருகிறார்]

பீ:- நாட்டிலே, காங்கிரஸ்காரன் என்று சொல்லிக்கொண்டு வெளியில் வாமுடியவில்லை. அப்படி செய்துவிட்டார்கள், இல்லாததையும், பொல்லாததையும் பேசி, காங்கிரஸ் என்றாலே கசக்கிறமாதிரி பண்ணிவிட்டார்கள். காங்கிரஸ் என்றாலே வெறுக்கும்படி, மக்களை மாற்றிவிட்டார்கள்! திராவிடத்தான்களுடைய கொட்டம் வளர்ந்துகொண்டே போய்விட்டது. அவன்களை அடக்கலேன்னா, காங்கிரஸ் இனி செத்துபோய்விட்டதென்றே வைத்துக்கொள்ள வேண்டியதுதான்!

ஜ:- சரி, தம்பீ! இப்ப அதுக்கு என்ன செய்யவேணும் சொல்லு.

[ஜம்புலிங்கத்தின் அலட்சியம் அவனுக்குக் கோபத்தையூட்டுகிறது]

பீ:- இவ்வளவு விளக்கமாக நான் நிலைமையை எடுத்துக் காட்டின பிறகுா், எதிர்காலம் எவ்வளவு இடர் உள்ளதாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டிய பிறகும்......

ஜ:- தம்பீ! பதறாமே பேசு. நீ சொன்னது உண்மை—எழுத்துக்கு எழுத்து உண்மை, நான் அதைப் புரிந்துகொள்ளவில்லையா என்ன! நல்லா புரியுது. நான் இப்ப உன்னைக் கேட்பது என்னான்னா, இப்ப என்ன செய்யவேணும்னுதான்.

சி. என். ஏ.

பீ:- கேள்வி சரி, ஆனால் நீங்கள் பேசுகிற தோரணை சரியில்லை. நான் வேலை வெட்டி இல்லாமலா வந்திருக்கிறேன்—அல்லது என் சொந்த இலாபத்துக்காகப் பாடுபடுகிறேனு....

ஜ:- இதென்ன தம்பீ. வீணான கோபம்...

பீ:- வீண்தான்..... உங்களைப்போன்றவங்களுக்காக நாங்க மாரடித்துக்கொண்டு அழறது வீண்வேலைதான். எக்கேடாவதுகெட்டும் என்று விட்டுத் தொலைக்க வேண்டியதுதான்......

ஜ:- வெடுக்கு வெடுக்குன்னு பேசாதே, தம்பீ. இப்ப உன் பேச்சை நான மதிக்கவில்லையா...

பீ:- மதிச்சு......?

ஜ:- இவ்வளவு நேரமா நீ சொன்னதை எல்லாம் கேட்டுகிட்டு இருந்தேன்.

பீ - கேட்டு...? நிலைமை புரியுதா உங்களுக்கு. நெருப்பைக் கக்கறானுங்க, திராவிடத்தானுங்க.....புரியுதா...சன்னம் சன்னமாப் பேத்து எடுக்கறானுங்க, செல்வாக்கை...

ஜ:- என்ன சொல்லு தம்பி, இந்தத் திராவிடத்தானுங்க நெருப்பைக் கக்கட்டும், விஷத்தையே கொட்டட்டும், நம்ம காங்கிரஸ் மகா சபையை அசைக்கக்கூட முடியாது.

பீ:- அதுதான் தப்பு என்கிறேன், நிலைமை உங்களுக்குப் புரியவில்லேன்னு சொல்றேன். திராவிடத்தானுங்க கூட்டம், மகாநாடு, நாடகம், பாட்டுக் கச்சேரி, படக்காட்சி, இதிலே எல்லாம் கூட்டம் எப்படிக் கூடுது தெரியுமா உங்களுக்கு...

ஜ:- கூட்டம் கூடிட்டா தீர்ந்து போச்சா......

பீ:- கூட்டம் கூடினு என்னன்னு சொல்றிங்களா! பேஷ்! ரொம்ப நல்லாயிருக்கு உங்க மூளை......

ஜ:- தம்பீ! நல்ல வார்த்தையா பேசு...மூளை நல்லாயிருக்கா இல்லையான்னு எல்லாம் பேசாதே........ சரியில்லே......என் வயசையாவது சவ்னிக்க வேணும் பாரு...நீ பெரிய மேதாவின்னே வைச்சிக்கோ ஆவேசமாப் பேசுறே.....விடாப்பிடியா வேலை செய்யறே...அதனு

லே யே, அனுபவஸ்தர்களோட மனதைப் புண் படுத்தலாமா...

பீ:- ஆத்திரத்திலே பேசிவிட்டேன்...மன்னிக்கணும்...

ஜ:- ஆத்திரம் கூடாது தம்பி! நாமெல்லாம் மகாத்மாசிஷ்யருங்க... பொறுமை வேணும்......ஆத்திரம் கூடவே கூடாது. எதிர்க்கட்சிக் காரனுங்களோட பிரசாரத்தாலே, தீமை வரும்னு சொல்றே. சரி. அதுக்கு என்ன செய்யலாம்...

பீ:- நாமும் கூட்டம் மகாநாடு, நடத்த வேணும்.

ஜ:- இவ்வளவு தானே! செய்துட்டாப் போவுது......நாடகம் கூட நடத்தலாம்...

பீ:- மகாநாடு, நாடகம், இது என்னவேலே செய்யுது தெரியுமா... பட்டிக்காட்டானுங்களெல்லாம்கூட இப்ப, பார்லிமெண்ட், பர்மிட், சட்டம், பத்திரிகை சுதந்திரம் இதை எல்லாம் தெரிந்துகொண்டு பேசறுங்க...

ஜ:- ஆமாம்...பொதுவா, அறிவு வளருது...

பீ:- என்ன...என்ன.....அறிவு வளருதா...! சரிதான்......உங்களுக்கே மயக்கமா இருக்கு, அந்த ஆசாமிகள் பேச்சைக் கேட்டு...

ஜ:- செச்சே......ஒரு பேச்சு முறைமைக்குச் சொன்னேன்...... சரி, தம்பி! மதுவிலக்கு கமிட்டிக் கூட்டம் போகணும்...இப்ப உன் ஏற்பாடு என்ன அதைச்சொல்லு... மகாநாடு நடத்தணும்....

பீ: ஆமாம்...

ஜ: நடத்தி விட்லாம், தம்பி! மகாநாடு நடத்தி, நாலாயிரம் ஐயாயிரம் பணம் கூட மிச்சப்படுத்தறுங்களாமே திராவிடக் கட்சிக்காரனுங்க. நாமும் ஒரு மகாநாடு நடத்தினு, ஆயிரம் இரண்டாயிரம் மிச்சமாகும்......

பீ:- யாருக்கு? நமக்கா! உலகம் தெரியாதவரா இருக்கிறேயய்யா ...அவனுங்களுக்கு மிச்சமாகுது—மகாநாடு நாடகம் எதிலேயும்—அதைப்போல நமக்கும் ஆகுமா...

ஜ:- ஏன், தம்பி, நாமும் பெரிய கொட்டா போட்டு, கொடி மரம் நட்டு, நம்ப கோடிலிங்கம் நாயனக் கச்சேரி, கோகர்ணம் குப்பாயி பாட்டு, எல்லாம் ஜமாய்த்து விடலாம் — அட, ஒரு இரண்டாயிரம் மிச்சம் பிடிச்சா, நம்ம கமிட்டி ஆபீஸ் செலவுக்காவது ஆகும். ஒரு வருஷமா, வாடகை, நான் கையை விட்டுக் கொடுக்கறேன் தம்பி!

பீ:- தலைதலைன்னு அடிச்சிகிட்டு போகலாம்னு தோணுது, உங்கப் பேச்சைக் கேட்டு...ஐயா! ஆர அமர யோசித்துப் பேசுங்க. ஜனங்க, திராவிடத்தானுங்களோட சேர்ந்துவிட்டாங்க...... அதனுலே, அவங்க மகாநாடுன்னு, ஐம்பதனுயிரம்னு இலட்சம்னு ஜனங்க சேர்றுங்க...

ஜ:- போ, தம்பி, சும்மா விளையாடறே........ஐம்பதாயிரமும் இலட்சமும்...

பீ:- உன்னேடு மாரடிக்க என்னுலே முடியாதய்யா, என்னுலே முடியாது ......ஐம்பதாயிரம்னு சொன்னு நம்பிக்கை வரவில்லே... வரவில்லேயேல்லோ—சரி, இதைப் படியுங்கள்

ஜ:- நீயேதான் சொல்லு தம்பி, என்ன இருக்கு—அவனுங்க பேப்பரா...

பீ: இல்லே, நம்ம மித்ரன்...

ஜ:-மித்ரன் என்ன சொல்லுது...

பீ:- கேளுங்க...திராவிட மகாநாடு நடந்தது. பெரிய அட்டகாசம் —ஊர் சுவர் முழுவதும் ஆபாசமான வசை மொழியை எழுதி பரபரப்பை உண்டாக்கிவிட்டனர்.

ஜ:- சரி—ஐம்பதாயிரம்னு எங்கே இருக்கு...

பீ:- நம்ம பேப்பர்லேயே ஐம்பதாயிரம்னு வருமா...வரணுமா — சூட்சமமா இருக்கே அட்டகாசம்—னு— என்ன அர்த்தம் அதற்கு... பெரிய கூட்டம்! நம்ம மித்ரன் நிருபர் பார்த்துப் பிரமிச்சி போயிருக்கிறுர்-ஊர் அமர்க்களப் படறதுன்னு தானே அர்த்தம். ஊர்லே சுவர் பூரா எழுதி இருக்கிறுன்னு, என்ன அர்த்தம். அவ்வளவு ஜரூரா வேலே செய்கிறுன்னு அர்த்தம்...சுவர்லே எழுதிக் காட்டினது நாம்—முதலிலே...

ஜ:- பட்டாளத்திலே சேராதே பணத்தைப் பாங்கியிலே போடாதேன்னு எழுதினுேமே...

பீ: அது மட்டுமா...ஜெய்ஹிந்த்! வந்தேமாதரம் ... இதெல்லாம்? ஆமாம், ஆமாம்—ஊர் பூராவும், அதைப் பார்த்துப் பார்த்து அதனுலேதானே நம்ம கட்சிக்கும் செல்வாக்கு! இப்ப, அவனுங்களிடமிருக்கு, அந்த செல்வாக்கு—அதனுலே அவனுங்க மகாநாடு நடத்தினு, கூட்டம் பிரமாதமா வருது—நமக்கு அப்படி வராது...

ஜ:- அப்படியா...!

பீ:- அதனுலே நம்ம மகாநாட்டுச் செலவு இருக்கே, அதை ஜனங்களிடம் வசூல் செய்வது முடியாது.

ஜ:- டிக்கட்டு விற்கலாமேல்லோ.

பீ:- யார் வாங்குவா......! டிக்கட்டேகூடாது நம்ம மகாநாட்டுக்கு

ஜ:- அப்படியானு, செலவு?

பீ:- செலவுக்காகத்தான் உங்களிடம் வந்தது...

ஜ:- ஏன் தம்பி, நான் பணம் கொடுக்க இஷ்டமில்லாததாலே இப்படிப் பேசுகிறேன்னு எண்ணிக் கொள்ளாதே. என்மனசிலே பட்டதைச் சொல்றேன்....

பீ:- சொல்லுங்க...

ஜ:- இந்த ஜனங்கதான் புத்தி கெட்டு போயி, திராவிடத்தான்களோட சேர்ந்துகிட்டு இருக்கறுங்களே, இப்ப, நாம்ம ஏன், நம்ம பணத்தைப் பாழாக்கிக்கிட்டு, கூட்டம்னும், மகாநாடும்னும் ஏற்பாடு செய்துகிட்டு இருக்கணும்! தானு திருந்தட்டும்னு விட்டு விட்டா நல்லதில்லையா...

பீ:- விட்டு விட்டா, நம்ம கட்சி இருந்த இடத்திலே புல் முளைக்கும்... இப்பவே வெளியே தலை காட்ட முடியலே, இன்னும் கொஞ்சம் வளரவிட்டா, உங்களைப்போல, எப்படியோ ஆகட்டும்னு இருந்து

ஒரே உரிமை

தன் சொந்த எண்ணங்களை எந்தக் காலத்திலும் வெளியிட மனிதர் எல்லோருக்கும் உரிமையுண்டு. இதனை யாரும் பறிக்க முடியாது. கூடாது! அதுவும், இதற்கு ஜனநாயக ஆட்சியில் ஆபத்து ஏற்படவேகூடாது.

—ஜேம்ஸ் பிரைஸ்

விட்டா தீர்ந்தது, நம்ம கட்சி குப்பை மேட்டுக் கூளமாயிடும்...

ஜ:- சரி... தம்பீ! மகாநாட்டுக்கு, என்னிடம் என்ன எதிர்பார்க்கிறே...

பீ:- நீங்க தான் வரவேற்பு கமிட்டித் தலைவர்.

ஜ:- நானா! ஜில்லா காங்கிரஸ் தலைவருக்கல்லவா அந்த உரிமை.

பீ:- காங்கிரஸ் மகாநாடல்ல இப்பநான் போடவேணும்னு சொல்றது—இது காங்கிரஸ் எதிர்ப்பு ஒழிப்பு மகாநாடு — காவிய காவி காப்பு மகாநாடு...

ஜ;- என்னது......காவிய காவி...

பீ:- அதாவது நமது பழயபுராண இதிகாச காவியங்களையும், சாது சன்யாசி சன்னிதானங்களையும் திராவிடத்தானுங்க ஒழிக்கக் கிளம்பி இருக்காங்க... நாம் காவிய காவி காப்புமகாநாடுபோட்டு அந்தப்பயல்களை வெளுத்து வாங்கவேணும்...

ஜ:- நீ, பேசறது பூரா வேடிக்கையா இருக்கு தம்பீ! நமக்கு ஏன் அந்த வீண்வேலை. காவியக்காரனும் காவி கட்டியும் தங்களைக் காப்பாத்திக்கொள்ள மகாநாடு போட்டுக் கொள்ளட்டும்—நாம்தானா முந்திரிக் கொட்டைங்க.

பீ:- விவரம் தெரியாததாலே இப்படிப் பேசறிங்க -- அந்தப் பயல்களுக்கு எதிரா, ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டிக் காட்டவேணும்—அந்தப்பயல்களை நாம்ம மட்டுந்தான் எதிர்க்கிறோம்னு இருக்கப்படாது—பெரிய பெரிய புலவர்களெல்லாம் எதிர்க்கிறாங்க, பெரிய பெரிய ஞானிகள் எதிர்க்கிறார்கள் என்கிற எண்ணம் ஜனங்க மனசிலே பரவி, பிறகு ஜனங்க, நம்மோடு சேரவேணும்.

ஜ:- இதென்னமோ, தம்பீ, எனக்கு, கொக்கு தலையிலே வெண்ணைவைச்சி பிடிக்கிறமாதிரியாத்தான் படுது......நாம்ம நம்ம காங்கிரஸ் கட்சி மகாநாடு கூட்டி, காந்தி பெருமை, கைராட்டினத்தோட அருமை இதுகளைப் பற்றி எடுத்துச் சொன்னா ஜனங்க திருந்தி வருவாங்க........

பீ:- இனிமேலே என்னய்யா இருக்கு, நாம்பதான் முப்பது வருஷத்துக்குமேலே மூலை முடுக்குக் கூட பாக்கிவிடாம, காந்தி, கதரு, கைராட்டினம் இவைகளோட பெருமையை எடுத்துப் பேசியாச்சி—கேட்டுக் கேட்டு ஜனங்களுக்குப் புளிச்சும் போச்சே—காந்தி, தத்துவத்தை மறந்துவிட்டாங்க. கதரை கள்ளமார்க்கட்டை மறைக்கிறதுணியாக்கி விட்டாங்க, கைராட்டினம் பரணைமேலே இருக்கு, அப்படின்னுதானே இப்ப ஜனங்க பேசறாங்க நம்ம கட்சியைப் பார்த்து. இப்பப் போயி காந்தி கதர் கைராட்டைன்னு பேசினா, காதிலே ஏறுமா, கவைக்கு உதவுமா........

ஜ:- அப்ப......காவிய மகாநாடும் போடணும்......

பீ:- ஆமாம்—இது ஒரு நாள்—அது ஒரு நாள்—பத்து ரூபாய் பிடிக்கும்—இலட்சரூபா பலன் கிடைக்கும் —செலவுன்னு எண்ணக் கூடாது சேவைன்னு எண்ண வேணும்......

ஜ:- அது சரி......

[பீமராவ் கோபத்தின் உச்சக்கட்டத்திற்குப் போய் விட்டார்]

பீ:- என்ன சலிப்பு.......ஏன்யா......! காங்கிரஸ் கட்சியினாலேதான் உனக்கு இந்தச் செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து, எம். எல். ஏ. அதிகாரம், கிடைச்சுது. அந்தக் கட்சிக்கு ஒரு ஆபத்துன்னா கை கொடுக்க மனசு இல்லை. மனஷனய்யா நீ...காங்கிரஸ்காரனா......

[ஜம்புலிங்கம் இதுவரை சாந்தமாக பேசிவந்தார். அவரும் கடுகடுப்போடு பேசத் தொடங்கினார்]

ஜ:- ஆமாம், இப்ப உன்கிட்டே காசு கொட்டிக் கொடுத்தாத்தான் நான் காங்கிரஸ் காரன்னு ஒத்துக்கொள்வே போலிருக்கு—ஏண்டா தம்பீ! நீ வந்து அங்க மகாநாடு இந்த மகாநாடுன்னு சொல்லுவே, உடனே நான், பெட்டிச் சாவியை உன்னிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு வந்தேமாதரம்னு சொல்ல வேணும், நீ தொறந்து உனக்கு வேணும்கிற பணத்தை எடுத்துக்கிட்டு ஜெய்ஹிந்த் சொல்லிவிட்டுப் போயிடுவே — இல்லையா—இதைச் செய்தா நான் நல்லவன்—இல்லையானா பொல்லாதவன் — அப்படித்தானே — இந்த வேலை நல்லா இருக்கு தம்பீ! திராவிடத்தானுங்க எதிர்க்கிறானுங்க, அதனாலே என்கிட்ட பணத்தைக் கொட்டு, அவனும் நானும், நாயே பேயேன்னு ஏசிக்கிட்டு போறோம், நீ, நோட்டு நோட்டா நீட்டு, இதுதானா, உன் பிளான்.........

பீ:- மரியாதையாப் பேசு—தெரியுதா—வார்த்தைகளை அளந்துபேசு — உன்னைப் போல சுயநலக்காரனுங்க இருக்கிறதாலேதான், திராவிடத்தானுங்க அந்தப் போடு போடறாங்க — அவனுங்க பேசறதிலே என்ன தப்பு இருக்கு—கதர் கட்டிக்கொண்டு கள்ள மார்க்கட் கழுகுகள் இருக்குன்னு சொன்னாங்களே, திராவிடத்தானுங்க அவங்க வாய்க்குச் சர்க்கரைபோடவேணும்.

[ஜம்புலிங்கம் எழுந்து நின்று கொண்டு ஆத்திரமாகக் கூவினார்]

ஜ:- ஏலே...ஏய்...! இதோபாரு ......போயி, சந்துமுனையிலே நின்னுகிட்டு கத்து, இங்கே பேசாதே......எழுந்திரு......மரியாதையா......

பீ:- யாருக்கு மரியாதை இல்லே ...யாருக்கு மகாத்மா பேரைச் சொல்லிகிட்டு ஜனங்களை ஏமாத்திகிட்டு, மாசமாசம் மூவாயிரம் நாலாயிரம்னு அடிக்கறியே கொள்ளை நூல் பர்மிட்டிலே, அதைத்தான் திராவிடத்தானுங்க பேசி, மானத்தை வாங்கறானுங்க—வேணும் உங்களுக்கு — இதுவும்

தூற்றிடும் தோழர்களுக்கு

சூரியனை விட மேகங்கள் சக்தி வாய்ந்தவையல்ல; நீடித்தவையுமல்ல. மேகங்கள் எவ்வளவு பெரிதாகவும், எவ்வளவு அடர்த்தியாகவும் இருந்த போதிலும், சூரியனை ஒருநாளும் அடியோடு மறைத்துவிட முடிவதில்லை. அது போலவே நல்லவனை தலைதூக்க வொட்டாது தடுக்கும் கயவர்களும் தோற்பர்.

—கவி தாகூர்

வேணும் இதுக்கு மேலேயும் வேணும்...

ஜ:- வீணா அவமானம் அடையப் போறே — ஏய்! நான் கள்ளமார்க் கட்காரன். அதானே...பேசாதே... ...இதோபார், கதர்போட்டுகிட்டிருக்கறேன்—காங்கிரசிலே இருக்கறேன் பர்மிட்டிலே கொள்ளை அடிக்கிறேன்—அதானே நீ சொல்றது......போடா, போயி, நீயும் அந்தத் திராவிடத்தானுங்களோட கூடிக் கொண்டு, ஏசு, பேசு, உன்னாலே என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துகொள்—நட என் வீட்டை விட்டு......

பீ:- இப்ப, நட! அப்போ ஓட்டோ ஓட்டுன்னு அலைகிற போது, நான் தேவைப்பட்டுது...

ஜ:- நீ இல்லேன்னா, ஓட்டு கிடைக்காது எனக்கு—ஏண்டா, டேட்! அப்படியா எண்ணிகிட்டு இருக்கே—ஆறு தடவை வந்தார்டா என் வீடு தேடி, உங்க தலைவரு எலக்‌ஷன்லே நிக்கச்சொல்லி — கெஞ்சிக் கூத்தாடினாரு......

பீ:- அதை எல்லாம் சொல்லிச் சொல்லித்தான் திராவிடக் கட்சிக்காரன், கண்டிக்கிறான்—உங்களைப் போன்றவர்களாலே, காங்கிரசின் கதியே அதோகதியாகுது.

ஜ:- ஏண்டா சேர்த்தாங்க காங்கிரசிலே......தெரிஞ்சாச் சொல்லேண்டா, டேட்! வந்தேமாதரம்..... உன்னைத்தாண்டா கேக்கறேன், ஏன் சேத்துக்கிட்டாங்க, காங்கிரசிலே, கொஞ்சம் பசை இருக்கிறதாலேதான்—சும்மா இல்லே—சரி, சரி உன்கிட்ட என்ன வீண்பேச்சு —நான் பிளாக்மார்க்கட் — போய்க் கூவு ஊர் பூராவும் — இந்த ஊர் எம்.எல்.ஏ. இருக்கிறாரே, அவர்கதர் கட்டிகிட்டு பிளாக்மார்க்கட் செய்கிற காங்கிரஸ்காரர்ன்னு பேசு, போ......

பீ:- பேசத்தான் போகிறேன் பாரு......

ஜ:- பேசித்தான் பாரேன்...... ஒரு மீடிங் நடத்து, அடுத்த மீடிங்குபோடமுடியுதான்னு பாரு. ஜில்லா கமிட்டியைக் கூட்டி உன் மேலே ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, உன்னை மூணுவருஷத்துக்குக் காங்கிரசிலே இருந்து தள்ளி வைக்கலேன்னா, என் பேரையே மாத்திவைச்சிக்கிறேண்டா, டேய்! மாரடிச்சான்! போய், உன்னாலான தைப் பார்த்துக்கோ. டேய்! மன்னார்........மரியாதையா போய்விடு-

[சத்தம் பலமானதுகேட்டு சங்கரலிங்க ஐயர், எம். எல். ஏ. வின் மண்டி மானேஜர் வெளியே வருகிறார்.

நிலைமையைக் கண்டதும், அவர் கண்களிலே குறும்பு ஒளிவிடுகிறது—புன்னகையும் தவழுகிறது.

எம். எல். ஏ. வும் காங்கிரஸ் பிரசாரகர் பீரங்கி பீமராவும் கோபமாகவே இருக்கக் காண்கிறார்.

இதுபோது தலையிட்டு நிலைமையைச் சீர் செய்தாக வேண்டும் என்று தீர்மானிக்கிறார்.

எனவே குழைவாகப் பேச்சைத் துவக்குகிறார்.]

ச:- (பீமராவைப்பார்த்து) என்ன பீமராவ்! பிரமாதமான கோபம் — ரௌத்ராகாரம்.

பீ:- கோபமா!...எனக்கா! ஆமாம் ...நீ வேறு எப்படிப் பேசுவே... இந்த முப்பது வருஷகாலமாக நான் இந்தத்தேசத்திலே. என் சக்திக்கு மீறின அளவு சேவை செய்து வருகிறேன்......என்னை இப்போது, புதுசா முளைத்த காளான்கள்கண்ட படி ஏசினால்கூட நான் பொறுமையாக இருக்கவேண்டும்போலிருக்கு.

ஜ:- பார், சாமி! பார்......இப்ப ஏசுவது யார்னு நீயே பாரு......... காளானும் நான், காளான்......கேட்டயா........கர்ணம் போட்டாங்க என்எதிரே முன்னே......இரண்டே இரண்டு கதர்வேட்டி போதும், ஒரே ஒரு கையெழுத்து போதும், காங்கிரசிலே சேரலாம்னு, இப்ப நான், காளான்......எப்படி இருக்கு நியாயம்! அதுவும் யார் சொல்றது ......இந்த சோளக் கொல்லைப் பொம்மை...!!

பீ:- மரியாதையாக பேசணும்னு மறுபடியும் சொல்றேன்.....புதுசா மழைக்காலத்திலே முளைக்கிறது காளான் — அதுபோலத் தேர்தல் காலத்திலே கிளம்பும் தலைவர்களைக் காளான் என்று சொல்வது தவறல்ல! ஏசுவதாகாது......கன்களை உருட்டலாம், பற்களை நற நற வெனக் கடிக்கலாம்........உம்ம வீட்டிலே வந்திருக்கிறேன் என்கிறதாலே, ஆளைவிட்டு அடித்துக்கூடப் போடலாம். ஆனா அதற்கெல்லாம் அஞ்சுபவனல்ல, இந்த பீரங்கி பீமராவ் நாயுடு...!

ச:- சார்! பீரங்கி! அதெல்லாம் கிடக்கட்டும் — காளான் என்றால் கேவலம் என்கிறீரா?

[பீமராவ் இந்தக் கேள்வியால் சிறிது திகைக்கிறார். இதுதான் தக்க சமயம் என்று சங்கரலிங்க ஐயர், மேலும் தாக்குகிறார்]

ச:- காளான்—என்றால் எதற்கும் உதவாத, கேவலமான பொருள்—(எம். எல், ஏ.வைக் காட்டி) இவரை ஏசுவது முறையா, இல்லையா என்பதுகூடக் கிடக்கிட்டும், இப்ப, எனக்குத் தெரியவேண்டியது இது, காளான் என்றால் கேவலமானது, உபயோகமில்லாதது என்கிறீரா... இது தெரியவேணும் இப்போ...பிரசாரத்திலே பிரக்யாதி வாய்ந்தவர்... தெரியும். எதிரிகளை ஏசுவதிலே சமர்த்தர்—தெரியும்— இல்லாமலா பீரங்கி பீமராவ் நாயுடு என்று பட்டம் இருக்கு......

ஜ:- (வெறுப்பும் அலட்சியமும் கலந்த குரலில்)பட்டம்! யார்கொடுத்ததாம், பட்டம்...

ச:- (குறும்பு ததும்பும் குரலில்) என் பேச்சை! கவனிக்கவில்லைபோலிருக்கு......பட்டம் இருக்குன்னு தான் சொன்னேன்—பட்டம் தந்தான்னு சொல்லலே...புரியலதோ

குன்றத்தூர் காணிக்கை

உனக்கு நேர்ந்த துன்பங்களையும், துயரம் நிறைந்த அனுபவங்களையும் நீ மறந்து விடு. ஆனால் அவை போதித்த நீதியை மறந்து விடாதே! இந்தப் பண்பு வந்து விட்டால் எதிர் காலத்தில் எத்தகைய இன்னல்களையும் உன்னால் எளிதில் சமாளிக்க முடியும்.

—பீட்டி

...பட்டம் இருக்கு......அவ்வளவு தான்...

பீ:- அதாவது நானே சூட்டிக் கொண்டேன்...

ச:- செச்சே! யாராவது ஆப்த நண்பர்களாக இருப்பவா சூட்டியிருப்பா...நீர் அவாளுக்கு ஏதாவது பட்டம், சர்தார், சுபேதார், அப்படி இப்படின்னு சூட்டியிருப்பீர். இது சகஜம், இதனாலே லோகத்துக்கு நஷ்டம் என்ன! அது கிடக்கட்டும், பீமராவ்! காளான், காளான்னு கேவலமாப் பேசிண்டிருக்கிற, அந்தக் காளான், கேவலமானதுதானுன்னு கேட்கறேன்...

பீ:- ஏன் கேட்கமாட்டீர்! மாதம் ஒரு பச்சை நோட்டு தருகிறரே, இதுவும் கேட்பீர், இன்னமும் கேட்பீர்...

ச:- கோபம்தான் வர்ரது உமக்கு ...என் கேள்விக்குப் பதில் இல்லே —உம்மை நம்பிண்டு இருக்கு காங்கிரஸ், இந்தப் பக்கத்திலே. காங்கிரசுக்குக் கியாதி போயிண்டிருக்குன்னு, இதிலே, என்ன ஆச்சரியம்! காளான் என்றால் கேவலமானது என்கிற அளவுதான் அறிவு இருக்கு...

பீ:- (கோபம் அதிகமாகி) ஏ, ஐயர்! போதும் உன் அதிகப் பிரசங்கம்...நிறுத்து...

ஜ:- இதேதான் சாமீ! இக்கட்டான கேள்வி கேட்டா, கோபம் சொதிக்குது இந்தக் கோமாளிக்கு.

பீ:- யாரய்பா, கோமாளி...எம்முஎல்லு ஏ!...யார் கோமாளி! உன் கோமாளித்தனத்தைக் கண்டுதான் ஊரே சிரிப்பாச் சிரிக்குது...சட்ட சபைக்குப் போனபே, அங்கே என்ன செய்தே...தெரியாதா...... திராவிடத்தானுங்க அதைச் சொல்லிச் சொல்லித்தானே கண்டிக்கிறானுங்க...உம்மைப்போல ஒரு எம். எல். ஏ. சட்டசபையிலே தூங்கலாமான்னு கேள்வி கேட்டாரேல்லோ ...அந்தக் கேள்வியோ, சபாநாயகர் தந்த பதிலோ இன்னது என்று கூட உமக்குத் தெரியாதே—அவ்வளவு சுவாரஸ்யமான தூக்கத்திலே அல்லவா இருந்தீர்...

[எம். எல் ஏ. பதற, சங்கரலிங்க ஐயர், அவரைச் சாந்தப் படுத்துகிறார்]

ச:- பீரங்கி! தூக்கம் வர்ரது சட்டசபையிலேன்னு, என்னய்பா அர்த்தம்! தூங்கறவாளைக் கோபிச்சிண்டு பேசறீர்...சரி...அவா தூங்கினது தவறுன்னே வைத்துக் கொள்வோம்—தூக்கம் வந்ததே சட்டசபையிலே, அதைக் கவனிச்சீரா...என்ன பொருள்? அவ்வளவு அசமந்தமா, சோபையில்லாமல் இருக்கு உம்ம சட்டசபை...

ஜ:- அதைச் சொல்லுங்க சாமி, அதைச் சொல்லுங்க...என்ன பிரமாதமான காரியம் நடக்குது சட்டசபையிலே...முதலிலேயே கட்சிக் கூட்டம் நடத்தறுங்க...அங்கே ஒரு நாலைந்து பெரிய தலைங்க எதை எதையோ எழுதி இதெல்லாம் சட்டம்னு சொல்ல எல்லோரும் வந்தே மாதரம்னு சொல்லி சம்மதம் கொடுத்துவிடுறுங்க, பிறகு, சட்ட சபையிலே கூடி அதையே நிறைவேத்தறுங்க—வெட்டி வேலே—தூக்கம் வராமலா இருக்கும்...

ச:- பீமராவுக்கு இதெல்லாம் புரியாது இல்லே......அவருக்குத்தான் காளான் விஷயமே புரியல்லய்யே! காளான்னு மகாகேவலமானது என்றுதானே எண்ணிண்டிருக்கார்.

பீ:- என்னய்யா இது, காளானை எடுத்துக்கிட்டு நாலு நாழியா காலட்சேபம் செய்திண்டே இருக்கீர்...என்ன கண்டுவிட்டீர் காளானைப்பத்தி....

ச- நானு...! நன்னு சொன்னே, போ...நான் என்ன மேதாவியா... போறது. ..பென்சிலின் தெரியுமோ?

பீ:- பென்சிலின்—மருந்தா?

ச:- ஆமாம்......மருந்துன்னு சாமான்யமானதா...அடடா, சகல ரோக நிவாரண சஞ்சீவி அல்லவா அது...

ஜ:- ஆமாம்...எப்படிப்பட்ட ரணமும் ஆறுதாமே...

ச:- எந்த வியாதியா இருக்கட்டும்...சட்டுக்கு அடங்காமபடிக்கு, மீசுரமாகிவிட்டா, இந்தப் பென்சிலின் தர்ரா...உடனே நோய், பெட்டிப் பாம்பாகிவிடறது...அவ்வளவு அற்புதமான மருந்து பென்சிலின்.

பீ:- (சலிப்புடன்) சரி அதனாலே

ச:- அதனாலே என்கிறீரா...அவசரம் உமக்கு...பீரங்கி அல்லவா, அப்படித்தான் இருக்கும் அவசரம்

பீ:- கேலி போதும் ஐயரே! விஷயத்துக்கு வாரும்......பென்சிலின் அற்புதமான மருந்து...அதனாலே?

ச:- ஒத்துக்கொள்கிறீரா...பென்சிலின் அற்புதமான மருந்து. என்பதை.

பீ:- ஆமாம்......

ச:- அந்தப் பென்சிலின் இருக்கே அது, நீர் கேவலமானதுன்னு நினைக்கிறீரே, காளான், அந்தக் காளானிலிருந்துதான் செய்பறு......

ஜ:- (ஆச்சரிய மேலிட்டு) அப்படியா, சாமி!

ச;- ஆமாம்......காளானிலிருந்துதான் பென்சிலின் செய்பறு...பீமராவுக்கு அது என்ன தெரியும்,பாபம், அவர் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அனந்தம்.......காளானோட அருமை எங்கே தெரியப்போது... ...பீமராவ்! எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதுபோல முகம் இருக்கு. பிரபஞ்சத்திலே, உம்மைத் தவிர மத்தவாளெல்லாம் ஞானசூன்யான்னு எண்ணிண்டு, பெரியவாளை ஏசறதும் மிரட்டறதுமா இருக்கக் கூடாது...பீரங்கிதான் நீர்! ஆனு, எதற்குப்பயன்பட வேண்டும்,பீரங்கி —இவர்பேரிலே குண்டு வீசவா...... பைத்யக்காரர்.....சுமுகமாக, சாந்தமாப்பேசி, என்ன காரியத்தைச் சாதிக்கவேணுமோ, அதைச்சாதிச்சிண்டுபோறதா, சம்வாதம் செய்துண்டு, சச்சரவு செய்துண்டு இருக்கறதா?

ஜ:- நல்லா சொல்லுங்க சாமி!

வினைப்பயன்

வினைப்பயன் என்ற சொல்லால்
விணர்கள் பிழைக்கிறார்கள்
உனைப்பயன் அற்ற செல்லாக்
காசாக மதிக்கின்றார்கள்
தினைத்துணை அறிவு பெற்றால்
சிந்தனைக் கிளர்ச்சியாலே
சுனைப்படு துரும்பே போல
சுழன்றுபின் அழிவரன்றோ?

—அழகுவேலன்

மனதிலே ஆழமா அழுத்தமா படற மாதிரியாகச் சொல்லுங்க......

ச: (பீமராவிடம்)மகாநாடு போட வேணும் என்கிறீர்—செய்ய வேண்டியதுதான்...ஆனா, பூராவும் இவர் தலையிலேயே போடலாமா...இவர், இப்ப, எம். எல். ஏ. அதனாலே, ஏதோ அவருடைய அளவுக்குக் கொஞ்சம் செய்யத்தான்வேணும்—செய்யத்தான் போறார்....ஆனா, இவரைமட்டும் இழுத்தாபோதுமோ ...அடுத்த எலக்ஷனிலே, யார் எம். எல். ஏ. வுக்கு நிற்கப்போறதுன்னு கண்டுபிடியும் — அவரைப் போய்ப்பிடித்து, உலுக்கி எடுக்க வேணுமே...

பீ:— எலக்ஷனுக்காகத்தானா இவ்வளவும்...

ச:- (குறும்பாக)பின்னேஎதுக்கு? நமக்குள்ளே பேசிக்கொள்வோம், பீமராவ்! வேறே எதற்கு இந்த மகாநாடு...

பீ:- எலக்ஷன் விஷயத்தோடு கூட, நமது புனித காங்கிரஸ் மகா சபையினுடைய செல்வாக்கையும் கவனிக்கவேண்டும்—அதுதான் முக்கியம்.

ச:- சரி, அப்படியே இருக்கட்டும் —காங்கிரஸ் மகாசபையோட செல்வாக்கைப் பலப்படச் செய்யறது எதுக்கு...அதுவும் எலக்ஷனுக்குத் தானே...இல்லையானா, வெள்ளைக்காரனை ஓட்டவேணுமோ....இல்லையே, அவா போயிட்டா...இப்ப, காங்கிரசுக்கு அந்த வேலை இல்லை... ஆகவே காங்கிரசோட பலம்எதற்கு பயன்படப்போறது? எலக்ஷனுக்கு ...அதனாலேதான் சொல்றேன்,

அடுத்த எலக்ஷனிலே, யாரார் எம். எல். ஏ. வுக்கு நிற்கப்போறவான்னு கண்டுபிடிச்சு.....

ஜ:- பீமராவுக்குஎப்படித்தெரியும்? அந்த இரகசியம். சாமி! போனஎலக்ஷனிலே, இந்த பீரங்கியும், மத்தவாளும், யாரோ தேசத்தொண்டராம் தாண்டவராயப்பிள்ளை......

ச:- ஆமாம், கொடிப்போர் தாண்டவராயன்னு சொல்லுவா... அதாவது, ஊரிலே உயரமா இருக்கிற மரம், கோபுரம், ஒண்ணு பாக்கி விடாமல், தேசியக் கொடியைக் கட்டிவைக்கறது அவன் வேலை. பாபம், பல தடவை, அடி உதை...

பீ: மண்டையைக் கூட உடைத்திருக்கா...

ச:- யார் தெரியுமா...? உம்ம சம்மந்தி, ஆப்காரி காண்ட்ராக்டர் ஆறுமுகம் பிள்ளையோட தம்பி...

ஜ:- சொன்னாங்க... இவன் அவங்க புதுசா கட்டின பிள்ளையார் கோயில் கோபுரத்திலே கொடி கட்டப் போனானும்......கேள்விப் பட்டிருக்கேன் .... அந்தத் தாண்டவராயனைத்தான் எலக்ஷனுக்கு நிற்க வைக்க வேணும்னு தகிங்கிணத்தோம் போட்டாங்க... கடைசியிலே இவங்க தலைவர், இங்கேவந்தார், நான்முடியாதுன்னு சொல்ல வாய் எடுத்தேன்...இப்ப சொல்றேன், சாமி! நிஜத்தை, ஒரு மந்திரி வேலை கூடத் தருவதாகச் சொன்னாங்க...அதனாலே, அடுத்த எலக்ஷனிலேயும், யாராரை நிற்க வைப்பாங்க என்கிற விஷயம், பீமராவுக்கு என்ன தெரியும்...

பீ:- சரி...உங்களுடைய போக்கு எனக்கு நன்றா புரிந்துப் போச்சி... நான் என்ன செய்ய வேணுமோ அதைச் செய்து கொள்கிறேன்....

[போக முயல்கிறார்]

ச:- பீமராவ்! உட்காருமய்யா, உட்காரும்...மகாநாடு ஏற்பாடானதும், நன்கொடை புத்தகம் எடுத்துவா, நானே கிட்ட இருந்து, பணம் வாங்கித் தருகிறேன்—இவரிடம் மட்டுமல்ல, இன்னும் எனக்குத் தெரிந்த மத்தவாளிடமெல்லாம்...

பீ:- (வெறுப்பாக) பாபம், உங்களுக்கு ஏன் சிரமம் — நான் மகாநாடு கூட்டும் உத்தேசத்தையே விட்டு விட்டேன்...

ப:- விரக்தியா...இவ்வளவு சீக்கிரமாகவா...

பீ:- (கோபமாக) மகாநாடு எதுக்கு.. எதுக்காகமகாநாடுபோட வேணும்...எங்களுக்கு என்ன வந்தது......திராவிடத்தானுங்க, எங்களையா ஏசறாங்க... உண்மைக் காங்கிரஸ் ஊழியர்களுக்கு மரியாதைக் காட்டுவதுதான் எங்கள் கடமை என்றுதான் சொல்கிறாங்க. உண்மைக் காங்கிரஸ் ஊழியர்களே! உங்கள் தியாகத்தை உலுத்தர்கள் பயன் படுத்திக்கொண்டு ஊரை மிரட்டி வாழ்கிறார்களே, கொள்ளை அடித்துக் கொழுக்கிறார்களே, அவர்களோடு கூடிக்கொண்டு, ஏன் பாழாகிறீர்கள், என்றுதான் கேட்கிறார்கள். தியாகத் தழும்புகளுக்குத் தலை வணங்கத்தான் செய்கிறார்கள்! தேர்தல் காலத்தில்லுமல்லுகளும், கள்ள மார்க்கட் கழுகுகளும், வைதீக வல்லூறுகளும், பதவி தேடும் பச்சோந்திகளும், காங்கிரசிலே கூடிக்கொண்டு கொட்டமடிப்பதைத் தான் அவர்கள் கண்டிக்கிறார்கள். இதை ஏன் தடுக்கவேண்டும்—இதை ஏன் நாங்கள் எதிர்க்க வேண்டும்! நன்றாகக் கண்டிக்கட்டும் — சூடு சொரணை உங்களுக்கு வருகிற அளவுக்குக்கண்டிக்கட்டும்—காங்கிரசின் செல்வாக்கைக் கபடர்கள் எப்படிப்பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது உலகுக்குத் தெரிகிற அளவுக்குக் கண்டிக்கட்டும்—எங்களுக்கு என்ன! மகாநாடு போட்டு, உங்கள் சார்பாகப் பேசுவதே அக்கிரமம்—அனியாயக்காரனை அம்பலப்படுத்துகிறார்கள் திராவிடத்தார்—செய்யட்டும். அப்பழுக்கற்ற உழைப்பாளிகள், உண்மைத் தியாகிகள், ஏன் இதற்காகச் சீறவேண்டும். பல காலமாக எந்த காங்கிரசில் சேர்ந்து பாடுபட்டோமோ அந்தக் காங்கிரசின் செல்வாக்கை அழிக்கிறார்களே, என்ற கோபம் எங்களுக்கு. ஆனால் அதற்காகவேண்டி எதிர்ப்புமகாநாடுகள் நடத்தினால், உங்களைப்போன்ற பகற்கொள்ளைக்காரர்களின் ஆதிக்கம்தான் வளருகிறது. உங்களுக்கு இடமளித்த பிறகு, உங்களுடைய

ஒப்பற்ற மூன்று

சிறந்த வாழக்கை வாழ்வதற்கு, இந்த உலகில் மூன்று நற்குணங்கள் மிக மிகத் தேவை! தன்மானம், தன்னறிவு, தன்னடக்கம் ஆகியவை அவசியம் வேண்டும்! இம் மூன்றுந்தான் மனிதனது வாழ்க்கையை மேன்மையடையச்செய்யும்! அவனையும் உன்னத நிலைக்குக் கொண்டு செல்லும்.

—டென்னிசன்

ஆளுகையிலே வந்த பிறகு, காங்கிரஸ் வாழவாமுடியும், அதைக் காப்பாற்றக் கிளம்புவதும் வீண்வேலை. விபரீதமாகவும் முடிகிறது. வீணர்கள் கொழுக்கிறார்கள்.

ஜ:- பீரங்கி அல்லவா ...... பிரமாதமான பேச்சாத்தானே இருக்கும். சரி, சந்து முனைக்குப் போய் சண்டமாருதத்தைக்காட்டு, இங்கே என் பங்களாவிலே வேண்டாம்...

பீ:- நான் பேசுவானேன் — உங்களுடைய யோக்யதையை எடுத்துக் காட்டி விளாசுகிற திராவிடத்தான்கள் செய்யும் பிரசாரத்துக்கு முட்டுக் கட்டை போடாதிருந்தாலே, போதும், உங்கள் மானம் கப்பலேறும், உங்கள் கொட்டம் தன்னாலே அடங்கும்...

[எம். எல். ஏ. வின் திருக்குமாரி, அதுபோது சில ஏடுகளுடன் வருகிறாள், உள்ளே இருந்து. முகத்திலே கோபக் குறிகள் உள்ளன. மூவரும் பேச்சை நிறுத்திக் கொள்கிறார்கள். வந்த வனிதா, அங்கு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, ஒரு ஏட்டைப் பிரிக்கிறாள்]

வ:- யார் வேண்டுமானாலும் சுரண்டுவதற்கு இடமிருக்கிறது. இந்தச் சுரண்டலைத் தடுக்கக் கூடிய சுறுசுறுப்பு மந்திரிமார்களுக்கு இல்லை. மந்திரிகளுக்குத் தந்திரிகளாக இருக்கும் எம். எல். ஏக்களோ எப்படி எப்படியோ இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக எழுதினால் நல்லதோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாகத்தான் எழுத வேண்டும். ஏனென்றால் சூடு சொரணையற்றுப் போனவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

[வனிதா ஏட்டைமூடியபடி]

அப்பா! கேட்டாயா, இந்த கேடு கெட்ட ஏடு எழுதியிருப்பதை

ஜ:- (அலட்சியமாக) கிடக்கிறான்களம்மா!........சாமியே கிடையாதுன்னு பேசற கும்பல், சாதாரண மனுஷாளைக் குறை சொல்வதிலே என்ன ஆச்சரியமிருக்கு.

ச:- ஆயாசமடையறதிலேயும் அர்த்தமில்லே...

ஜ:- நாக்கு புழுத்துச் சாகப் போகிறானுங்க...

பீ:- (புன்னகையுடன் சங்கரலிங்க ஐயரைப்பார்த்து) சாபம் கொடுக்க உத்தேசமோ......

வ:- எல்லோரும் விஷயத்தைப் புரிந்து கொள்ளாமலே பேசுகிறீர்கள்......எவ்வளவு கேவலமாக எழுதியிருக்கிறான் இந்தப் பத்திரிகையிலே......இப்ப இருக்கும் எம். எல். ஏ. க்களுக்குச் சூடு சொரணையே கிடையாதாம் — எவ்வளவு துடுக்குத்தனம்......

ஜ:- அதுகளோட துடுக்குத்தனத்தை நீ என்னம்மா கண்டே...?

ச:- சாட்சாத் சிவபெருமானுக்கு நெற்றிக்கண்ணே கிடையாதுன்னு சாதிக்கிற, சண்டாளக் கூட்டம் எம். எல். ஏ. வைச் சூடு சொரணையற்ற ஜென்மம் என்று ஏசி எழுதுவது, என்ன ஆச்சரியம், வனிதா!...

வ:- எம். எல். ஏ. க்களைச் சூடு சொரணையற்ற ஜென்மங்கள் என்றும், மந்திரிகள் சுறுசுறுப்பு அற்றவர்கள், அதாவது சோம்பேறிகள் என்றும் எழுதியிருப்பது, சூனாமானா என்று எண்ணிக் கொண்டு, பேசுகிறீர்கள்......

பீ:- வேறே, யார் எழுதினது?

வ:- (ஏட்டை அவர் எதிரே வீசி) யாரா? உங்க, காண்டீபம்! காங்கிரசைத் தாங்கிக் கொண்டிருக்கே அதே ஏடு, சோம்பேறி மந்திரிகள், சொரணை கெட்ட எம். எல். ஏ-க்கள் என்று எழுதியிருக்கு 8—6—51-ல். இதுவா கட்சியை வளர்க்கிற இலட்சணம்.

ஜ:- (பதறி) காங்கிரஸ் பத்திரிகையா, இப்படி எழுதுது — எங்களைக் குறித்து......

[பீமராவ் புன்னகையுடன் பத்திரிகையைப் பார்க்கிறார்]

ச:- (சோகமாக) சோம்பேறி மந்திரிகள்! சொரணைகெட்ட எம். எல். ஏ-க்கள்!! அட அடா! எவ்வளவு கேவலமான நிந்தனை......இவ்வளவு கேவலமாக சூனாமானாக்கள் கூடப் பேசுவதில்லை......

வ:- ஆமாம்—அவர்கள் சில சமயம் இந்த மந்திரிசபையே திராவிடர்களுடையதுதான், மந்திரிகள் மீதும் தவறு கிடையாது, எம். எல். ஏ-க்கள் மீதும் தவறு கிடையாது — இவர்களுடைய அதிகாரத்தை எல்லாம், டில்லி எடுத்துக்கொண்டு விட்டதாலே, இவர்களாலே ஏதும் செய்ய முடியவில்லை என்று பேசுகிறார்கள். காங்கிரசை ஆதரிக்கும் காண்டீபம் சோம்பேறி மந்திரிகள் —சொரணை கெட்ட எம். எல். ஏ-க்கள் என்று எழுதுகிறது— இதை ஆதரிக்கவேண்டும் என்று காங்கிரசின் பெயரைக் கூறிக் கொண்டு, பீமராவுகள் பேசுகிறார்கள்...

ஜ:- தெரியுதாய்யா யோக்யதை! என்னமோ, எங்களை, திராவிடத்தானுங்க, திட்டு திட்டுன்னு திட்டறாங்க, எங்கிட்ட பணம் கொடு, நான் மகாநாடு கூட்டி, அந்தத் திட்டைத் துடைச்சிப் போடறேன்னு பேசினயே, இதுக்கு என்ன சொல்றே? காண்டீபம் கண்டபடி ஏசுதே! சூடு இல்லை சொரணை இல்லை, எங்களுக்கு......காசு இருக்

பிள்ளையோ பிள்ளை!

பத்துமா தங்கள்
சுமந்தவள் தான்—அதைப்
பாசத் துடனே
வளர்த்தவள் தான்
வைத்து மடியில்
சிரிப்புடனே—அதை
வாஞ்சை யுடனே
வளர்த்தவள் தான்
கண்டர் குலத்துக்
கருணையக்காள்—தன்
காதல் நிறைந்த ஒரே மகனை
அண்டையில் வாழும்
பழனியப்பன்—இடம்
ஐந்து ரூபாய்க்கே
விலைக்கு விற்றாள்
ஆற்றல் நிறைந்தது
மக்கள் பசி—அது
ஆக்கும் அழிக்கும்
இழித்து விடும்
வீற்றிருக்கும் எங்கள்
ஆட்சியாரோ—இந்த
வீழ்ச்சியை நீங்கள்
பொறுப் பீரோ?

அருணை-வில்லவன்

கேல்லோ, அதைக் கொடு!......எப்படி, சாமி! ஏற்பாடு!!

ச:- காண்டீபம் இப்படித் திட்டுகிறபோது, திராவிடா திட்டுவதிலே கோபப்படக் காரணமே இல்லே...

ஜ:- அதைப் போயி தடுக்க வேணும், ஆயிரம்கொடு, ஐந்நூறு கொடுன்னு கேட்கவந்துவிட்டாரே இந்த ராவு நாயுடு......

[எம். எல். ஏ. தம்பி தர்மலிங்கம் வருகிறார் சிறிதளவு கவலையுடன் வெளியே இருந்து உள்ளே, சிறு மந்திராலோசனைக் கூட்டம் போல இருக்கக்கண்டு யோசிக்கிறார்.]

ஜ:- என்ன தம்பி! ஏன் முடியலையா, போன காரியம்...

த:- (ஆயாசமாக உட்கார்ந்து) வனிதா! ஐஸ்வாடர் கொடு—என்ன கேட்டிங்க......போன காரியமா? அது ஒரு வகையாக முடிஞ்சுது... (பீமாராவைக் காட்டி) இவர் என்ன வேலையா......

ஜ:- கட்சி சமாசாரம் பேச வந்தாரு—பரவாயில்லே — அவர் நம்ம சினேகிதருதான்...

த:- எல்லாரும் சினேகிதருதான் —சினேகிதராலே, ஆபத்து வருகிற காலமாக அல்லவா இருக்குது இப்ப...

ஜ:- என்ன தம்பி, என்னென்னமோ பேசறே...

த:- பீமராவ் ஒண்ணும் சொல்லவே யில்லையா உங்களிடம்?

ஜ:- எதைக் குறித்து?

[வனிதா கொண்டு வந்த ஐஸ் வாடரைச் சாப்பிட்டுவிட்டு, கட்கத்திலிருந்த கணக்குப் புத்தகத்தை எடுத்து, அதற்குள் இருந்த ஒரு பழைய பத்திரிகைப் பிரதியை எடுத்துப் பிரிக்கிறார்]

த:- இதைப் பார்க்கவில்லைபோலிருக்கு...

ஜ: எதை?

த:- நம்ம தலைக்குத் திம்பு தேடுது இந்த ஏடு.

[மெல்லிய குரலில் படிக்கிறார்]

ஒவ்வொரு சட்டசபை அங்கத்தினரும், பார்லிமெண்ட் அங்கத்தினரும், அவர்கள் அங்கத்தினராகும் போதுஎவ்வளவு சொத்துஉடையவர்களாக இருந்தார்கள்! இப்போது எவ்வளவு சொத்து அவர்களுக்கு இருக்கிறது என்று விசாரணைசெய்து கண்டு பிடிக்கவேண்டும்.

[இடையில் நிறுத்த எம். எல். ஏ. கனைக்கிறார்]

ச:- இவ்வளவுதானா...

த:- இன்னும் இருக்கு.

வ:- விசாரணை செய்யவேணுமாமா?

த:- கேளுங்க, மத்ததையும் ... சட்டசபை அங்கத்தினருடைய மாதச் சம்பளம் 150 என்பதுதெரிந்த விஷயம். ஐந்து வருஷத்துக்கு முன்பு சொத்து ஒன்றும் இல்லாதவராயிருந்தவர் இப்போது இலட்சக்கணக்கில் சொத்து, சேர்த்திருந்தால் அது சம்பளத்திலிருந்து சேர்ந்திருக்க முடியாதல்லவா? வேறு எந்த வழியில் அவர் அவ்வளவு பணம் சேர்த்தார் எனும் விவரம் சொல்லியாகவேண்டுமல்லவா?

வ:- என்ன பேப்பர் அது?

ஜ:- வயத்தெரிச்சல் பேப்பர்... வேறென்ன – எம். எல். ஏ.க்களெல்லாம் பணக்காரனாயிட்டானுங்க என்கிற வயத்தெரிச்சலைக் கொட்டுகிற பஞ்சை ஏடு.

த: சாமான்யமான பேப்பரல்ல.... ரொம்ப செல்வாக்கானது... டில்லி வரையிலே செல்வாக்குள்ளது....

ஜ:- பேப்பர் நிறைய செலவாகுதுன்னு சொல்கிறயா...

த:- அது மட்டுமில்லே....டில்லி மந்திரி இருக்கிறாரே, ராஜகோபாலாச்சாரியார், அவருக்கு ரொம்ப வேண்டிய பேபர்....

வ:- கல்கியா...!

ஜ:- கல்கியா இப்படி எழுதுது..,

வ:- எம். எல். ஏ.,க்களெல்லாம் கொள்ளைக்காரனுங்கன்னு துணிச்சலா எழுதுதே...

த:- விசாரணை செய்யவேணுமாம்...

ச:- சொத்து என்ன இருக்குன்னு...

த:- ஆமா, எம். எல். ஏ., ஆவதற்கு முன்பு என்ன இருந்தது, இப்ப எவ்வளவு இருக்கு—எப்படி இவ்வளவு சொத்து கிடைச்சுது இதெல்லாம் கண்டு பிடிக்கவேணுமாம்...

வ:- காண்டீபமே பரவாயில்லை... சொரணையற்ற ஜென்மம் எம். எல். ஏ., என்று எழுதிற்று, கல்கியின் கர்வத்தைப் பாரேம்பா, கொள்ளைக்காரன் என்றே எழுதுது....

ஜ:- (பீமாராவைக் கோபமாகப் பார்த்து) கல்கியும், காண்டீபமும் இப்படி, எங்க மானம், போகிறபடி எழுதி இருக்கு, இதோ இவர் இருக்கிறாரே, பீரங்கி, இவர் சொல்றாரு, பணம் கொடு, நான் உங்களைத் திட்டுகிற திராவிடத்தானுங்களைத் தீர்த்துக் கட்டிவிடறேன்னு.

வ:- திராவிடத்தானுங்க, வேறே கட்சி வேறே இலட்சியம் — இருந்தும், சோம்பேறி மந்திரிகள், சொரணை கெட்ட எம். எல். ஏக்கள் என்றெல்லாம் சொல்றது இல்லையே ....

ஜ:- சொந்தக் கட்சிப் பத்திரிகை......இந்த இலட்சணத்திலே இருக்கு....இதை என்ன மகாநாடு போட்டு தடுக்கப் போறே, பீமு.

த:- 17—6—51 லே எழுதி இருக்கு... அது சரி... என்னமோ வயத்தெரிச்சலிலே, எழுதியிருக்கு, எதையோ எழுதித்தொலைக்கட்டும், இந்தஎழுத்தெல்லாம் நம்மை அசைக்காது, ஆனா இதைப்போல விசாரணை ஏதாவது நடக்குமா...?

ஜ:- விசாரணையாவது மண்ணாவது....

போதும்!

ஆண்டவனின் அருளுக்கு ஆகமங்களும், பிரார்த்தனைகளும் அவசியமே இல்லை! பஜனையும், விரதமும் வேண்டவே வேண்டாம்! தன்னடக்கம், பொதுநலத் தொண்டு, அன்பு, உண்மை ஆகியவையே போதும்!

—கதோபனிஷத்

ச:- ஏன் வீணுவிசாரப்படணும்- கல்கி ஹாஸ்யபத்திரிகை — வேடிக்கையா ஏதோ எழுதி இருக்கும்...

ஜ:- நல்லா இருக்கு, சாமி! உங்க நியாயம்! சொரணைகெட்டவன், சூடு இல்லாதவன், அகப்பட்டதைச் சுருட்டறவன், என்றெல்லாம்எழுதுவது, விகடமா...

வ:- அவர்வேறஎப்படிச்சொல்லுவார் அப்பா! அவர் தானே நம்ம ஊருக்கு, கல்கி ஏஜண்ட்

ஜ:- புரியுது,ஐயரோடபோக்கு...

த:- இது மட்டுமில்லே... அடுத்த எலக்ஷனிலே, இப்ப இருக்கிற எம். எல். ஏக்களை தேர்தலுக்கு நிறுத்தக் கூடாதாம்.

ஜ:- யார் யோசனை இது?

த:- கல்கிதான்... கேளுங்க....

யாரை அபேட்சகராகப் பொறுக்குவது என்ற கேள்விக்குப் பதில்சொல்வதைக்காட்டிலும் யாரைப்பொறுக்கக்கூடாது என்ற கேள்விக்கு விடை சொல்வது எளிது. பொதுமக்களைக் கேட்டால், உங்களுக்குப் புண்யமாய்ப் போகட்டும், இப்போதுள்ள எம். எல். ஏக்களைத் தயவு செய்து திரும்பவும் பொறுக்காதீர்கள் என்பார்கள்.

ஜ:- எப்படி இருக்கு, சாமி, இவா கொட்டுடா பணத்தை மகாநாடு நடத்தன்னு சேட்கறாரு — இவர் எழுதறாரு பழைய ஆட்களை நிறுத்தாதே புதுசா ஆளைத் தேடுன்னு.

ச:- அதனாலேதான் நானும் பீமராவிடம் சொன்னேன், மகாநாடு நடத்த பணம் வேணும்னு, அடுத்த சான்சுக்கு யார் ஆசைபட்டுண்டிருக்காளோ அவாளைப் போய்ப் பாருன்னு.

[எம். எல். ஏ. வின் மூத்த மகன் மன்னன் வருகிறான். பீமராவைக் கண்டு கேலியாகப் பார்க்கிறான்]

ம:- பீமராவ! என்ன, காவிய காவி பாதுகாப்பு மகாநாடாமே.... அப்பாவிடம், நன்கொடைக்காகவா...?

ச:- அந்தமகாநாடுமட்டுமில்லே .. காங்கிரஸ் எதிர்ப்பு ஒழிப்புமாநாடும்

ம:- ஆமாம், அதற்குத்தானே, காண்டீபம் ஆசிரியர் தலைவர்.

ஜ:- யார், யார்?

வ:- சொரணையற்ற ஜென்மங்கள் இந்த எம். எல். ஏ. க்கள் என்று எழுதினரே, அதே காண்டீபம் ஆசிரியர்தான்.

பீ:- மன்னு! நான் இங்கே வந்தது, மகாநாடுகள் விஷயமாகத்தான் — இப்போதோ, அந்த எண்ணமே இல்லை...நான் புது மனிதனாகிவிட்டேன்—

ம:- அப்படியா.......பீமராவ், திராவிடத்தான்கள் கடவுளை மறுக்கும் கயவர்கள், என்று கன்னிக் கோயில் மைதானத்திலே பேசினயே, காரசாரமாக...

ச:- ஆமாம், அவா, நாஸ்தீகப் பிரச்சாரம் செய்துதான் நாட்டைக் குட்டிச் சுவராக்கிண்டிருக்கா....

ம:- கடவுளைக் கும்பிட வேண்டாம் என்று சொல்கிறார்கள்?

ச:- இது கடவுளா, அது கடவுளா, ஆறுமுகமா, ஆனைமுகமா, பசு கடவுளா, பாம்பு கடவுளா, கண்டது அத்தனையும் கடவுள் தானு—என்று பேசறாளே, அது நாஸ்தீகம் தானே...

ம:- அது எப்படி நாஸ்திகமாகும் ...கடவுளே கூடாது என்றால் தானே நாஸ்தீகம்...

ஜ:- ஆமாம்......அது உண்மை தான்...

ம:- கடவுள், கடவுள் என்று கூறிக்கொண்டு கண்டதை பூஜிப்பது கூடாது என்கிறார்கள். இதை நாஸ்தீகம் என்கிறீர். (சட்டைப் பையிலிருந்து ஒரு ஏடு எடுத்து) இதைக் கேளுங்கள் — எடுத்ததை எல்லாம் கடவுளாக்கி வழிபட்டு கோயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விசித்திர வழக்கம், இந்தியாவில் இருக்கிறது. பெயரளவில் பக்தி பண்ணிவிட்டு நடைமுறையில் நேர்மாறான செயல்களைச் செய்வதும் நம்மவர் வழக்கமாகிவிட்டது.

ச:- இது எந்த மேயோ எழுதினது......

ம:- இது மேயோ சொன்னதுமல்ல, திராவிடத்தார் சொன்னதுமல்ல, பாரதத்தின் முடிசூடா மன்னர், பண்டித ஜவஹர், பெங்களூரில் பேசியது, 3–6–51ல் அனுமான் இதழில் வெளிவந்தது. பீமராவ்! இதைத்தான் பத்தாயிரம் துண்டு வெளியீடு போட ஏற்பாடாகி இருக்கிறது, காவிய காவி பாதுகாப்பு மகாநாட்டின்போதுபொதுமக்களுக்குத் தர.

பீ:- மகாநாடு இல்லை—அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன்—ஆனால், இந்தப் பொன்மொழியைப் பொதுமக்கள் படிக்கட்டும், இன்னும் ஒரு பத்தாயிரம் வெளியிடலாம், (சட்டைப் பையிலிருந்து பணம் எடுத்து) இந்தா ஐந்து ரூபாய், என் நன்கொடை.

[அனைவருக்கும் வணக்கம் செய்கிறார்]

வணக்கம். நான் சென்று வருகிறேன்.

[அனைவரும் பீமராவ் நாயுடுவை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்.]



ஆளவந்தார்க்கு............!

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

ஆளவந்தார்க்கும் — ஆளப்பட்டார்க்கும் உள்ள தொடர்பு, காலத்திற்குக் காலம் வேறுபட்டும் நாட்டிற்கு நாடு மாறுபட்டும் வந்திருக்கிறது.

ஆளவந்தார்க்கு அறிவுரை கூறும் பண்பும், பழக்கமும் பண்டைக்கால தமிழ்ப் புலவர்களிடத்தில் சீரிய முறையில் பொருந்தியிருந்திருக்கின்றன. அவ்வறிவுரையைக் கேட்கும் பண்பு, அதன்படி நடக்கும் பழக்கமும் தமிழரசர்கள் பெரும்பாலோரிடத்தில், அந்த நாள்களில் காணப்பட்டிருக்கின்றன.

மக்கள் மன்றத்தின் தீர்ப்பை மதித்து நடக்கவேண்டிய பொறுப்பு அந்த நாள் அரசர்களிடத்தில் எதிர்பார்க்க முடியாததொன்று. ஏனென்றால், அரசனைத் தடுத்து நிறுத்தும் உரிமை அப்பொழுது மக்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆனால் இந்த நாளில் ஆளவந்தார்களாகவரும் அமைச்சர்கள் பொது மக்களின் தீர்ப்புக்கும், எச்சரிக்கைக்கும், அறிவுரைக்கும் செவி கொடுத்தே தீரவேண்டும். ஏனெனில், பெரும்பாலான மக்களின் தீர்ப்பை மதிக்கத் தவறினால், மந்திரிப் பதவியில் அவர்கள் நீண்ட நாள்களுக்கு நிலைத்து நிற்க முடியாது. அத்தகையோரை ஆட்சிப் பீடத்தை விட்டு அகற்றும் உரிமை பெரும்பாலான மக்களின் கையில் வந்துவிட்டது. எனவேதான், அந்தக்காலத்து அரசர்களைக் காட்டிலும், இந்தக்கால அமைச்சர்கள், ஆளப்பட்டோரின் அறிவுரைக்கு மிக்க மதிப்பு அளிக்க வேண்டியவர்களாகிறார்கள்.

ஆளவந்தார்கள் கையாள வேண்டிய பண்புகளைப் பொதுப்படையாக வரையறுத்துக் கூறிய தனிப்பெருந் தமிழ்ப்புலவர் வள்ளுவராவார். அவர் கூறிய அறிவுரைகள் அன்றும் பொருந்தும், இன்றும் பொருந்தும், இனியும் அப்படியே!

தனிப்பட்ட சில அரசர்களுக்கு அவ்வப்போது அறிவுரை புகன்று, அவர்களைத் திருத்தும் பணியினைப் புலவர்கள் எடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது பற்றிய செய்தி, புறநானூற்றில் அங்குமிங்குமாகச் சில காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைக் காண்பதன் மூலம், அவை இக்காலத்துக்கும் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை ஒருவாறு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

குளமுற்றம் என்ற ஊரில் இறந்துபட்ட கிள்ளிவளவன் என்ற சோழ அரசன், சோழ நாட்டை ஆண்டு கொண்டிருந்தகாலம். அப்பொழுது வெள்ளைக் குடி என்ற ஊரில் நாகனார் என்ற புலவர் வாழ்ந்து வந்தார். அவர் புலவராகத் திகழ்ந்தது மட்டுமல்லாமல், சொந்த நிலம் வைத்துக் கொண்டு உழுதுபயிரிட்டு வாழ்க்கை நடத்தி வந்தார். நாட்டில் மழை பெய்யாது. பஞ்சம் ஏற்பட்டு, விளைவு குன்றி, வருவாய் குறைந்து, அவர் வறுமையில் வாடிய காரணத்தால், அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரியை அவரால் செலுத்த இயலவில்லை. ஆனால் வரி வசூலிப்போரோ அவரை விட்டபாடில்லை. வரியைச் செலுத்தும்படி தொல்லைப் படுத்துகிறார்கள். இந்த நெருக்கடி நிலையில் சிக்குண்ட அந்தப் புலவர், வேறுவழியின்றி, அரசனிடத்தில் நேரேசென்று முறையிடுவது என்ற முடிவுக்கு வந்து அரசனிடம் செல்கிறார். அவருடைய முறையீடு, முறையீடாக அமையாமல், அறிவுரையாக மாறிவிடுகிறது. "வேந்தே! உன்னிடத்தில் சில சொல்வேன், கேட்பாயாக! குடிகள் உன்னிடம் நீதி வேண்டி நிற்கும் பொழுது, நீ அவர்கள் குறையை செவிமடுத்து ஆராய்ந்தறிந்து எளிதில் நீதி வழங்குவாயாகில், நீர் வேண்டுங் காலத்தில் மழையைப் பெற்றாற்போல, நீதியைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். நீ உன் இருக்கையின் மேலே ஏந்தியிருக்கும் வெண் கொற்றக் குடை, வெயிலை மறைப்பதற்காகக் கொள்ளப்பட்ட தொன்றா என்றால், அல்ல; 'வருத்த முற்ற குடிமக்களைக் காப்பாற்றுவேன்' என்பதன் அறிகுறியாக விளங்குவதாகும். உன்னுடைய போர்ப் படைகள் களத்திலே கடும் போரிட்டு வெற்றி பயக்கின்றன என்றால், அந்த வெற்றி கலப்பையைக் கொண்டு உழுது பயிரிட்ட நிலத்தில் விளைந்த நெல்லினால் ஏற்பட்ட பலனாகும் என்பதை நீ உணர்வாயாக! மழை பெய்ய வேண்டிய காலத்தில் அது பெய்யாது போனாலும், விளைவு குறைந்தாலும், இயற்கை யல்லாதனவாக சில கேடுகள் மனித செயற்கையினால் தோன்றினாலும், உலக மக்கள் நாடு காக்கும் காவலரைத்தான் பழித்துரைப்பார்கள். அதனை நீ நன்கு அறிந்து கொள்வாயாயின், இல்லாததையும் பொல்லாததையும் கூறுவோரது உறுதியற்ற மொழிகளை ஏற்றுக் கொள்ளாமல், ஏரைப்பாதுகாக்கும் உழவர் குடிமக்களைப் பாதுகாத்து, அவர்களைப் பாதுகாப்பதன் மூலம் மற்ற குடி மக்களையும் பாதுகாப்பாயானால், உன்னுடைய பகைவர்கள் கூட உன்னை வணங்கி நிற்பார்கள்!" என்று கூறுகிறார். அதனைக் கேட்ட அரசன் கிள்ளிவளவன் மனம் நெகிழ்ந்து, அப்புலவர் அதுவரையில் செலுத்த வேண்டியிருந்த வரிகளைத் தள்ளிவிட்டதோடு, அவரது நிலங்களை வரி செலுத்த வேண்டாத முற்றூட்டு (சர்வமான்யம்) நிலமாக மாற்றித் தந்தானாம்.

இன்றைய நிலையில், நமது நாட்டில் மழைபெய்யாது, வளங்குன்றி, பஞ்சமும் பசியும் தலை விரித்தாடும் போது, நாட்டின் பெருங் குடி மக்களாகிய உழவர் மக்களை மதியாது, அவர்கள் தலைமீதே வரிச் சுமையை ஏற்றி, நாடாண்டுவரும் காங்கிரஸ் ஆளவந்தார்க்கு, வெள்ளைக்குடி நாகனார் கூறிய அறிவுரை அப்படியே பொருந்தியிருப்பதைக் காணலாம்.

பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிசிர் என்ற ஊரில் ஆந்தையார் என்ற, புலவர் சிறு பண்ணையாராக வாழ்ந்து வந்தார். அவர் பிசிராந்தையார் என்றே அழைக்கப்பட்டு வந்

தார். அப்பொழுது பாண்டிய நாட்டை ஆண்டு வந்தவன் பாண்டியன் அறிவுடை நம்பி என்பானுவான். அந்த நாட்களில் விளைவில் ஆறில் ஒரு பங்கைத்தான் அரசன் நில வரியாகப் பெறவேண்டும் என்பதாக இருந்துவந்தது. ஆனல் அறிவுடை நம்பியின் ஆட்சியில், வாங்க வேண்டிய அளவுக்குமேல் அதிக வரி வசூலிக்கப்பட்டதால், வரிக் கொடுமையைத் தாங்கமாட்டாதவரானுர்கள் குடிமக்கள். பிசிராந்தையார் மக்களிடத்தே செல்வாக்குப் பெற்றவராக இருந்த காரணத்தால், குடிமக்களின் சார்பாக, நாடாளும் கொற்றவனிடம், குறையை எடுத்துச் சொல்லும் பணியினை மேற்கொண்டார். பாண்டியன் அறிவுடை நம்பி, புலவர்களிடத்தில் பெருமதிப்பு காட்டிவந்தானுதலால், பிசிராந்தையாரின் வரவை ஏற்று, அவருடைய சொற்களுக்குச் செவி மடுத்தான். பிசிராந்தையார் தாம் சொல்லவந்த குறையை அறிவுரையாகக் கூறுவதைக் காணுங்கள். "காய்ந்த நெல்லை அறுத்து சேமித்து வைத்திருந்து, அதில் கவளம் கவளமாகக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து யானைக்கு உணவாகக் கொடுத்துவந்தால், ஒரு மா நிலத்தில் விளைந்த நெல்லும் பல நாட்களுக்கு உணவாக வரும். அப்படிக்கில்லாமல் யானையையே அவிழ்த்து விளைநிலத்தில் விட்டு உண்ணும்படி செய்யத் தொடங்கினுல், நூறு வேலி நிலமாக இருந்தாலும், யானைக்கும் போதுமான அளவு உணவு கிடைக்காது, நெல்லும் பாழ்பட்டுப் போய்விடும். எனெனில் யானையின் வாய்க்குள் போகும் அளவைக் காட்டிலும், அதன் காலால் மிதிபட்டுக் கெட்டுப் போகும் அளவு மிகுதியாக இருக்கும்! அதுபோலவே, அறிவுடைய அரசன் வரி வாங்கும் வழியை ஆராய்ந்தறிந்து அளவோடு வரி வாங்கினுல், அவனுடைய நாடு கோடிக்கணக்கான விளை பொருளைத் தருவதோடு, அரசனையும் வளமோடு வாழச் செய்யும். அரசனிடம் எதை எதை எப்படி எப்படிக் கூறினுல் அவன் மகிழ்ச்சியுறுவான் எனபதை அறிந்து, அப்படியே கூறப் பழகிக்கொண்டிருக்கும் தரங்கெட்டவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் கேட்குமளவுக்கு அறிவிழந்தவனுகி, அரசன் அதிக வரியை விதிப்பானுயின், நிலத்திலே புகுந்து உணவுகொள்ளத் தொடங்கும் யானையைப்போல அவனும் வாழமாட்டாதவனுக ஆவான்; அவன் நாடும் வளங்குன்றி கெடும்" என்பதே பிசிராந்தையார் கூறிய அறிவுரையாகும். அவ்வறிவுரையைக் கேட்ட அரசன் தன்னைத் திருத்திக்கொண்டு, நெறியோடு வரி வசூலிக்கத் தொடங்கினுன் என்று கூறுவார்கள்.

வெள்ளைக்கார ஏகாதிபத்திய சர்க்காரில் கூட போடாத அளவு வரியை, இன்றைய, காங்கிரஸ் சர்க்கார் புதுப்புது வரியாகப் போட்டிருப்பதோடு, ஏற்கனவே போடப்பட்டிருந்த வரிகளையும் வரைமுறையின்றி உயர்த்தி, மக்கள் வரிப் பளுவில் அமிழ்ந்து சாகும்படியாகச் செய்திருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். பிசிராந்தையாரின் அறிவுரை இன்றைய ஆளவந்தார்க்கு எல்லா வகையிலும் அறிவுறுத்தப்படவேண்டியதொன்ருகவே இருப்பதை உணரலாம்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன் என்ற பாண்டிய மன்னனை, மதுரை மருதனிள நாகனுர் என்ற புலவர் சென்று கண்டபொழுது அவனுக்குச் சில அறிவுரைகள் கூறுகிருர். "வேந்தே! உன்னுடைய ஆட்சியின் வெற்றி, வலிமிகுந்த நான்கு வகைப் படைகளிடத்தே அமைந்திருக்கவில்லை; நன்கு ஆராய்ந்து அறிந்து செலுத்தும் அறநெறியிலேயே அமைந்திருக்கிறது! இவர் நம்மைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, உன்னைச் சேர்ந்தவர்கள் செய்யும் கொடுந்தொழில் பொறுத்துக்கொண்டு, அதன்மூலம் உன்னுடைய செங்கோலை வளையும்படி செய்யாதே! இவர் நமக்கு எதிரிகள் என்று சொல்லி, உன்னுடைய மாற்ருரின் நல்ல பண்புகளையும், நல்ல செய்கைகளையும் புறக்கணிக்காதே! ஞாயிற்றைப் போன்று சுட்டெரிக்கும் தன்மையையுடைய வீரத்தையும், திங்களைப் போன்று குளிர்ந்த தன்மையையுடைய மென்மையையும், மழையைப் போன்று வரையாது வழங்கும் தன்மையையுடைய வண்மையையும் நீ பெறுவாயாக! உன்னுடைய நாட்டில் இல்லாதோர் இல்லையாகும்படியாக நீ நல்லாட்சி நடத்துவாயாக!" விருப்பு வெறுப்பு அற்று நடுநிலை நின்று நீதியோடு ஆட்சி புரிய வேண்டிய அவசியத்தையும், ஏழை எளியவர் இல்லாதபடி எல்லோரும் வளமாக வாழும் வகையில் ஆட்சி புரியவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துவது எக்காலத்துக்கும் பொருந்துவதொன்ருக அமைந்திருக்கிறது.

இவ்வாருக ஆளவந்தார்க்கு அறிவுரை கூறி, அவர்களைத் திருத்தும் பண்பு பண்டைக்காலத் தமிழ்ப் புலவர்களிடம் நன்கு அமைந்திருந்தமையும், அந்த அறிவுரைகள் அக்காலத்துக்கு மட்டுமல்லாமல் வருங்காலம் பலவற்றிற்கும் பொருந்துவனவாக அமைந்திருக்கும் பெற்றியும் படித்து அறியற்பாலனவாக இருக்கின்றன.

நாட்டின் பல்வேறு துறைகளிலும் திகழும் அறிஞர்கள், அவ்வப்போது ஆளவந்தார்க்கு அறிவுரை கூறும் உரிமையைப் பெறுவதும், ஆளவந்தார்கள் அவ்வறிவுரைகளைக் கேட்டு அவற்றின்படி நடக்க முன்வருவதும் ஆன நிலைமைகள் ஏற்பட்டால்தான் நாட்டில் நல்லாட்சி நிலவ முடியும் ஆளவந்தார்க்கும்—ஆளப்பட்டார்க்கும் உள்ள தொடர்பு உறுதியானதாகவும்—உயர்வானதாகவும்—உபயோகமானதாகவும் இருக்க முடியும் — அந்த நிலை இருந்தது ஒரு சில காலங்களில் — அப்பொழுது நாடு நன்ருக இருந்திருக்கிறது! இப்பொழுது அந்நிலை இல்லை, ஆகவே நாடு நலிந்து கிடக்கிறது!

அறிவுணர்ச்சி அல்ல ஆட்சி பீடத்தில் இன்று ஏறியிருப்பது; பல்வேறு வகையில் அமைந்த ஆணவ ஆதிக்க வெறியுணர்ச்சியே கொலு வீற்றிருக்கிறது! எங்ஙனம் வெறியுணர்ச்சி அறிவுணர்ச்சியை மதிக்கும்! எனவேதான் இன்றைய ஆளவந்தார்க்கு அறிஞர்கள் பலரும் கூறும் அறிவுரைகளெல்லாம், செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக மாறிவிடுகின்றன!

"வைரிகள் வாரிசாயினர்"

—[கே. ஏ. மதியழகன் பி. ஏ.,]—

23—4—1919-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்திலே தனது அழியாத அவமானச் சின்னத்தைப் பொறித்துக் கொண்ட நாள் இந்த தினம். இரத்த வெறி கொண்டலைந்த அடக்கு முறை கட்டவிழ்க்கப்பட்டு கோர நர்த்தனம் புரிந்த தினம். இதே நாள் தான் இந்திய விடுதலை இயக்கத்திற்கு புது முறுக்கும் வீறு கொண்ட எழுச்சியும் ஏற்படுத்திய தினம்.

ஒரு ரவுண்டு, இரு ரவுண்டுகள் அல்ல, 160--ரவுண்டுகள் சுட்டனர். துப்பாக்கிகளிலேயிருந்து மருந்து காலியாகும் வரை குண்டு மாரி பொழியப்பட்டது. கொலைகாரர்கள்மீதல்ல, கொள்ளையிடவந்தவர்மீதல்ல, குழப்பும் செய்ய நினைத்தோர்மீதுமல்ல. பொதுக் கூட்டம் கூடியிருந்தோர் மீது. ஏதேச்சாதிகாரம் இந்த மண்ணிலே கூடாது, அதை எதிர்த்தே தீரவேண்டும் என்ற எழுச்சிக் குரல் ஒலித்தோர் மீது மிருகத்தனமான திருவிளையாடல் நடத்தப்பட்டது. கோவெனக் கதறிய தாய்மார்கள், அவர்கள் கையிலே பச்சிளங் குழந்தைகள், பக்கத்திலே பாலகர்கள். அத்தனை பேரும்தான் அங்கே குழுமியிருந்தனர். வெடிகுண்டுகளின் சப்தம் அந்த வெறியர்களுக்குக் கேட்டதே தவிர அவர்களின் அழுகுரல் அவர்கள் செவியிலே ஏறவில்லை. நால்புறமும் மதில் சூழ்ந்த பூந்தோட்டம் அதன் நடுவே மக்கள் பொதுக் கூட்டம், ஆயுதந்தாங்கிய பட்டாளம் அழிவு வேலையை ஆத்திரத்துடன் செய்து கொண்டிருந்தது. 379-பேர் கொல்லப்பட்டனர். பிணமாகக் கீழே சாய்ந்தனா. 1200-பேர் படுகாயமடைந்தனர். நடந்த இடம் பஞ்சாப் பகுதியிலேயுள்ள அமிர்தசரசிலே ஜாலியன் வாலாபாக் மண்ணிலே நிரபராதிகள் சிந்திய இரத்தம் சேற்றிலே குழைந்தது. இந்த அக்ரமத்தைச் செய்தவன் ஜெனரல் டையர் என்பவன்! வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் சுதந்தர வாழ்வு கேட்ட மக்களுக்கு அளித்த பரிசு விடுதலையல்ல வெட்ககரமான, வேதனை நிறைந்த அடக்குமுறைச் சட்டம். ஆம்! ரௌலத் சட்டம் (Rowlatt Act) என்ற அநாகரிகம் என்பது மட்டுமல்ல மிகமிக அருவெறுப்பு நிறைந்த சட்டம். "எங்கள் நாட்டை ஏய்த்து வாழும் எத்தனே! எவ்வளவு நாளைக்கு எங்களுக்கு இந்த இழிவும் பழியும்! சொந்த நாட்டுக்காரர்கள் நாங்கள். அங்கு சோற்றுக்கும் வழியற்று சொரணை கெட்டவர்கள் ஆக்கப்பட்டுள்ளோமே! சுயநலக் காரனே, எங்கள் சொத்தைச் சுரண்டி சொர்ணமயமான வாழ்வு மாளிகை அமைத்திருக்கிறாயே! இந்த சூதுக் கோட்டை தூளாக்கப்படவேண்டாமா, எத்தனை நாளைக்கு நாங்கள் அடிமை விலங்குகளை சுமந்து கொண்டு, மானம் மரியாதையின்றி அழுந்திச் சாவது" என்று ஏகாதிபத்தியத்தை நோக்கி உரிமைக் குரல் எழுப்பினர். ஏகாதிபத்தியம் தந்த பரிசுதான் ரௌலத் சட்டம்.

உரிமை வாழ்வு கேட்பது தவறு என்பது மட்டுமல்ல. அதை உரத்த குரலிலே கூறுபவனை சிறையிலே போடு என்பதுதான் ரௌலத் சட்டத்தின் சாரம். யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், விசாரணையின்றி சிறைச்சாலையிலே தள்ளலாம்—இதுதான் ரௌலத் சட்டம், இவ்வளவு கடுமையான சட்டத்தை நடத்த வேண்டிய அளவுக்கு நாட்டுக்கு நெருக்கடி ஏதுமில்லை. யுத்தமும் முடிந்திருந்தது. உள்நாட்டிலும் பிரளயம் நடக்கிற அளவிற்கு 'பூகம்பம்' ஒன்றுமில்லை. ஆனாலும் வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் ரௌலத் சட்டத்தை நீட்டி, நாட்டுத் தலைவர்களை கூண்டிலே அடைக்கும் சதித் திட்டத்திற்கு ஆரம்ப விழா நடத்தியது. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் இருந்தது வெள்ளைக்கார அரசாங்கத்தின் நடவடிக்கை கோபமும் கொதிப்பும் மக்கள் உள்ளத்திலே பெருக்கியது, எவ்வளவுஆணவம், மமதை, திமிர் இருக்கவேண்டும். எங்கோ இருந்து வந்தவன் இங்கு கொடிகட்டி ஆள்கிறான் நம்மைப் பார்த்து—நாட்டுக்குச் சொந்தக் காரர்களைப் பார்த்து நாவையடக்கு என்பதா! இந்தக்கொடுமை, அக்கிரமம் அழிக்கப் பட்டாக வேண்டும் என்ற விடுதலை வேட்கை புனல் சொரிந்த கண்களிலே அனலைக் கொப்பளிக்கச் செய்தது.

1919-மார்ச் மாதம் ரௌலத் மசோதா (Rowlatt Bill)சட்டமாக்கப்பட்டது. ரௌலத் சட்டம்—ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை ஆயுதம். ரௌலத் சட்டம்—விசாரணையின்றி தலைவர்களை சிறைக்குள்ளே பிடித்துத்தள்ளி சுதந்திரத்தீயை மக்களின் உள்ளத்திலே அணைத்துவிட அரசாங்கம் செய்யும் மாபெரும் சதி.

இப்படிப்பட்ட கருத்துக்கள் நாடெங்கும் பரவின. ரௌலத் சட்டத்திற்கு ஏற்பட்ட கண்டனமாரி கொஞ்சநஞ்ச மல்ல. எதிர்ப்பு மலையென வளர்ந்தது. கண்டவரெல்லாம் காரியுமிழ்ந்தனர். 1919-மார்ச் 6-ந்தேதி கண்டன தினமாக ரௌலத் சட்டத்தை எதிர்க்க வேண்டுமென காந்தியார் வேண்டுகோள் ஒன்று விடுத்தார். நாடெங்கும் ஹர்தால் அனுசரிக்கப் பட்டது. இந்திய விடுதலை இயக்க வரலாற்றிலே அதுவரையிலே அவ்வளவு மக்கள் பங்கு கொண்டு நடத்திய தினம் வேறெதுவுமில்லை. அடக்குமுறை சர்க்காரின்மீது மக்கள் ஆத்திரம் பொங்கி வழிந்தது. அதன் சிகரம்தான் ஜாலியன்வாலாபாக் சம்பவம்.

ஜாலியன் வாலாபாக்கிலே வெடித்தகுண்டுகள் ஏகாதிபத்தியத்தின்மீது சுடப்பட்ட குண்டுகள் தான் என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் உணரத்தான் இல்லை. ஜாலியன் வாலாபாக்கிலே சாதாரண மக்கள் சிந்திய இரத்தம் வெள்ளைக்கார வம்சத்திற்கே — மாறாத கறையை — பழியை — துடைக்க முடியாத மாசை ஏற்படுத்தி விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் இல்லை.

அடிமைப்பட்டிருந்த காலிலே, அன்னியன் ஆட்சியிலே சிந்தனை சுதந்தரம் இல்லை, எழுத்து சுதந்

தரம் இல்லை, பேச்சுசுதந்தரம் இல்லை, கூட்டம் கூடும் உரிமையில்லை, பிரஜா உரிமை பறிக்கப்படுகிறது. இந்த உரிமைகளெல்லாம் பெற்று வாழ சுதந்தரத்தாயகம் தேவை. அதிலே நமக்கென்று ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும். நாகரிக நாடுகளிலே போற்றப்படும் 'அடிப்படை உரிமைகள்' அரசியலமைப்பிலே இடம் பெற வைப்போம் என்று பேசினர். எழுதினர். மனதாரவும் நம்பினர், நாட்டை ஆண்ட வெளிநாட்டான் விடுதலை இயக்கத்தை நடத்தியவரிடம் நாடாளும் பொறுப்பை ஒப்புவித்துச் சென்றான். அரசியல் நிர்ணயசபை கூட்டினர். 2-வருடங்கள் 11-மாதம் 18-நாட்கள் வேலைசெய்து இந்தியாவிற்கு புதியதோர் 'அரசியலமைப்பை'த் தீட்டித் தந்தனர். உலகத்திலே எங்கும் இல்லாத அவ்வளவு பெரிய அரசியல் சட்டச் சுவடி அது. அதிலே மூன்றாவது பகுதியிலே "அடிப்படை உரிமைகள்" என்று மகுடமிட்டு அலங்காரமாக பல உரிமைகள் வரையப்பட்டுள்ளன வற்றை ஆராய்வதற்கு முன்பு அடிப்படை உரிமைகள் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜீவாதார உரிமைகள் — அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) பிரஜா உரிமை என்றெல்லாம் பேசப் படுகிறதே, அத்தகைய உரிமைகள் என்ன என்பதைப்பற்றி நாட்டு மக்களுக்குத்தெரிவதுமில்லை. தெரிவிக்கக்கடமைப்பட்டவர்களும் தெரிவிப்பதில்லை. எல்லா ஜனநாயக அரசியலமைப்பிலும் சிலஉரிமைகள் அடிப்படை உரிமைகள் என்று குறிப்பிடப் படுகின்றன. அப்படிக் குறிப்பிடப் படுவதற்குக் காரணமே தனிமனிதன் முழுத்தன்மை அடைவதற்கு அவை முக்கியமானவை என்று அர்த்தம். உயிர் வாழ்வதற்குக் காற்று எவ்வள்வு அவசியமோ அவ்வளவு அவசியம் அடிப்படை உரிமைகள், மனிதன் தனது சுதந்தர வாழ்க்கையை நடத்திச் செல்ல. அவை இல்லா விட்டால் விலங்கிற்கும் மனிதனுக்கும்வித்தியாசமில்லை. அந்த உரிமைகள் இல்லையேல் அவனது அறிவும் ஆற்றலும் கருகி விடுவது மட்டுமல்ல அவனுள்ளே தேங்கிக் கிடக்கும் சக்திகளை வளர விடாமல் 'தேய்பிறை' ஆக்கப் பட்டு விடுகிறது. எனவேதான் எல்லா மனிதனும்—அவன் மெஜாரிட்டி கட்சிக்காரனானாலும்—மைனாரிட்டிக் கட்சிக்காரனானாலும் — இந்த உரிமைகளை அனுபவிக்க வாய்ப்பும் வசதியும் இருக்க வேண்டும் என்று அகில முழுதும் நம்புகிறது. ஜனநாயக அரசாங்கம் என்றால் மெஜாரிட்டிக்காரர் அரசாங்கத்தை அமைப்பது என்பதுதான் பொருள். ஆனால் அடிப்படை உரிமைகள் என்பது ஆளும் வாய்ப்பைப் பெற்ற மெஜாரிட்டியார் மைனாரிட்டி மக்களுக்கு மறுக்கக் கூடாத உரிமைகளாகும். எனவேதான் மெஜாரிட்டியார் எங்கு தவறி விடுகின்றனரோ, இந்த தீது நிகழக் கூடாதே என்ற காரணத்திற்காக அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவமும் புனிதத் தன்மையும் கற்பிக்கப்பட்டு நாட்டின் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படுவது வழக்கம்.

எல்லா நாட்டு அரசியலமைப்புகளும் சில அடிப்படை உரிமைகளுக்கு உத்திரவாதமளிக்கிறது.

பிற நாடுகளில் எழுத்து சுதந்தரம், பேச்சுசுதந்தரம் போன்றவை கண்ணென மதிக்கப் பட்டு வருகிறது. இங்கும் பேச்சு சுதந்தரம், எழுத்து சுதந்தரம் ஆகியவை ஒப்புக்குச் சேர்க்கப்பட்டு இருந்தன. அவைகளையும் பறிக்கும் வகையியே நாலுமாதங்களுக்கு முன் திருத்தம் நிறைவேற்றினார்கள். இன்றைய தினம் எழுத்தாளனின் பேனா அவனைக்கொல்லும் கூர்வாளாக்கப்பட்டிருக்கிறது. பேச்சாளன் நா, அவனை சாகடிக்கும் நஞ்சு தடவிய கத்தியாக்கப் பட்டிருக்கிறது. எந்த நேரு 1936-ம் ஆண்டிலே பிரஜா உரிமை சங்கத் தலைவரோ அதே நேருவே 1951-ம் ஆண்டு அதனைப்ப‍றிக்கும் அழிவுக்காரர் ஆகியிருக்கிறார்.

இந்த கண்ணியவான்கள் ஆளும் புண்ணிய நாட்டில் முதன் முதல் திருத்தம் கொண்டு வந்தது பத்திரிகை சுதந்தரத்தை ஒடுக்குவதற்கு எவ்வளவு வேதனையான விசித்திரம்.

இவைகளுக்கெல்லாம்சிகரம்வைத்தது போல் இருப்பது தடுப்புக் காவல்சட்டம் என்பது (Preventive Detention Act) யாரைவேண்டுமானாலும் விசாரணையின்றி சிறையிலே தள்ளலாம் என்ற இந்த கொடிய சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடம் பெற்றிருக்கிறது. உலகத்திலே இந்த நாட்டு அரசியல் சட்டத்திலும் தடுப்புக் காவல் சட்டம் இடம் பெறக்காணோம். யுத்த காலத்திலோ, நெருக்கடி நேரங்களிலோ அவசரச் சட்டங்களாக உபயோகிப்பது உண்டு. ஆனால் நம்முடைய அரசியல் அமைப்பின் புதிய அம்சமே இந்த தடுப்புக் காவல் சட்டம் தான்!

அதுவும் யார் ரௌலத் சட்டத்தை நையாண்டி செய்தனரோ, அவர்கள் தடுப்புக்காவல்சட்டத்தை தீட்டியுள்ளனர்.

யார் இப்படிப் பட்ட சட்டங்கள் ஏகாதிபத்தியத்தியத்தின் உளுத்துப்போன ஆயுதங்கள் என்று முழக்கமிட்டனரோ அவர்கள் தீட்டியுள்ளனர்.

ரௌலத் சட்டத்தின் மூலம் ஒருவனை கைது செய்து சிறைக்குள்ளே தள்ள வேண்டுமானால் ஐகோர்ட் நீதிபதி அந்தஸ்து உள்ள ஒருவரின் அத்தாட்சி வேண்டும்.

தடுப்புக்காவல் சட்டமோ சாதாரண சப்டிவிஷனல் மாஜிட்ரேட்டுக்கு யாரையும் காரணமின்றி சிறையிலே பிடித்துத் தள்ள உரிமையளிக்கிறது. நீதி மன்றங்கள் தலையிட முடியாஉரிமை ஆட்சிநிர்வாகத்திலே உள்ளவருக்கு. நாடு காடாகிக் கொண்டுவருகிறது. ரௌலத்சட்டம் சிரிக்கிறது, கைகொட்டி நகைக்கிறது. நாட்டிலே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள், படுகாயமடைந்தோர், சிறைச் சாலையிலே தள்ளப் பட்டிருப்போர் ஆகியோரைப் பார்த்து. அந்த கேலிச் சிரிப்பிலே "வைரிகள் வாரிசாயினர்" என்ற வார்த்தைகள் ஒலிக்கின்றன. வதைக்கப் பட்ட மக்களோ வாய் மூடிக் கிடக்கின்றனர்.

———

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

Edited Printed & Published by C. N. Annadurai, M. A. at 95, Tirukkachinambi Street, Kanchipuram.

R.M. 4642.

K.R. ராமசாமி

நடிக்கும்



மனோகர் - பரிமளா புரொடக்ஷன்ஸ்

சொர்க்கவாசல்

கதை, வசனம். ★ அண்ணாதுரை...

பாடல்கள். உடுமலை நாராயண கவி...

டைரக்ஷன். காசிலிங்கம்.